

## கமெண்ட் கந்தர்...

'பாம்பும் சாகாமல் தடிக்கும் நோகாமல்' என்பது போலத்தான் இருக்குது ரணிலின் பட்ஜெட்..


Follow us:

# தமிழன்

THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ்: 104 சுபகிருது வருடம், ஐப்பசி மாதம் 29ஆம் திகதி செவ்வாய்க்கிழமை
(15.11.2022) ஹிஜ்ரி 1444, ரபிஉல் ஆகிர் - 20, 0115 886187 - பக்கங்கள் 12

விலை ரூ.60




## உஷ்

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபயவை ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதியாக நியமிக்க ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.

அப்படி அவர் நியமிக்கப்பட்டால் அந்த இராஜதந்திர அந்தஸ்தை வைத்து அவர் அமெரிக்கா சென்று சிலகாலம் தங்கியிருக்கலாமென சிலர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஆனால், ரணில் இதற்கு பதில் எதனையும் இதுவரை கூறவில்லையாம்.

# நிவாரணமில்லா பட்ஜெட்!



நா. தினுஷா

எதிர்வரும் 2023ஆம் நிதியாண்டுக்கான வரவு- செலவுத்திட்டம் நிதி அமைச்சர் என்றவகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் நாடாளுமன்றத்தில் நேற்று (14) பிற்பகல் சமர்ப்பிக்கப்பட்டது.

பொருளாதார வீழ்ச்சியிலிருந்து மீண்டெழும் வகையில் புதிய மாற்றத்தை ஏற்படுத்தும் நோக்கில் வரவு –செலவுத்திட்டம் தயாரிக்கப்பட்டதாக இதன்போது குறிப்பிட்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அதன் முன்மொழிவுகளை சபையில் அறிவித்தார். மக்கள் நிவாரணங்களைப் பெற்றுக்கொள்வதற்கே பழக்கப் பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டதுடன், நிவாரணம் வழங்குவதால் சுபீட்சம் ஏற்படாது என்றும் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வரவு – செலவுத்திட்ட உரையின் முழு வடிவம் வருமாறு;

09 பக்கம்




**தனிநபர் வருமானத்தை அதிகரிக்க புதிய பொருளாதார முறைமை**

**இலங்கை வரலாறை ஆய்வு செய்ய நிறுவனம் ஸ்தாபிப்பு**

**பொருளாதார மாற்றத்துக்கு புதிய சட்டங்கள் அறிமுகம்**

**ஏற்றுமதிக்காக கஞ்சா உற்பத்தியை ஊக்குவிக்க விசேட நிபுணர் குழு**

**புதிய பொருளாதார வலயங்களை உருவாக்க ரூ. 300 மில்லியன்**

**ஏற்றுமதி முதலீட்டு ஊக்குவிப்புக்கு ரூ.100 மில்லியனில் புதிய நிறுவனம்**

**அரச சேவையில் இலத்திரனியல் பணப்பரிமாற்றம்**

**கறுவா தொழிற்றுறைக்கு புதிய திணைக்களம்**

**பீடிக்கு இரண்டு ரூபா வரி**

- ★ ஆயிரம் பாடசாலைகளுக்கு இலவச இணைய வசதி
- ★ கடல்சார் சுற்றுலாத்துறையை ஊக்குவிக்க நடவடிக்கை
- ★ சிறுவர் ஊட்டச்சத்தை வலுவூட்ட ரூ. 500 மில்லியன் ஒதுக்கீடு
- ★ வைத்தியர்களுக்கு உள்நாட்டில் பட்டப்படிப்புக்கு ரூ. 60 மில்லியன் ஒதுக்கீடு
- ★ செயலாற்றுகை கொண்ட 75 மாணவர்களுக்கு வெளிநாடுகளில் புலமைப்பரிசில்
- ★ இலங்கை வரலாற்றை ஆய்வு செய்ய நிறுவனம் ஸ்தாபிப்பு
- ★ சிறைக்கைதிகள் சுகாதார வசதிக்கு ரூ. 300 மில்லியன் ஒதுக்கீடு
- ★ கடவுச்சீட்டு, விசா கட்டணங்களில் அதிகரிப்பு

**டிஜிட்டல் தொழில்நுட்பத் துறைக்கு விசேட நிபுணர் குழு**

**முதலீட்டு ஊக்குவிப்புக்கு ரூ.200 மில்லியன் ஒதுக்கீடு**

## வியட்நாமில் தஞ்சமடைந்தோருக்கு மனிதாபிமான உதவி வழங்கப்படும்

**புலம்பெயர்ந்தோருக்கான சர்வதேச அமைப்பு நடவடிக்கை**

வியட்நாம் கடற்பகுதியில் மீட்கப்பட்ட 303 இலங்கை குடியேற்றவாசிகளுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்கவுள்ளதாக புலம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பு (ஐஓஎம்) அறிக்கையொன்றில் அறிவித்துள்ளது.

ஹனோயிலுள்ள இலங்கைத் தூதரகம் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க, இந்த 303 இலங்கையர்களுக்கும்

02 பக்கம்

## பெரமுனவின் சுயாதீனக் குழு சஜித்துடன் கரம் கோர்த்தது

பொதுஜன பெரமுனவிலிருந்து விலகி சுயாதீனமாக இயங்கிய குழுவொன்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியுடன் நேற்று (14) கூட்டணி அமைத்தது.

இதன்பிரகாரம் அனுர பிரியதர்ஷன யாப்பா, சந்திம வீரக்கொடி, சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே,...

02 பக்கம்

## துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தி 17 சிறுவர்கள் படுகொலை

**இரு வருடங்களில் நடந்துள்ள வன்மம்**

நா. தினுஷா

நாட்டில் கடந்த இரு வருடங்களில் 17 சிறுவர்கள் உடல் ரீதியான துஷ்பிரயோகம் மற்றும் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டு, கொலை செய்யப்பட்டுள்ளதாக...

02 பக்கம்



## ஹிருணிகா உள்ளிட்ட 15 பேர் நேற்று கைது

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமசந்திர பல்வேறு குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் கறுவா தோட்ட பொலிஸாரினால் நேற்று (14) கைதுசெய்யப்பட்டுள்ளார். முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா உள்ளிட்ட 15 பேரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

02 பக்கம்



இந்தோனேசியா பாலியில் நடைபெறும் ஜீ20 மாநாட்டின்போது அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், சீன ஜனாதிபதி ஸி ஜின்பிங் ஆகியோர் சந்தித்து கலந்துரையாடினர்.

# ஜனாதிபதி ரணிலின் பட்ஜெட் எதிர்பார்ப்புகளை சிதறடித்துவிட்டது

## மனோ எம்.பி. விசனம்



நிதியமைச்சர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வரவு-செலவுத்திட்ட உரையில் காணப்படுகின்ற தோட்ட தொழிலாளர்கள் மற்றும் கொழும்பு மாநகர பாமர மக்கள் தொடர்பிலான அலட்சியப்போக்கு எம்மை ஏமாற்றமடையச் செய்துள்ளது - என கொழும்பு மாவட்ட எம்.பி., தமிழ் முற்போக்கு கூட்டணித் தலைவர் மனோ கணேசன் கூறியுள்ளார்.

நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட வரவு-செலவுத்திட்டம் தொடர்பில் தமிழ் முற்போக்கு கூட்டணித் தலைவர் மனோ கணேசன் மேலும் கூறியதாவது,

உலக வங்கி, ஐ.நா. நிறுவனமான உலக உணவுத் திட்டம் மற்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் ஆகியவற்றால் உணவின்மை மற்றும் வறுமை ஆகிய விடயங்களில் இலங்கையிலேயே மிகவும் மோசமாக பாதிக்கப்பட்ட - பின்தங்கிய பிரிவினராக பெருந்தோட்ட மக்கள் மற்றும் மாநகர பாமர மக்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்த பின்தங்கிய பிரிவினருக்கான விசேட ஒதுக்கீட்டுத் திட்டங்களை ஜனாதிபதி அறிவிப்பாரென எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அது நடைபெறவில்லை. உடனடியாக நிவாரணத் திட்டங்கள் இல்லாவிட்டாலும் கூட, இம்மக்களின் இக்குறைபாடுகள் பற்றிதான் அறிந்துள்ளேன் என்பதை ஜனாதிபதி தனது உரையில் குறிப்பிட்டு கூறியிருக்க வேண்டும். அப்படியாயின், இந்த நலிவடைந்த மக்களை அது ஓரளவு சாந்தப்படுத்தி இருக்கும். தமது பிரச்சினைகள் பற்றி ஆள்கின்ற அரசு அறிந்துவைத்துள்ளது என்பதை அறிந்து மக்கள் சற்று நம்பிக்கை அடைந்திருப்பார்கள். தீர்வுகள் தாமதமாகி வரும் என ஆறுதல் அடைந்திருப்பார்கள்.

ஆனால், உயிருள்ள உழைக்கும் மக்களை மறந்துவிட்டு, தோட்டங்களிலுள்ள காணிகளை பற்றி பேசி, பயிரிடப்படாத காணிகளை, புதிய முதலீட்டாளர்களுக்கு பகிர்ந்து கொடுக்கப் போவதாக நிதியமைச்சர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது வரவு-செலவுத்திட்ட உரையில் கூறியுள்ளார்.

நமது மக்களுக்கு பயிரிடப்படாத காணிகள் தருவதாக எனக்கு நாடாளுமன்றத்தில் தந்த வாக்குறுதியை அவர் மறந்துவிட்டார். அப்போது அவர் பிரதமர். இப்போது ஜனாதிபதி. ஆனால், நாம் மறக்கவில்லை. நுவரெலியா முதல் கொழும்பு - அவிசாவளை வரை துன்பப்படும் நமது மக்களை இந்த அலட்சியம் கொல்லாமல் கொல்கிறது - எனத் தெரிவித்துள்ளார்.

# காலி மாவட்டத்தில் நீர் விநியோகத் தடை

(பீ.எம்.முக்தார்)

காலி, ஹப்புகல நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் அத்தியாவசிய திருத்தப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளதால் பல்வேறு பகுதிகளில் இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 6 மணிமுதல் நாளை 16ஆம் திகதி புதன்கிழமை நள்ளிரவு 12 மணிவரையிலான 18 மணிநேர நீர் விநியோகத்தடை அமுலாகுமென தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை அறிவித்துள்ளது.

அஹங்கம, கொக்கல, ஹபாராதுவ, அக்மீமன, வோப்பே-போத்தல, ஹப்புகல ஆகிய பகுதிகளில் நீர் விநியோகம் தடைப்படுவதுடன், ரத்கம மற்றும் வூஸ்ஸ ஆகிய பகுதிகளில் குறைந்த அழுத்தத்தில் நீர் விநியோகம் நடைபெறும்.

இதனால் பாவனையாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை கவலை தெரிவிப்பதோடு, நீரை முன்கூட்டியே சேமித்து வைத்து சிக்கனமாக பயன்படுத்துமாறு கேட்டுக்கொண்டுள்ளது. இதுபற்றிய மேலதிக விபரங்களுக்கு 1939 என்ற இலக்கத்துடன் தொடர்புகொள்ள முடியுமென நீர்வழங்கல் வடிகலமைப்புச் சபை அறிவித்துள்ளது.

# புகையிரத பிரயாணச் சீட்டுக்கு கடும் தட்டுப்பாடு

நாட்டிலுள்ள அநேகமான பிரதான புகையிரத நிலையங்கள் மற்றும் உப புகையிரத நிலையங்களில் பிரயாணச் சீட்டுக்கு கடும் தட்டுப்பாடு நிலவுவதாக புகையிரத நிலைய அதிபர்கள் சங்கத்தின் பிரதான செயலாளர் கசுன் சாமர ஜயசேகர தெரிவித்துள்ளார்.

சிலாபம் மற்றும் லுணுவில ஆகிய புகையிரத நிலையங்களில் 20 ரூபா பிரயாணச் சீட்டு இன்மையால், பயணம் செய்யும் சகல பயணிகளுக்கும் 40 ரூபா பிரயாணச் சீட்டை இரண்டாக வெட்டி பிரயாணிகள் இருவருக்கு வழங்கும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

பயணிகள் செல்லும் புகையிரத நிலைங்களுக்கு சம்பந்தப்பட்ட பிரயாணச் சீட்டுக்குப் பதிலாக எவ்வித அனுமதியுமின்றி வேறு புகையிரத நிலையங்களுக்குரிய பிரயாணச் சீட்டை விநியோகிக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலை புகையிரத நிலைய அதிபர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

அதிகளவில் பிரயாணச் சீட்டுகள் விற்பனையாகும் கொழும்பு கோட்டை, மருதானை, கம்பஹா, மொரட்டுவை, பாணந்துறை, வெயாங்கொட மற்றும் கம்பஹா போன்ற புகையிரத நிலையங்களைச் சேர்ந்த அதிகாரிகள் பயணச்சீட்டு இன்மையினால் பெரும் இன்னல்களை எதிர்கொண்டுள்ளதாக அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

# பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பொலிஸ் மா அதிபர் ஆகியோருக்கு மனித உரிமைகள் ஆணைக்குழு அழைப்பு

பொலிஸ் அதிகாரிகளினால் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டுவரும் மனித உரிமைகள் மீறும் வகையிலான செயற்பாடுகள் தொடர்பில் வாக்குமூலம் பதிவுசெய்வதற்காக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் பொலிஸ் மா அதிபருக்கு மனித உரிமைகள் ஆணைக்குழுவில் ஆஜராகுமாறு அந்த ஆணைக்குழு அழைப்பு விடுத்துள்ளது.

இம்மாதம் 22ஆம் திகதி காலை 10 மணிக்கு ஆஜராகுமாறு அழைப்பு விடுத்துள்ளதாகவும் அந்த ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

பொலிஸ் அதிகாரிகளின் தன்னிச்சையான செயற்பாடுகளினால் மனித உரிமைகள் தொடர்ச்சியாகமீறப்படும் நிலை உருவாகியுள்ளது. அதனால், இந்த நிலைமை ஜனநாயக சமூகத்தின் நிலைப்புக்கும் சட்டத்தின் ஆட்சிக்கும் கடும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழு மேலும் குறிப்பிட்டுள்ளது.

சட்டத்தைப் பாதுகாப்பதற்கு கடமைப்பட்டுள்ள பொலிஸ் அதிகாரிகளின் செயற்பாடுகளை ஒருபோதும் அனுமதிக்க முடியாது என்றும் அந்த ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

இந்த நிலைமையை தவிர்ததுக்கொள்வதற்காக முன்னெடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து இதன்போது கலந்துரையாட எதிர்பார்த்துள்ளதாகவும் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

# மஸ்கெலியா பிரதேச சபை

## பட்ஜெட் நிறைவேறியது

(மஸ்கெலியா)

மஸ்கெலியா பிரதேச சபையின் 2023 வரவு-செலவுத்திட்டம் 9 மேலதிக வாக்குகளால் நிறைவேறியது. மஸ்கெலியா பிரதேச சபையின் வருடாந்த வரவு-செலவுத் திட்டம் நேற்று சபைக்கு கொண்டுவரப்பட்டது.

வரவு-செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக 12 வாக்குகளும் எதிராக 3 வாக்குகளும் அளிக்கப்பட்டு மேலதிக 9 வாக்குகளால் 2023ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டம் நிறைவேற்றப்பட்டது.

ஐக்கிய தேசிய கட்சியில் தொழிலாளர் தேசிய சங்கத்தின் மூலம் போட்டியிட்ட புரவுன்லோ வட்டார உறுப்பினர், புரவுன்சீக் வட்டார உறுப்பினர், ஸ்டோக்ஹோம் வட்டார உறுப்பினர் மூன்று பேரும் வரவு-செலவுத் திட்டத்தை எதிர்த்து வாக்களித்தனர்.

# மின்னல் தாக்கி ஒருவர் உயிரிழப்பு

## அநுராதபுரத்தில் சம்பவம்

(அநுராதபுரம் செய்தியாளர் )

அநுராதபுரம், கல்கமுவ, நவகத்தேகம கிரிமெட்டியாவ பகுதியில் மின்னல் தாக்கி ஒருவர் பரிதாபகரமான முறையில் உயிரிழந்துள்ளதாக நவகத்தேகம பொலிஸார் தெரிவித்தனர்.

மின்னல் தாக்குதலுக்குள்ளான மேலும் இரு பெண்கள் கல்கமுவ மற்றும் அநுராதபுரம் வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருவதாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் குறிப்பிட்டனர். இச்சம்பவம் நேற்றுமுன்தினம் (13) கிரிமெட்டியாவ வயல் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் உயிரிழந்தவர் 39 வயதுடைய நவகத்தேகம, கிரிமெட்டியாவ பகுதியைச் சேர்ந்தவர் என்பது தெரியவந்துள்ளது.

உயிரிழந்த நபரும் அவருடைய மனைவியும் இன்னுமொரு பெண்ணும் நேற்று மாலை வயல் நிலத்தினை பண்படுத்திக்கொண்டிருக்கும்போது மின்னல் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார்கள்.

உயிரிழந்தவரின் சடலம் கல்கமுவ வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நவகத்தேகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# 2023ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டம் எந்த இலக்கும் இல்லாத வெற்றுப் பத்திரம்

## ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் விளக்கம்

அரசாங்கத்தினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள 2023ஆம் நிதியாண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் நாட்டின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு எந்தத் தீர்வும் வழங்கப்படவில்லை - என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டார தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

நாடு சந்தித்துள்ள பொருளாதாரப் பிரச்சினை, மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினை, மக்களை பாதுகாத்தல் ஆகிய விடயங்கள் தொடர்பில் இந்த வரவு-செலவுத் திட்டத்தில் எந்த யோசனையும் முன்வைக்கப்படவில்லை.

இந்த வரவு-செலவுத்திட்டம் எந்த இலக்கும் இல்லாத வெற்றுப் பத்திரமாகும்.

வரவு-செலவுத்திட்டத்துக்கு முன்பாகவே இந்த அரசாங்கம் வரி விதித்துவிட்டது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் இம்முறை சமர்ப்பிக்கப்பட்டுள்ள இந்த வரவு-செலவுத்திட்டத்தில் மக்களுக்கு எந்த நிவாரணமும் வழங்கப்படவில்லை.

அதேபோன்று, இதனூடாக விவசாயிகள், மீனவர்கள், பெருந்தோட்டத் தொழிலாளர்கள், அரச சேவையாளர்கள் என எவருக்கும் எந்தப் பலனும் கிட்டவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# விவாதம் இன்று ஆரம்பம்

2023ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாவது மதிப்பீட்டுக்கான ஆரம்ப உரையை (வரவு-செலவுத்திட்ட உரை) ஜனாதிபதியும், நிதி பொருளாதார நிலைப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சருமான ரணில் விக்கிரமசிங்க நேற்று பிற்பகல் 1.30 மணிக்கு நாடாளுமன்றத்தில் முன்வைத்தார்.

இதற்கமைய ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாவது மதிப்பீடு மீதான விவாதம் இன்று (15) ஆரம்பமாகவிருப்பதுடன், இரண்டாவது மதிப்பீடு மீதான வாக்கெடுப்பு நவம்பர் 22ஆம் திகதி பி.ப. 5.00 மணிக்கு நடத்தப்படவுள்ளது.

இரண்டாவது மதிப்பீடு மீதான விவாதம் தினமும் மு.ப. 9.30 மணிமுதல் பி.ப. 5.30 மணிவரையும் நடைபெறவிருப்பதுடன், அதன்பின்னர் பி.ப. 5.30 மணிமுதல் பி.ப. 6.00 மணிவரையான காலப் பகுதி சபை ஒத்திவைப்பு நேரத்தின்போதான கேள்வி அல்லது சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான விவாதத்துக்கு ஒதுக்கப்பட்டிருக்கும்.

இதன்பின்னர் ஒதுக்கீட்டுச் சட்டமூலம் மீதான குழுநிலை விவாதம் நவம்பர் 23ஆம் திகதி ஆரம்பிக்கவிருப்பதுடன், இது டிசம்பர் 08ஆம் திகதிவரை இடம்பெறவுள்ளது. இதன் மீதான விவாதம் மு.ப. 9.30 மணிமுதல் பி.ப. 7.00 மணிவரை நடைபெறும். இதன் மீதான வாக்கெடுப்பு டிசம்பர் 8ஆம் திகதி பி.ப. 7.00 மணிக்கு நடைபெறும்.

இதற்கமைய நவம்பர் 14ஆம் திகதிமுதல் டிசம்பர் 08ஆம் திகதிவரையான காலப் பகுதியில் ஞாயிறு மற்றும் போயா தினங்கள் தவிர, கிழமையின் ஏனைய நாட்களில் நாடாளுமன்ற அமர்வு இடம்பெறும்.

வரவு-செலவுத்திட்ட விவாதம் நடைபெறும் காலப்பகுதியில் வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்படவில்லை.

# அதிவேக நெடுஞ்சாலைகளில் ஞாயிறு முதல் பஸ்கள் இயங்காது

## கூட்டுப் போக்குவரத்து தொழிற்சங்க நிலையத்தின் தலைவர் சம்பத் ரணசிங்க

நாட்டில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (20) முதல் அனைத்து அதிவேகப் பஸ்கள் இயங்காது போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக கூட்டுப் போக்குவரத்து தொழிற்சங்கத் திணைக்களத்தின் தலைவர் சம்பத் ரணசிங்க தெரிவித்தார்.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவானது நெடுஞ்சாலை பஸ்களில் நியாயமற்ற முறையில் கேள்வி மனுக் கட்டணத்தை அறவிடுவதாகவும் அதற்கு எதிராகவே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதெனவும் ரணசிங்க குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்று (14) ஊடகவியலாளர் சந்திப்பொன்றை ஏற்பாடு செய்திருந்த ஒன்றிணைந்த போக்குவரத்து தொழிற்சங்க நிலையம், நெடுஞ்சாலைகளில் இயங்கும் அனைத்து பஸ் தொழிற்சங்கங்களுடன் இணைந்து இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படும் எனத் தெரிவித்துள்ளது.

நெடுஞ்சாலை பஸ்களிலிருந்து மாதாந்தம் இரண்டு இலட்சம் ரூபாவுக்கும் அதிகமான டெண்டர் கட்டணம் அநியாயமாக அறவிடப் படுவதாகவும், இதன் காரணமாக பஸ்களை இயக்க முடியாதெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது டெண்டர் கட்டணத்தை அறவிடாமல், நெடுஞ்சாலை கட்டணங்களிலிருந்து இருநூறு ரூபாவை குறைத்து பயணி ஒருவருக்கு இந்தச் சலுகையை வழங்குமாறு கோருவதாக ரணசிங்க மேலும் தெரிவித்தார்.

# தமிழ்க் கட்சிகள் இன்று சந்திப்பு

தமிழ்க் கட்சிகளுக்கு இடையிலான முக்கிய சந்திப்பொன்று இன்று மாலை 5.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் குறித்த சந்திப்பானது, கொழும்பிலுள்ள சம்பந்தனின் இல்லத்தில் இடம்பெறவுள்ளது.

குறித்த சந்திப்புக்கு அனைத்து தமிழ்க் கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

இதன்போது, சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வு தொடர்பில் கலந்துரையாடவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

**கொழும்பு ரோயல் கல்லூரியின் பழைய மாணவர்களின் (தமிழ் மற்றும் வெளிநாட்டு, உள்நாட்டுக் கொடையாளர்கள்) அனுசரணையில் ஒட்டுசுட்டானில் விதவைப் பெண்ணான இரத்தினம் பத்மராஜினிக்கு புதிய வீடு இராணுவத்தினால் நிர்மாணிக்கப்பட்டு முல்லைத்தீவு படைத் தலைமையக தளபதி மேஜர் ஜெனரல் சஞ்சய வனசிங்கவால் கையளிக்கப்பட்டது.**



### வியட்நாமில்..

ஐக்கிய நாடுகள் சபையின் ஆதரவுடன் இலங்கை மற்றும் வியட்நாம் அரசாங்கத்துடன் ஒருங்கிணைந்து புலம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பின் இலங்கை மற்றும் வியட்நாம் செயல்பாட்டு அலுவலகங்கள் தேவையான உதவிகளை வழங்குகின்றன.

உள்ளூர் மற்றும் சர்வதேச நியமங்கள் மற்றும் சட்டங்களுக்கிணங்க இந்த உதவி வழங்கப்படுவதாக புலம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பு வெளியிட்டுள்ள அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், இந்த 303 இலங்கைக் குடியேற்றவாசிகளுக்கு ஆதரவளிக்க முன்வந்ததை வியட்நாம் பாராட்டுவதாகவும் அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால், இந்த குடியேற்றவாசிகள் இலங்கைக்கு திரும்ப விருப்பமில்லை எனத் தெரிவித் துள்ளதோடு, இந்தப் பிரச்சினையில் தலையிடுமாறு ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகரிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக வியட்நாம் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

### பெரமுனவின்...

ஜோன் செனவிரத்ன, ஜயரத்ன ஹேரத், பிரியங்கர ஜயரத்ன ஆகிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவே இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்துகொண்டது.

நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு ஒன்றிணைந்து செயற்படுவதற்கு இவ்வாறு முன்வந்தமைக்கு நன்றி தெரிவிப்பதாகவும், எதிர்காலத்தில் மேலும் வலுவாகவும் கூட்டாகவும் செயற்படுவதற்கு இந்த ஒற்றிணைவு மிகவும் முக்கியமானது எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

நீண்டகாலமாக நடத்தப்பட்ட பல கலந்துரையாடல்களின் பிரதிபலனாக இவ்வாறு ஒன்றிணைந்துள்ளதாகவும், எதிர்காலத்தில் பலமான சக்தியாக ஐக்கிய மக்கள் கூட்டணியைக் கட்டியெழுப்புவதற்கு பங்களிப்பதாகவும் அனுர பிரியதர்ஷன யாப்பா இதன்போது தெரிவித்தார்.

### ஹிருணிகா ..

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

ஐக்கிய மகளிர் படையணியினால் ஐக்கிய நாடுகள் சபையின் காரியாலயத்தின் முன்னால் நேற்றுக் காலை முன்னெடுக்கப்பட்ட வீதி நாடகத்தில் ஈடுபட்டிருந்த மூவர் குருந்துவத்தை பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அவர்களை விடுவிக்கக்கோரி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமசந்தர உள்ளிட்ட சிலர் குருந்துவத்தை பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக அமர்ந்து ஆர்ப்பாட்டம் செய்துள்ளனர்.

இந்நிலையில், ஹிருணிக்கா உள்ளிட்டோர் தமது கடமைக்கு இடையூறு விளைவித்ததாக தெரிவித்தே இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

### துஷ்பிரயோகத்துக்கு ...

விசேட வைத்திய நிபுணர் துஷ் விக்ரமநாயக்க தெரிவித்துள்ளார்.

அநுராதபுரம், யசிபுர விக்ரமசீலா செமினிக்கு உட்பட்ட வலிசிங்க ஹரிஸ்சந்திர அறநெறி பாடசாலையின் மாணவர்கள் மற்றும் அவர்களது பெற்றோர்களுக்காக சிறுவர் உரிமை மற்றும் பொறுப்பு என்ற தலைப்பில் அண்மையில் இடம்பெற்ற விழிப்புணர்வு வேலைத்திட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளதாவது,

சிறுவர்களுக்கு எதிராக இடம்பெறும் துன்புறுத்தல்கள் மற்றும் குற்றங்களை தடுப்பதற்கு இதுவரை ஆட்சிபுரிந்த எந்தவொரு அரசாங்கத்தாலும் முடியாமல் போயுள்ளது. அதனால், சிறுவர்களை நாமே பாதுகாக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். சிறுவர் பாதுகாப்பு என்பது சமூக பொறுப்பாகும். சிறுவர்களுக்கு மாத்திரமன்றி பெற்றோர்கள் மற்றும் முதியவர்கள் உரிமைகளும் இல்லாமல் போயுள்ள நிலை எமது நாட்டில் தோற்றம் பெற்றுள்ளது.

எமது நாட்டில் கடந்த 24 மாதங்களில் மாத்திரம் 17 சிறுவர்கள் உடல் ரீதியான துன்புறுத்தல் மற்றும் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் அவர்களின் வீடுகளில் நேசிக்கும், அவர்கள் நம்பும், அவர்களை பாதுகாக்கவேண்டிய பெற்றோர், உறவினர்கள் மற்றும் அக்கம் பக்கத்தினரால் உருவாக்கப்பட்டுள்ளார்கள்.

உங்களின் குழந்தைகளை பாதுகாக்கும் பொறுப்பு அரசு அல்லது அரசு சார்ந்த நிறுவனங்களுக்கு இல்லை. அதேபோன்று உங்களின் குழந்தைகளை பாதுகாக்கும் பொறுப்பு மகாசங்கத்தினருக்கோ அல்லது வேறு ஆன்மீக தலைவர்களுக்கோ இல்லை. இவ்வாறான பொறுப்புகளை எங்களைபோன்ற சிவில் அமைப்புகளினாலும் முன்னெடுக்க முடியாது. ஆகவே, பெற்றோர்களினால் மாத்திரமே சிறுவர்களை பாதுகாக்க முடியும். இதுதொடர்பில் அரசாங்கத்தை ஏசுவதால் எந்த பயனும் இல்லை. அரச சேவைப்பிரிவை வஞ்சிப்பதாலும் பயன் கிடைக்கப்போவதில்லை.


எமது தாய்மார், தந்தைமார், அரசியல்வாதிகள், பொலிஸார், மகா சங்கத்தினர், ஏனைய சமயத் தலைவர்கள் மற்றும் ஏனைய ஊர் மக்கள் சிறுவர்கள் மீது அன்பு செலுத்தாவிட்டால் எமது நாட்டை போன்ற சீரழிந்த நாடு வேறு எதுவும் இருக்க முடியாது.

உடல் ரீதியான துன்புறுத்தல்களே சிறுவர்களின் உரிமை மற்றும் பாதுகாப்பு இல்லாமல போவதற்கு பிரதான காரணமாகும். சமூகத்தில் சிறுவர்களின் உரிமை மீறப்படும் சந்தர்ப்பங்கள் நான்கு இருக்கின்றன.

உடல் ரீதியான துன்புறுத்தல்கள், பாலியல் துஷ்பிரயோகம், மனநிலை ரீதியான துஷ்பிரயோகம் மற்றும் அவதானம் செலுத்தாமை ஆகிய காரணங்களினாலேயே இவ்வாறு சிறுவர்களின் உரிமைகள் மீறப்படுகின்றன.

# திருச்சி சிறப்பு முகாமிலுள்ள கணவர் முருகனை நேரில் சந்தித்த நளினி

## கண்ணீர் மல்க அவரிடம் நலம் விசாரிப்பு



(திருச்சி எம்.கே.ஷாகுல் ஹமீது)

திருச்சி சிறப்பு முகாமிலுள்ள தனது கணவர் முருகனை நேரில் சந்தித்த நளினி, கண்ணீர் மல்க அவரிடம் நலம் விசாரித்தார்.

அப்போது, அவரது கணவர் உள்ளிட்ட நால்வரும் முகாமில் தங்களுக்கு உரிய வசதிகள் செய்து தரப்படவில்லை என குற்றஞ்சாட்டி உண்ணாவிரதத்தில் ஈடுபட்டதாகக் கூறப்பட்டது. இதனையடுத்து திருச்சி மாவட்ட ஆட்சியர் பிரதீப் குமார் முகாமிற்கு நேரடியாக வருகை தந்து அவர்களிடம் விசாரணை மேற்கொண்டார்.

மேலும் அவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருவதாக உறுதியளித்தார்.

அப்போது மாவட்ட ஆட்சியரிடம் பேசிய நளினி, தனது மகள் லண்டனில் வசித்து வருவதாகவும், தனது கணவர் முருகனை லண்டனுக்கு அனுப்பிவைக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளார்.

அதற்கு மாவட்ட ஆட்சியர், தங்களது கோரிக்கையை எழுத்துபூர்வமாக மனுவாக தருமாறு கூறியுள்ளார். இதையடுத்து, நளினி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் சென்று ஆட்சியரிடம் நேரில் மனு அளிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

முன்னதாக சிறைவாயிலில் செய்தியாளர்களிடம் பேசிய நளினி, சிறப்பு முகாமிலுள்ள நால்வரையும் சந்தித்து பேசவுள்ளதாகவும், சிறப்பு முகாமில் முருகன் உள்ளிட்டோர் உண்ணாவிரதம் இருப்பது குறித்து தனக்கு தெரியாது என்றும் தெரிவித்தார்.

இதனிடையே திருச்சி மத்திய சிறை வளாகத்திலுள்ள சிறப்பு முகாமிலுள்ள முருகன், சாந்தன், ஜெயக்குமார், ரொபர்ட் பயஸ் ஆகியோர் சக முகாம்வாசிகளுடன் சந்தித்துப் பேச தங்களை அனுமதிக்க வேண்டும் என்று கோரி உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனைத் தொடர்ந்து அவர்களை சந்தித்துப் பேச திருச்சி மாவட்ட ஆட்சியர் பிரதீப் குமார் திங்கட்கிழமை சிறப்பு முகாமிற்குள் சென்றார். அவர்களுடன் பேசிய பின்பு அங்கிருந்து புறப்படும் முன் செய்தியாளர்களை சந்தித்தார்.

அப்போது அவர் கூறியதாவது,

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் விடுதலை செய்யப்பட்ட சாந்தன், பயஸ், ஜெயக்குமார், முருகன் ஆகியோருக்கு தேவையான அனைத்து வசதிகளும் மற்ற முகாம்வாசிகளுக்கு உள்ளதுபோல் செய்து தரப்பட்டுள்ளது. அவரவர்கள் சொந்த நாடுகளுக்கு செல்ல, அந்த நாட்டின் அனுமதி பெற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். முருகன் உள்ளிட்ட நால்வரும், தாங்கள் காலை, மாலைவேளைகளில் நடைபயிற்சி மேற்கொள்ள சிறை வளாகத்தில் வசதி ஏற்படுத்தித் தர கோரிக்கை விடுத்துள்ளனர். அவர்களின் கோரிக்கை நிறைவேற்றப்படும்.

திருச்சி சிறப்பு முகாமில் தங்கவைக்கப் பட்டுள்ள முருகன், சாந்தன், ஜெயக்குமார், ராபர்ட் பயஸ் ஆகியோர் உண்ணாவிரதம் மேற்கொள்ளவில்லை. அவர்கள், நடைபயிற்சி மேற்கொள்வது உள்ளிட்ட சில வசதிகளை கேட்டனர். அவை உடனுக்குடன் செய்து தரப்பட்டுள்ளன. நால்வரில் மூன்று பேர் இலங்கை செல்ல விருப்பம் தெரிவித்துள்ளனர். இவர்களை இலங்கைக்கு அனுப்ப அனுமதி கேட்டுள்ளோம். முருகனுக்கு இங்கே வழக்கு இருப்பதால் அவர் தற்போது செல்வதற்கு வாய்ப்பில்லை - என்றார்.



பொதுஜன பெரமுனவிலிருந்து விலகி சுயாதீனமாக இயங்கிய குழுவொன்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியுடன் நேற்று (14) கூட்டணி அமைத்தது. இதன்பிரகாரம் அனுர பிரியதர்ஷன யாப்பா, சந்திம வீரக்கொடி, சுதர்ஷனி பெர்னாண்டோ புள்ளே, ஜோன் செனவிரத்ன, ஜயரத்ன ஹேரத், பிரியங்கர ஜயரத்ன ஆகிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவே இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்துகொண்டது.

# ஓய்வுபெற்ற ஆசிரியர் உடப்பில் கௌரவிப்பு



(உடப்புசெய்தியாளர்)

ஆசிரியர் சேவையில் 32 வருடங்களைப் பூர்த்தி செய்தஆசிரியர் க.மகாதேவன் பணியிலிருந்து கடந்த 2022.10.19ஆம் திகதி ஓய்வு நிலையை பெற்றுக் கொண்டார். ஓய்வு பெற்றதை கௌரவிக்கும் முகமாக பிரியாவிடை நிகழ்வொன்று ஆண்டிமுனை தமிழ் மகா வித்தியாலயத்தில் அதிபர் ந. பத்மானந்தன் தலைமையில் வெள்ளிக்கிழமை (11) இடம்பெற்றது.

முன்னாள் ஜனாதிபதி காலஞ்சென்ற ரணசிங்க பிரேமதாசவின் ஆட்சிக்காலத்தில் ஜனசவிய வேலைத்திட்டத்தின் கீழ் 25,000 பேருக்கு ஆசிரியர் நியமனம் 1990 காலப்பகுதியில் வழங்கப்பட்டது. அந்த நேரத்தில் உடப்பு ஆண்டிமுனைக் கிராமத்தில் வசிக்கும் மகாதேவனுக்கும் இந்த நியமனம் வழங்கப் பட்டது. மொத்தமாக 32 வருடங்கள் ஆசிரியர் சேவை செய்து தமது பணியினை அண்மையில் ஓய்வாக்கிக்கொண்டார். அது மட்டுமல்லாமல், தமது பகுதிநேர செயற்பாடுகளில் ஊடகத்துறை தொழிலில் தமது பங்களிப்பைச் செய்து வந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

அதன்படி தமிழ்ப் பத்திரிகைகளில் உடப்பு பகுதி நிருபராக பல வருடங்கள் கடமையாற்றிய அனுபவமும் உடப்பின் பல நிகழ்வுகளை உலகுக்கு வெளிக்கொண்டு வந்தமையும் இவரைச் சாரும். தமது ஓய்வு நேரங்களில் முகநூல் தளத்தில் கவிதைகள் பல படைத்து பல சான்றிதழ்களையும் பெற்றுள் ளார். மேலும் பத்திரிகைகளுக்கு கட்டுரை எழுதுவதிலும் தமது பங்களிப்பைச் செய்து வந்ததோடு இசைக்குழுவில் பாடல் பாடு வதிலும், புகைப்படம் எடுப்பதிலும் முக்கிய இடத்தைப் பெற்றவரார்.

இவர் அரச விருதான "கலைச்சுடர்"என்ற பட்டத்தை இந்து கலாசார அமைச்சினால் வழங்கியபோது பெற்றுக்கொண்டார். அத்துடன், "சாமஸ்ரீ" என்ற விருதையும் பெற்றவராவார். மேலும், பிரதேச, மாவட்ட, மாகாண மட்டத்தில் பல விருதுகளையும் பெற்றவர்.

# மாணவி மீது பாலியல் சேட்டை: ஆசிரியருக்கு விளக்கமறியல்!

(கனகராசா சரவணன்)

அம்பாறை, திருக்கோவில் பொலிஸ் பிரிவிலுள்ள பாடசாலையொன்றில் மாணவி மீது பாலியல் சேட்டை விட முயற்சித்த குற்றச்சாட்டின்பேரில் கைதுசெய்யப்பட்ட ஆசிரியர் ஒருவரை எதிர்வரும் 25ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்ற நீதவான் உத்தரவிட்டார்.

குறித்த பாடசாலையில் சில மாணவிகள் மீது ஆசிரியர்கள் பாலியல் துஷ்பிரயோகம் மேற்கொண்டு வருவதாக சமூக ஊடகங்கள் ஊடாக தகவல்கள் வெளிவந்த நிலையில், இது குறித்து திருக்கோவில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் ஆலோசனைக்கமைய பெண்கள், சிறுவர்கள், பிரிவினர் பாடசாலைக்கு சென்று மாணவர்களுக்கு ஒரு விழிப்புணர்வு கூட்டமொன்றை ஏற்படுத்தி முறைப்பாட்டுப் பெட்டியொன்றை வைத்தனர்.

இதனடிப்படையில் முறைப்பாட்டுப் பெட்டியில் சில மாணவிகள் இட்ட கடிதங்களை யடுத்து பொலிஸார் இந்த முறைப்பாடு தொடர்பாக விசாரணை மேற்கொண்ட நிலையில், முதலில் அந்த பாடசாலையில் கல்வி கற்றுவரும் ஆசிரியர் ஒருவரை பாலியல் சேட்டை விட முயற்சித்த குற்றச்சாட்டின் பேரில் கடந்த சனிக்கிழமை (12) கைதுசெய்து அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்ற நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து அவரை நீதவான் எதிர்வரும் 25ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்

இதேவேளை, இந்த முறைப்பாட்டுப் பெட்டியில் கிடைக்கப்பெற்ற கடிதங்களில் பாலியல் சேட்டையில் ஈடுபட்ட சில ஆசிரியர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட் டுள்ளதாகவும் அது தொடர்பாக ஆராய்ந்து விசாரணைகள் இடம்பெற் றுவருவதாகவும் இந்த விசாரணையின் பின்னர் இன்னும் மேலும் சில ஆசிரியர்கள் கைது செய்யப்பட வுள்ளதாகவும் பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# தொழிற்சங்கப் பிரமுகர் சுப்பிரமணியம் காலமானார்

(பதுளை நிருபர்)



பிரபல பெருந்தோட்டத்துறைசார் தொழிற்சங்கவாதியான இராமசாமி சுப்ரமணியம் தமது 75ஆவது வயதில் பசறை பகுதியின் கோணக்கலை பெருந்தோட்டப் பிரிவின் தமது இல்லத்தில் 13.11.2022இல் இரவு இயற்கை எய்தினார்.

இவர், தமது 22ஆவது வயதில் தோட்டத் தொழிற்சங்கப் பணியகத்தில் சாதாரண குமாஸ்தாவாக பிரவேசித்து, தொழில் உறவு அதிகாரியாக, தொழில் சட்ட வல்லுனராக, பிரபல சமூக சேவையாளராக உயர்ந்தவராவார்.

இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம், மலையக மக்கள் முன்னணி, ஐக்கிய தொழிலாளர் முன்னணி, தேசிய தொழிலாளர் சங்கம் ஆகிய தொழிற்சங்க அமைப்புகளில் இராமசாமி சுப்ரமணியம் உயர் பணி யாற்றினார்.

தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் முதிர்ச்சி பெற்றிருந்த இவரின் சேவைகளினால் பெருந்தொகையானோர் பயன் பெற்றுள்ளனர்.

இவர் மூன்று ஆண் பிள்ளைகளின் தந்தை யாவார். இவரது இறுதிக் கிரியைகள் இன்று (15) மாலை 4.00 மணிக்கு பசறை தகனச் சாலையில் இடம்பெறவுள்ளன.

# வறிய மாணவர்களுக்கு பால் வழங்கும் திட்டம்

## மடு வலயக் கல்விப் பணிமனை பிரிவில் ஆரம்பித்துவைப்பு





(மன்னார் நகர் நிருபர்)

மன்னார் மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் வறுமைக்கோட்டின் கீழ் கல்வி கற்கும் மாணவர்களின் நலனை கருத்திற்கொண்டு, வடமாகாண ஆளுநரின் நிதி உதவியுடன் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு ஒருநேர பால் வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் மடு கல்வி வலயத்தில் நேற்று திங்கட்கிழமை (14) காலை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வடமாகாண ஆளுநர் நிதியின் கீழ் முன்னெடுக்கும் குறித்த செயல்திட்டத்தை மடு கல்வி வலயத்திற்குட்பட்ட ஆண்டாங்குளம் றோமன் கத்தோலிக்க தமிழ் ம.வி. பாடசாலையில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெல் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டு மடு கல்வி வலயத்தில் தெரிவுசெய்யப்பட்ட 23 பாடசாலைகளைச் சேர்ந்த 1338 மாணவர்கள் குறித்த திட்டத்தில் இணைத்துக்கொள்ளப் பட்டுள்ளனர்.

குறித்த நிகழ்வில் மடு வலயக் கல்விப் பணிப்பாளர், திணைக்கள அதிகாரிகள், ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.


BIMPUTH
Strength of the Sri Lankan Economy

# பிம்புத் பினான்ஸ் பிஎல்சி

## 2022 செப்டெம்பர் 30ம் திகதி முடிவடைந்த ஆறு மாதத்திற்கான நிதிக்கூற்று

### வருமானக்கூற்று

ரூபா. '000

| | 30.09.2022 (கணக்காய்வுக்குட்படாதது) | 30.09.2021 (கணக்காய்வுக்குட்படாதது) |
|---|---|---|
| வட்டி வருமானம் | 50,227 | 129,290 |
| வட்டிச் செலவினங்கள் | (353,329) | (213,528) |
| **தேறிய வட்டி வருமானம்** | **(303,102)** | **(84,239)** |
| கட்டணம் மற்றும் தரகு வருமானம் | 2,375 | 1,990 |
| கட்டணம் மற்றும் தரகு செலவீனம் | | |
| **தேறிய கட்டண வருமானம்** | **2,375** | **1,990** |
| வியாபாரத்திலிருந்து தேறிய இலாம் / (இழப்பு) | | - |
| FVTPL விற்பனை சாதனங்களின் தேறிய இலாம் / (இழப்பு) | 1,625 | 57,499 |
| ஏனைய தொழிற்பாட்டு வருமானம் | 95,365 | 21,097 |
| **ஏனைய தொழிற்பாட்டு செயற்பாட்டிலிருந்து தேறிய இலாபம்/(இழப்பு)** | **96,990** | **78,596** |
| **மொத்த தொழிற்பாட்டு வருமானம்** | **(203,737)** | **(3,652)** |
| தனிப்பட்ட பெறுமானகுறைப்பு | 284,441 | 123,265 |
| திரண்ட பெறுமானகுறைப்பு | - | - |
| ஏனையவை | - | - |
| **கடன் மற்றும் ஏனைய இழப்புக்களில் பெறுமானகுறைப்பு** | **284,441** | **123,265** |
| **தேறிய தொழிற்பாட்டு வருமானம்** | **(488,178)** | **(126,917)** |
| பணியாளர் செலவினங்கள் | 50,415 | 66,081 |
| தேய்மானம் | 42,608 | 46,209 |
| ஏனைய செலவீனங்கள் | 117,703 | 100,198 |
| **தொழிற்பாட்டு செலவினங்கள்** | **210,726** | **212,487** |
| **FSVAT முன் தொழிற்பாட்டு இலாம் / (இழப்பு)** | **(698,904)** | **(339,404)** |
| நிதிச் சேவைகள் மீது வரி | - | - |
| **FSVAT பின் தொழிற்பாட்டு இலாம் / (இழப்பு)** | **(698,904)** | **(339,404)** |
| **வரிக்கு முன்னரான இலாபம் / (நட்டம்)** | **(698,904)** | **(339,404)** |
| வருமான வரி செலவீனம் | - | - |
| **காலத்திற்கான இலாபம்/நட்டம்** | **(698,904)** | **(339,404)** |
| **ஏனைய விரிவான இலாபம், தேறிய வருமா வரி** | | |
| துணை நிறுவனங்களின் ஏனைய விரிவான வருமானத்தில் பங்கு | | - |
| வரையறுக்கப்பட்ட நன்மை திட்டங்களில் உண்மையான ஆதாயம் | | - |
| **காலத்திற்கான மொத்த விரிவான வருமானம்** | **(698,904)** | **(339,404)** |
| **பங்கு ஒன்றிற்கான இலாபம்** | **(6.49)** | **(3.15)** |

| | | |
|---|---|---|
| **மூலதன போதுமை** | | |
| அடிப்படை மூலதனம் ரூ. 000 | (1,021,223) | 139,826 |
| மொத்த மூலதன அடித்தளம் ரூ. 000 | (1,021,223) | 89,983 |
| அடிப்படை மூலதனம்-இடர் நிறையேற்றிய சொத்துக்கள் விகிதம் (குறைந்தபட்சம் 8.5%) | -24.75% | 2.31% |
| மொத்த மூலதனம்-இடர் நிறையேற்றிய சொத்துக்கள் விகிதம் (குறைந்தபட்சம் 12.5%) | -24.75% | 1.49% |
| மூலதன நிதி-மொத்த வைப்பு பொறுப்புகள் விகிதம் (குறைந்தபட்ச தேவை, 10%) | -138.89% | 31.63% |
| **சொத்துக்களின் தரம்** | | |
| மொத்த செயற்படாத ஒதுக்கீடுகள் ரூ. "000 | 1,774,809 | 1,712,046 |
| மொத்த செயற்படாத ஒதுக்கீடுகள் விகிதம் % | 54.96% | 40.99% |
| தேறிய செயற்படுத்தப்படாத வசதிகளுடன் விகிதம் % | 2.60% | 3.44% |
| **இலாபத்தன்மை (%)** | | |
| வட்டி எல்லை (தேறிய வட்டி இலாபம்/மொத்தச் சொத்து) | -7.48% | -1.51% |
| சொத்துக்கள் மீதான திரும்பல்கள் (வரிக்கு முன்னர்) | -14.49% | -5.24% |
| பங்குகள் மீதான திரும்பல்கள் (வரிக்கு பின்னர்) | -302.82% | -56.55% |
| **திரவத்தன்மை (ரூபா. 000)** | | |
| திரவச் சொத்துக்களின் ஆகக்குறைந்த தேவைப்பாடு | 144,204 | 202,393 |
| திரவச் சொத்துக்களின் கிடைபெறுமானம் | 144,769 | 267,785 |
| அரச பத்திரங்களின் ஆகக்குறைந்த தேவைப்பாடு | 133,074 | 206,310 |
| அரச பத்திரங்களின் கிடைப்பனவு | 61,670 | 166,144 |
| **விஞ்ஞாபனத் தகவல்கள்** | | |
| ஊழியர்களின் எண்ணிக்கை | 242 | 301 |
| கிளைகளின் எண்ணிக்கை | 18 | 19 |
| சேவை மையங்களின் எண்ணிக்கை | 26 | 28 |

### நிதி நிலைமை அறிக்கை

ரூபா. '000

| | 30.09.2022 (கணக்காய்வுக்குட்படாதது) | 30.09.2021 (கணக்காய்வுக்குட்படாதது) |
|---|---|---|
| **சொத்துக்கள்** | | |
| காசு மற்றும் வங்கி மீதிகள் | 73,571 | 80,131 |
| நிதியியல் சாதனங்கள் இருப்பு | 132,028 | 136,544 |
| நிதி முதலீடுகள் - நியாய மதிப்பீனூடக இலாப நட்டம் | 8,349 | 163,608 |
| நிலைமாறக்கூடிய செலவில் கடன் பத்திரங்களில் | 61,670 | 166,144 |
| நிதிச் சொத்துக்கள் - விற்பனைக்குள்ளவை | 194 | 194 |
| கடன் மற்றும் பெறுகைகள் - குத்தகை | 309,975 | 483,954 |
| கடன் மற்றும் பெறுகைகள் - வாடகை | - | - |
| கடன் மற்றும் பெறுகைகள் - ஏனையவை | 1,260,232 | 2,124,653 |
| பெறக்கூடிய வரி | 110,571 | 132,850 |
| சொத்துக்கள் மற்றும் உபகரணங்கள் | 188,750 | 259,957 |
| முதலீட்டுச் சொத்துக்கள் | 1,770,196 | 1,795,793 |
| பயன்பாட்டு சொத்துக்கள் | 40,887 | 94,285 |
| தொட்டுணர முடியாத சொத்துக்கள் | 9,489 | 14,951 |
| ஏனைய சொத்துக்கள் | 85,662 | 142,887 |
| **மொத்த சொத்துக்கள்** | **4,051,576** | **5,595,950** |
| **பொறுப்புக்கள்** | | |
| வங்கிக் கடன்கள் | 4,071,692 | 3,949,185 |
| வாடிக்கையாளர் கடன்கள் | 585,717 | 1,112,476 |
| ஏனைய கடன்கள் | - | - |
| வரி பொறுப்பு | - | - |
| ஓய்வு நலக் கடப்பாடுகள் | 25,227 | 21,056 |
| குத்தகை பொறுப்பு | 69,411 | 88,896 |
| ஏனைய பொறுப்பு | 113,027 | 72,434 |
| | **4,865,074** | **5,244,047** |
| **பங்குதாரர் நிதி** | | |
| பிரேரிக்கப்பட்ட மூலதனம் | 616,100 | 616,100 |
| மறுமதிப்பீட்டு ஒதுக்கம் | 51,391 | 23,220 |
| சட்டவொதுக்க நிதியம் | 71,842 | 71,842 |
| நிறுத்தி வைக்கப்பட்ட இலாபம் | (1,552,830) | (359,260) |
| | (813,497) | 351,903 |
| **மொத்த பொறுப்புக்கள்** | **4,051,576** | **5,595,950** |
| **பங்கொன்றின் தேறிய சொத்து** | **(7.55)** | **3.27** |
| **தொடர்ச்சியான பொறுப்பு மற்றும் கடமைகள், ரூ. "000"** | **0** | **0** |

2011ஆம் ஆண்டின 42ஆம் இலக்க நிதி வணிக சட்டத்தின் கிழ் இலங்கை மத்திய வங்கியின் நாணய சபையால் சான்றிதழ் அளிக்கப்பட்டது. (சான்றிதழ் இல. RFC/033) கூட்டிணைக்கப்பட்ட திகதி 27.07.2007 பிட்ச் ரேட்டிங் லங்காவின் நிரலிடப்பட்டது. "CC(lka)" 2017 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க - குறைந்தபட்ச கோர் மூலதனத்தின் படி நிறுவனம் தேவையான முக்கிய மூலதனத்தை பூர்த்தி செய்யும் வரை இலங்கை மத்திய வங்கியால் வைக்கப்பட்டுள்ளது.

இங்கே கீழ் ஒப்பமிட்டுள்ள பிம்புத் பினான்ஸ் பிஎல்சி யின் பணிப்பாளர் மற்றும் நிதித் தலைவர்கள் ஆகிய நாம் இணைவாக சான்றுப்படுத்துவது யாதெனில்

(அ) மேலுள்ள கூற்றுக்கள் இலங்கை மத்திய வங்கியால் விதிக்கப்பட்ட் பரிமாணத்துக்கும் வரையரைக்கும் அமைய தயாரிக்கப்பட்டது.

(ஆ) இக்கூற்றுக்களில் உள்ள தகவல்கள், கம்பனியின் கணக்காய்வு செய்யப்படாத கணக்கு அறிக்கைகளில் இருந்து பெறப்பட்டவையாகும் அவை கணக்காய்வு செய்தவை என குறிக்கப்படாவிடின்

பணிப்பாளர்
P.M.K. கமகே

நிதித் தலைவர்
M.N.H. நஷ்வாக்

தமிழன்
THAMILAN தமிலன்
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

**2022, நவம்பர் 15ஆம் திகதி, செவ்வாய்கிழமை**

# இந்திய உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பும் ஈழத்தமிழரும்

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் 30 ஆண்டுகளுக்கும் மேலாக சிறைத் தண்டனை அனுபவித்து வந்த நளினி, ரவிச்சந்திரன், முருகன், சாந்தன், ரொபர்ட் பயஸ், ஜெயக்குமார் ஆகிய 6 பேரையும் விடுதலை செய்து இந்திய உயர் நீதிமன்றம் கடந்தவாரம் தீர்ப்பளித்தது.

1991 மே 21இல் ஸ்ரீபெரும்புதூரில் மனித வெடிகுண்டு மூலம் ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்டார். இவ்வழக்கில் கைதுசெய்யப்பட்ட நளினி, பேரறிவாளன் உட்பட 26 பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. இதை எதிர்த்து தொடரப்பட்ட மேன்முறையீட்டு வழக்கை விசாரித்த இந்திய உயர் நீதிமன்றம், சாந்தன், முருகன், நளினி, பேரறிவாளன் ஆகியோருக்கு விதிக்கப்பட்ட தூக்குத் தண்டனையை உறுதி செய்தும் ஜெயக்குமார், ரொபர்ட் பயஸ், ரவிச்சந்திரன் ஆகியோரது தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனையாக குறைத்தும் உத்தரவிட்டது.

பின்னர், முன்னாள் முதல்வர் கருணாநிதி தலைமையிலான அமைச்சரவையின் வேண்டுகோளை ஏற்று, நளினியின் தூக்குத் தண்டனையை, ஆயுள் தண்டனையாகக் குறைத்து அப்போதைய ஆளுநர் உத்தரவிட்டார். அதேபோல, 2014இல் முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோரது தூக்குத் தண்டனையை, ஆயுள் தண்டனையாகக் குறைத்து உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

பின்னர், பேரறிவாளன், நளினி உள்ளிட்ட 7 பேரையும் முன்கூட்டியே விடுதலை செய்ய, முன்னாள் முதல்வர் ஜெயலலிதா தலைமையிலான தமிழக அரசு 2014 பிப்.14ஆம் தேதி முடிவெடுத்தது. பல்வேறு திருப்பங்களுக்குப் பிறகு, 7 பேரின் விடுதலை தொடர்பாக 2018 செப்டெம்பர் மாதம் அ.தி.மு.க. அமைச்சரவையில் மீண்டும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, ஆளுநருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

இதற்கிடையில், தன்னை விடுவிக்கக்கோரி பேரறிவாளன் தாக்கல் செய்த மனுவை விசாரித்த உயர் நீதிமன்ற நீதிபதிகள் நாகேஸ்வர ராவ், அஜய் ரஸ்தோகி, ஹேமந்த் குப்தா ஆகியோர் அடங்கிய அமர்வு, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 142 ஆவது ஷரத்தின் கீழ், உச்ச நீதிமன்றத்துக்குரிய பிரத்தியேக அதிகாரத்தைப் பயன்படுத்தி பேரறிவாளனை விடுதலை செய்து கடந்த மே 18ஆம் திகதி தீர்ப்பளித்தது.

இதேபோல தங்களையும் விடுதலை செய்யக் கோரி நளினி, ரவிச்சந்திரன் ஆகியோர், உயர்நீதிமன்றத்தில் மேன்முறையீட்டு மனு தாக்கல் செய்தனர்.

உச்ச நீதிமன்ற நீதிபதிகள் பி.ஆர்.கவாய், பி.வி.நாகரத்னா ஆகியோர் அடங்கிய அமர்வு இந்த வழக்கை விசாரித்தது. தமிழக அரசு தரப்பில் 6 பேரின் நன்னடத்தை தொடர்பான பிரமாணப் பத்திரம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டதுடன், இதில் உயர் நீதிமன்றம் பிறப்பிக்கும் உத்தரவுக்கு தமிழக அரசு கட்டுப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த வழக்கில் தீர்ப்பளித்த நீதிபதிகள் பி.ஆர்.கவாய், பி.வி.நாகரத்னா ஆகியோர் அடங்கிய அமர்வு, “கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக சிறைத் தண்டனை அனுபவித்து வரும் நளினி, ரவிச்சந்திரன், சாந்தன், முருகன், ரொபர்ட் பயஸ், ஜெயக்குமார் ஆகிய 6 பேரும், உயர் நீதிமன்றத்துக்குரிய பிரத்தியேக அதிகாரத்தைப் பயன்படுத்தி விடுதலை செய்யப்படுகிறார்கள்” என்று தீர்ப்பளித்ததுடன், “பேரறிவாளன் வழக்கின் தீர்ப்பு இந்த 6 பேருக்கும் பொருந்தும். சிறையில் 6 பேரின் நன்னடத்தை, அங்கே கற்ற கல்வி, பரோல் விதிமுறைகள், மருத்துவ ஆவணங்கள், ஆளுநர் ஏற்படுத்திய தாமதம் ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு இந்த தீர்ப்பை வழங்குகிறோம்” என்று நீதிபதிகள் தீர்ப்பில் தெரிவித்தனர்.

சிறைச்சாலையில் மூன்று தசாப்த காலத்திற்கும் மேலாக அடைபட்டுக்கிடந்து சுதந்திரக்காற்றை சுவாசிக்க இவர்களுக்கு வழிவிட்ட இந்திய உயர்நீதிமன்றத்தின் துணிச்சலான அந்த தீர்ப்பை வரவேற்காமல் இருக்க முடியாது. காலாகாலமாக இவர்களின் விடுதலை குறித்து பேசப்பட்டாலும், ஆளுநர்மார் வழங்கிய சிபாரிசுகள் அடிப்படையில் இந்த விடுதலை விவகாரம் இழுத்தடிப்பு செய்யப்பட்டபோதும் அனைத்திற்குமே முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் இந்த விடுதலை இடம்பெற்றுள்ளது.

ராஜீவ் கொலைவழக்கில் தண்டனை பெற்றவர்களின் விடுதலை குறித்து பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டாலும், அதற்கு அரசியல் காரணங்கள் சொல்லப்பட்டாலும், இந்த தீர்ப்பானது இந்திய நீதிமன்றக் கட்டமைப்பின் சுயாதீனத்தை காட்டி நிற்கிறது என்பதுதான் உண்மை. இந்த சம்பவம் தொடர்பில் பல்வேறு விமர்சனங்கள் உள்ளன. ஒரு கட்டத்தில் இது ஒரு துன்பியல் சம்பவம் என்பதை விடுதலைப்புலிகள் இயக்க உயர்மட்டத் தலைவர்களே ஒப்புக்கொண்டு அதற்குத் துயரம் தெரிவித்துவிட்டனர். இதில் யார் தவறு, யார் சரி என்று பேசுவோமாயின் தொடர்ந்து பேசிக்கொண்டே இருக்கலாம். ஆனால், இப்போது அது அப்பாற்பட்ட விடயம்.

கொடும் கொலையொன்றை செய்த ஒருவருக்கு சட்டத்தரணி ஒருவர் ஆஜராவதும் அவருக்காக வாதிடுவதும் அவருக்கு இருக்கும் அடிப்படை உரிமையை நிலைநாட்டவேண்டும் என்பதற்காகத்தான். ராஜீவ் காந்தி கொலை வழக்கின் குற்றவாளிகளுக்காக ஆஜராகிய சட்டத்தரணிகள் இவ்வளவு காலம் போரடியமையும் அதன் அடிப்படையிலாகத்தான் இருக்கும் என்பது பரகசியம். ஆனால், தமது வாழ்நாளில் கிட்டத்தட்ட அரைவாசிப் பகுதியை சிறைக்குள் கடத்திய ஒரு குழுவினரை விடுவித்த நீதிமன்றம் நிச்சயம் அவர்களின் துயரங்கள், பாதிப்புகளை கவனத்தில் எடுத்திருக்கும். பழிக்குப் பழி, வஞ்சத்திற்கு வஞ்சம் என்றெல்லாம் சட்டம் நீதி வழங்கலில் இடமில்லை என்பதனையே மேற்படி விடுதலை சுட்டி நிற்கின்றது.

சாதாரண ஓர் அரசியல் கைதியை விடுதலை செய்வதற்கே இலங்கையில் பல தடவைகள் யோசிக்கப்பட்டு, அதனால் ஏற்படும் அரசியல் தாக்கங்களை ஆராயும் ஒரு பின்னணியில், அரசியல் தலைவர் ஒருவரை கொலை செய்த சம்பவத்தில் குற்றஞ்சாட்டப்பட்டோரை இந்திய உயர்நீதிமன்றம் விடுவித்திருப்பது இலங்கைக்கு மட்டுமல்ல, உலக நீதித்துறைக்கே முன்னுதாரணமாக இருக்கிறது என்று சொன்னாலும் மிகையில்லை.

இந்திய உயர்நீதிமன்றத்தின் விடுதலை அறிவிப்புக்கு தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதா, இப்போதைய முதல்வர் ஸ்டாலின் ஆகியோர் பெரும் சிரத்தை எடுத்தமை இங்கு நினைவு கூரப்படுதல் வேண்டும். அதுமட்டுமல்லாமல், இவர்களை விடுதலை செய்ய ராஜீவின் குடும்பம் ஆட்சேபனை தெரிவிக்காமையும் கவனிக்கப்படவேண்டிய ஒன்று. அரசியல் அதிகாரங்களுக்கு அப்பாற்பட்டு இந்திய நீதித்துறை மேற்கொண்டிருக்கும் இந்நடவடிக்கை பாரதத்தின் நீதித்துறை கட்டமைப்பின் மீது பெரும் மரியாதையையும் மாண்பையும் மக்கள் மத்தியில் குறிப்பாக ஈழத்தமிழர்கள் மத்தியில் ஏற்படுத்தியிருக்கிறது.

தாமதித்த நீதி மறுக்கப்பட்ட நீதி என்றாலும், தாமதித்தாவது நீதி வழங்கப்பட்டுள்ளதே என்று பெருமூச்சு விடலாம் என்பதையே இந்திய உயர்நீதிமன்றத்தின் அந்த தீர்ப்பு சுட்டிநிற்கின்றது. அதுமட்டுமல்ல, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்தத் தீர்ப்பு வரலாறில் முக்கிய பதிவையும் தந்துவிட்டு போயிருக்கிறது. ஈழத்தமிழர்கள் இந்த தீர்ப்பை வரவேற்கிறார்கள் என்பது வெள்ளிடைமலை.

# மியன்மார் இராணுவ கும்பலின் கோமாளி நீதி

சத்யா



ஜனநாயகத் தலைவி
ஆங் சான் சூ கீய்
26 வருட
தண்டனையை
அனுபவித்து முடிக்க
103 வயது வரை
வாழவேண்டும்

உலகின் பல பிராந்தியங்களிலும் பெருவாரியான நெருக்கடிகள் மூண்ட வண்ணமேயிருக்கின்றன. முதலில் தோன்றுகின்ற பிரச்சினைகளை அடுத்து வருகின்ற பிரச்சினைகள் மூடிமறைத்து உலகின் கவனத்தை வேறு பக்கம் திசைதிருப்பிவிடுகின்றன. ஒரு பிரச்சினை மறு பிரச்சினையை உலகின் பார்வையில் மேவினாலும் அந்த பிரச்சினைகள் எல்லாமே தீர்வுகள் காணப்படாமல் தீவிரமடைந்து கொண்டேயிருக்கின்றன.

எட்டு மாதங்களுக்கு முன்னர் ரஷ்யாவின் ஆக்கிரமிப்பையடுத்து மூண்ட உக்ரைன் போர் உலகின் பல பிராந்திய நெருக்கடிகளில் இருந்து கவனத்தை திருப்பியது. ஆபிரிக்காவில் பல நாடுகளில் உள்நாட்டுப் போர்கள்,பஞ்சம்,பெருந்தொற்று நோய்கள், இயற்கை அனர்த்தங்கள் என்று பெருவாரியான நெருக்கடிகள். அவை குறித்து சர்வதேச சமூகம் உரிய கவனம் செலுத்துவதாக இல்லை.

உக்ரைன் போரைப் பொறுத்தவரையிலும் கூட உலகளாவிய மட்டத்தில் பாரிய எரிபொருள் நெருக்கடி, உணவு வகைகள் தட்டுப்பாடு என்று பல பிரச்சினைகள் தீவிரமடைவதற்கு பிரதான காரணமாக இருக்கின்ற போதிலும், அதை முடிவுக்கு கொண்டுவருவதற்கு சர்வதேச சமூகம் எந்த முயற்சியையும் முன்னெடுக்காத துரதிர்ஷ்டவசமான நிலைவரத்தையே காண்கிறோம்.

இவ்வாறாக பாரதூரமானவையாக இருக்கின்ற போதிலும், உலகின் தீவிர கவனத்தை பெறத் தவறும் பிரச்சினைகளில் முக்கியமான ஒன்றாக மியன்மார் இராணுவ கும்பல் செய்துவருகின்ற ஜனநாயகப் படுகொலையை கருதமுடியும்.

கடந்த வருட முற்பகுதியில் மீண்டும் சதிப்புரட்சி மூலம் அதிகாரத்தைக் கைப்பற்றிய இராணுவ கும்பல் மியன்மாரில் செய்துவருகின்ற அட்டகாசங்கள் உலகின் மனசாட்சியை உலுக்காமல் இருப்பது பெரும் வேதனை தருகிறது.

5 கோடியே 50 இலட்சம் மக்களின் ஜனநாயக உரிமைகளுக்காக போராடிக்கொண்டிருக்கின்ற 77 வயதான ஆங் சான் சூ கீய் எமது யுகத்தின் மகத்தான ஜனநாயகப் போராளியாக வரலாற்றில் இடம்பெறுவார்.

மியன்மாரின் தலைநகர் நய்பியிடோவில் அமைந்திருக்கும் பிரதான சிறைச்சாலை வளாகத்தில் இராணுவ ஆட்சியாளர்களினால் அமைக்கப்பட்ட நீதிமன்றம் ஒன்று இரு மூன்று வருட சிறைத்தண்டனைகளை சூ கீய் ஏக காலத்தில் அனுபவிக்கவேண்டும் என்று கடந்த மாத நடுப்பகுதியில் (ஒக்.12) தீர்ப்பளித்தது. கடந்த வருடம் பெப்ரவரி முதலாம் திகதி கைதுசெய்யப்பட்ட பின்னர் விதிக்கப்பட்ட தண்டனைகளுடன் சேர்த்துப் பார்த்தால் மொத்தமாக அவர் 26 வருடங்கள் சிறையில் வாடவேண்டியவராக இருக்கிறார். அந்த சிறைவாசத்தை சூ கீய் அனுபவித்து முடிக்கும் போது அவருக்கு 103 வயதாக இருக்கும். இராணுவ ஆட்சியின் கொடூரங்களை அனுபவிக்கும் ஜனநாயகத் தலைவியினால் அந்த வயது வரை வாழக்கூடியதாக இருக்குமா?

இறுதியாக நடைபெற்ற 2020 பொதுத்தேர்தலில் அமோக வெற்றியைப் பெற்ற ஜனநாயகத்துக்கான தேசிய கழகத்தின் (National League for Democracy) தலைவியை சதிப்புரட்சி மூலம் கவிழ்த்து 2021 பெப்ரவரி 1 அன்று கைதுசெய்த இராணுவ கும்பல் தொடர்ச்சியாக அரங்கேற்றிவரும் நீதித்துறைக் கேலிக்கூத்தின் பிந்திய காட்சியாக கடந்த மாத தீர்ப்பு அமைந்திருக்கிறது.

கடந்த மூன்று தசாப்தங்களுக்கும் கூடுதலான காலமாக இராணுவ ஆட்சிக்கு எதிரான ஜனநாயக இயக்கத்தின் முகமாக சூ கீய் விளங்குகிவருகிறார். முன்னைய இராணுவ அரசாங்கம் ஒன்று 1989 ஆம் ஆண்டு அவரை வீட்டுக்காவலில் வைத்தது. அடுத்த 22 வருட காலப்பகுதியில் 15 வருடங்களுக்கு இடைவிட்டு இடைவிட்டு அந்த வீட்டுக்காவல் தொடர்ந்தது.

2015 பொதுத்தேர்தலில் வெற்றிபெற்று ஜனநாயகத்துக்கான தேசிய கழகம் அதிகாரத்துக்கு வந்தது. இது 1962 ஜெனரல் நீ வின் செய்த இராணுவ சதிப்புரட்சிக்கு பிறகு பதவியேற்ற உண்மையான சிவிலியன் அரசாங்கமாக அமைந்தது. தொடர்ச்சியான இராணுவ ஆட்சியை சுதந்திரமான தேர்தல்கள் மூலமாக சூ கீயினால் மாத்திரமே துண்டிக்கக்கூடியதாக இருந்தது.

இராணுவ கும்பலின் தந்திரோபாயங்கள் தெளிவானவையாக இல்லை. அடுத்தவருடம் தேர்தல்களை நடத்துவதாக அவர்கள் கூறுகிறார்கள். தற்போது சூ கீய் ஐக் குற்றவாளியாக காரணம் காட்டி எந்தவொரு எதிர்கால தேர்தலிலும் அவரை போட்டியிட தகுதியற்றவராக இராணுவ கும்பலினால் செய்யமுடியும் என்று அவதானிகள் கூறுகிறார்கள்.

கடந்த மாதம் இறுதியாக நடைபெற்ற வழக்கில் சூ கீய் வர்த்தக பிரமுகரான முவாங் வெல்க் என்பவரிடமிருந்து 555,000 அமெரிக்க டொலர்களை இலஞ்சமாக பெற்றதாக குற்றஞ்சாட்டப்பட்டது.ஏற்கெனவே இந்த வர்த்தக பிரமுகருக்கு போதைப்பொருள் கடத்தல் குற்றச்சாட்டில் 15 வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. ஆனால், ஜெனரல் தீய்ன் சீய்னின் அரசாங்கத்தினால் அவர் விடுவிக்கப்பட்டார்.

சிறையில் இருந்து விடுதலையான பிறகு அவர் முன்னாள் ஜெனரல்களுடன் வர்த்தக உறவுகளை ஏற்படுத்திக் கொண்டார். சூ கீயின் அரசாங்கத்தின் கீழ் அவர் முக்கியமான அபிவிருத்தி திட்டங்களின் ஒப்பந்தங்களை பெற்றுக்கொண்டார்.

வழக்கு விசாரணையின்போது அவர் சூ கீயின் தொண்டு நிறுவனங்களுக்கு 100,000 டொலர்களை நன்கொடையாக வழங்கியதாகவும் பின்னர் 450,000 டொலர்களை வேறு காரணங்களுக்காக கொடுத்ததாகவும் ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். அந்த காரணங்களை வர்த்தக பிரமுகர் விசேடப்படுத்தி கூறவில்லை என்று செய்திகள் கூறின.

இந்தக் குற்றச்சாட்டுகள் சகலதையும் சூ கீய் நிராகரித்தார். முன்னாள் ஜனாதிபதி வின் மியின்ட் மீதும் ஐந்து ஊழல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருக்கின்றன.

மேற்கு நாடுகளும் ஐக்கிய நாடுகள் மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகள் சங்க (ஆசியான்) உறுப்பு நாடுகளும் மியன்மார் இராணுவ கும்பல் மீது ஓரளவுக்கு தடைகளை விதித்திருக்கின்ற போதிலும், அவை உருப்படியான விளைவுகளைத் தரவில்லை. 1962 இல் ஜெனரல் நீ வின் இராணுவ சதிப்புரட்சி மூலம் ஆட்சியைக் கைப்பற்றிய பிறகு மியன்மார் தனிமைப்படுத்தப்பட்ட நிலையில் இருந்துவருகிறது. அதற்கு பிறகு இராணுவத்தினரை பங்காளர்களாகக் கொண்டு சூ கீய் நடத்திய ஒரு குறுகிய கால சிவிலியன் அரசாங்கத்தைத் தவிர மற்றும்படி தொடர்ச்சியாக இராணுவ ஆட்சியே அந்த நாட்டில் நீடிக்கிறது.

இரு பெரிய அயல் நாடுகளான சீனாவும் இந்தியாவும் அவற்றின் புவிசார் அரசியல் நலன்களின் அடிப்படையில் மியன்மார் நெருக்கடியை அணுகுவதால் இராணுவ ஆட்சியாளர்களுக்கு வசதியாக இருக்கிறது. ஜனநாயக இயக்கத்தின் பின்னடைவுகளுக்கு இதுவும் ஒரு முக்கிய காரணம்.

இராணுவ கோமாளிக் கும்பலின் கேலிக்கூத்து நீதி விசாரணையில் சூ கீய் மீது சிறைத்தண்டனைகள் குவிக்கப்படுகின்ற போதிலும், தனிமைச் சிறையில் வைக்கப்பட்டிருக்கும் அவர் இந்த முதிய வயதிலும் ஜனநாயக உரிமைகளுக்கான தனது மக்களின் போராட்டத்துக்கு துணிச்சலுடன் தலைமை தாங்கிக்கொண்டிருக்கிறார்.

இதனிடையே, ஊடகவியலாளர்களுக்கு ஆபத்தான நாடாக மியன்மார் விளங்குகிறது.

சூ கீயுடன் சேர்த்து 12,623 பேர் இராணுவத்தினரால் சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களில் குறைந்தது 40 மியன்மார் ஊடகவியலாளர்களும் அடங்குவர் என்று கைதுகள் மற்றும் கொலைகளை கண்காணிக்கும் மியன்மார் அரசியல் கைதிகளுக்கான உதவிச்சங்கம் அறிவித்திருக்கிறது.

அண்மையில் ஜப்பானிய திரைப்பட தயாரிப்பாளரான ரோறு குபோட்டாவுக்கு இலத்திரனியல் பரிமாற்ற சட்டத்தை மீறியதாக 7 வருட சிறைத் தண்டனையும் மக்களை அரசுக்கெதிராக தூண்டியதாக மூன்று வருட சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது. இதை சினமூட்டுகின்ற நடவடிக்கை என்று ஊடகவியலாளர்களை பாதுகாப்பதற்கான கமிட்டி (committee to Protect Journalists) வர்ணித்திருக்கிறது.

தடுத்து வைக்கப்பட்டிருக்கும் வெளிநாட்டு குடிமக்களில் சூ கீயின் பொருளாதார ஆலோசகராக பணியாற்றிய அவுஸ்திரேலிய கல்விமான் சீன் ரேர்னெல்லும் அடங்குகிறார். உத்தியோகபூர்வ இரகசியங்கள் சட்டத்தை மீறியதாக அவருக்கு அண்மையில் மூன்று வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. தங்கள் குடும்பத்துக்கு மனதை வருத்தும் பெரும் துயர் என்று இதை அவரின் மனைவி ஹா வூ வர்ணித்ததார்.

குடிவரவுச் சட்டங்களை மீறியதாக மியன்மாருக்கான பிரிட்டனின் முன்னாள் தூதுவர் விக்கி பவுமானுக்கு பிரபலமான கலைஞரான அவரின் கணவருடன் சேர்த்து கடந்த செப்டெம்பரில் ஒரு வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டதாக ‘த கார்டியன்’ பத்திரிகை தெரிவித்துள்ளது.

## நக்கல் நமசிவாயம்

69 இலட்சம் பேர் கோட்டாவுக்கு வாக்கப் போட்டுட்டு இப்ப பட்ஜெட்டில ஒண்டுமில்லையென்டு ஒரு சீட்டால வந்த ரணில எப்படி பாருங்கோ ஏசுறது..?



## இன்றைய நாளில்...

* 1505 – போர்த்துக்கேய மாலுமியும் நாடுகாண் பயணியுமான லோரன்ஸ் டி அல்மெய்டா, கொழும்பை வந்தடைந்து ஐரோப்பியக் குடியேற்றத்தை ஆரம்பித்தார்.
* 1933 – தாய்லாந்தில் முதற்தடவையாகப் பொதுத்தேர்தல் இடம்பெற்றது.
* 1948 – இலங்கையில் மலையகத் தமிழரின் வாக்குரிமை பறிக்கப்பட்டது.
* 1949 – நாதூராம் கோட்சே, நாராயண் ஆப்தே ஆகியோர் மகாத்மா காந்தியைக் கொலை செய்த குற்றத்திற்காக தூக்கிலிடப்பட்டனர்.
* 1966 – ஜெமினி-12 விண்கலம் அட்லாண்டிக் கடலில் பாதுகாப்பாக இறங்கியது.
* 1978 – டக்ளஸ் டிசி-8 தனியார் பயணிகள் விமானம் கொழும்புக்கு அருகில் விபத்துக்குள்ளாகியதில் 183 பேர் உயிரிழந்தனர்.
* 1990 – அட்லாண்டிஸ் விண்ணோடம் எஸ்டிஎஸ்-38 விண்கலத்தை விண்ணுக்குக் கொண்டு சென்றது.
* 2000 – இந்தியாவில் ஜார்க்கண்ட் தனிமாநிலமாக உருவாக்கப்பட்டது.

# மீண்டும் இலங்கைக்கே எங்களை அனுப்பிவிடுங்கள்:
# இந்தியாவில் கைதுசெய்யப்பட்ட 38 பேர் கோரிக்கை!



சட்டவிரோதமாக கனடாவுக்கு செல்வதற்கு முயற்சித்து பெங்களூரில் வைத்து கைது செய்யப்பட்ட இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த 38 பேர் தங்களை மீண்டும் இலங்கைக்கு அனுப்புமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

அவர்கள் மேலும் கருத்து தெரிவிக்கையில், போலியான வெளிநாட்டு முகவர் மூலம் ஏமாற்றப்பட்டு கடலில் தத்தளித்துக் காப்பாற்றப் பட்டவர்கள்போல நாங்களும் போலியான முகவர் மூலம் ஏமாற்றப்பட்டுள்ளோம்.

கனடாவுக்கு அனுப்புவதாகக் கூறி அழைத்துச்சென்று இந்தியாவில் நடுத்தெருவில் கைவிட்டுச் சென்றுள்ளார்கள். அதன்பின்னர் நாங்கள் பெங்களூரில் வைத்து கடந்த 2021.06.10 அன்று கைதுசெய்யப்பட்டு இது வரை சிறையிலேயே வாடுகின்றோம். இங்கு நாங்கள் பல சொல்லொணாத் துயரங்களை அனுபவித்து வருகின்றோம்.

நாங்கள் இந்தியாவிற்கு வந்து இரண்டு வருடங்களாகின்றன என்பதுடன், சிறைக்குள் கிட்டத்தட்ட ஒன்றரை வருடகாலமாகவாடுகின்றோம். அதேசமயத்தில் நாங்கள் இலங்கை அமைச்சர்களுடனும் தொடர்பு கொண்டு பேசி இதுவரை எமக்கு எந்தத் தீர்வும் கிடைக்கப்பெறவில்லை. இலங்கை துணைத் தூதரகத்துடனும் தொடர்பில் இருக்கின்றோம்.

எங்களை சிறையிலிருந்து விடுதலை செய்து வேறொரு இடத்திற்கு - direction centre என்ற இடத்திற்கு மாற்றம் செய்து வழக்குகளை முடித்து நாட்டுக்கு அனுப்பிவைக்குமாறு கூறி நீதிமன்றம் கடந்த 2021.09.09 அன்று கட்டளையிட்டது. இதற்கான ஆதாரங்கள் எம்மிடம் உள்ளன. அதை நாங்கள் எங்களது நாட்டிலுள்ள அமைச்சர்களுக்கும் நாங்கள் அனுப்பியுள்ளோம்.

2021.09.09 அன்று எங்களை சாட்சியாகவும் பாதிக்கப்பட்டவர்களாகவும் மாற்றம் செய்துதான் direction centreக்கு மாற்றுமாறு கூறப்பட்டது. ஆனால், direction centreஇல் ஏற்கனவே ஆட்கள் இருக்கிறார்கள் எனக் கூறி எங்களை சிறையில் வைத்துள்ளார்கள். தற்போது ஒரு மாத காலமாகத்தான் எங்களை direction centreஇற்கு மாற்றியுள்ளார்கள். நாங்கள் சிறைச்சாலையிலிருந்து உண்ணாவிரதம், போராட்டங்கள் போன்றவற்றை முன்னெடுத்ததன் பலனாகவே எங்களை direction centreக்கு மாற்றியுள்ளார்கள்.

இரண்டு தடவைகள் இலங்கை துணைத் தூதரகத்தினர் இங்கு வந்து எங்களை பார்வையிட்டனர். நாங்கள் இங்கிருந்து பல தரப்பினருக்கு கடிதங்கள் அனுப்பியும் எந்த நன்மையும் கிட்டவில்லை.

நாங்கள் எங்களது நாட்டை வெறுத்தோ அல்லது நாடு தேவையில்லை என்றோ கருதி இவ்வாறு புறப்படவில்லை. எங்களது வறுமையின் காரணத்தினால் நாங்கள் எங்களது குடும்பங்களையும் நாட்டையும் பிரிந்து வந்து இவ்வாறு சிக்கித் தவிக்கின்றோம்.

அண்மையில் கடலில் தத்தளித்து மீட்கப்பட்ட 303 பேரையும் இலங்கைக்கு எடுப்பதற்கு எவ்வளவோ முயற்சி செய்கின்றார்கள். ஆனால், நாங்கள் இரண்டு வருடங்களாக இங்கே சிக்கித் தவிக்கின்றோம். எங்களை எமது நாட்டுக்கு எடுப்பதற்கான எந்தவிதமான வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப்படவில்லை.

நாங்கள் நாட்டை விட்டு, இவ்வாறான போலி முகவர்களை நம்பி புறப்பட்டது தவறுதான். அதனை நாங்கள் தற்போது உணர்ந்துள்ளோம். எனவே, தயவுசெய்து எமது நாட்டு உயர்மட்ட அதிகாரிகள் எங்களை மன்னித்து, எங்களை எங்களது நாடுகளுக்கு திருப்பி எடுக்கும்படி தயவாகக் கேட்டு நிற்கின்றோம் - என்றனர்.

# பதுரியா தேசிய கல்லூரி வர்த்தகப் பிரிவு
# மாணவர்களின் சந்தை





(எம்.எஸ்.அமீர் ஹுசைன்)



மாவனல்லை பதுரியா தேசிய கல்லூரி க.பொ.த. (உ.த.) வர்த்தகப் பிரிவு மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வர்த்தக சந்தையும் வணிக தின 2022 கொண்டாட்டமும் அண்மையில் மேற்படி கல்லூரியில் நடைபெற்றன.

இந்த நிகழ்வுக்கு பதுரியா தேசிய கல்லூரியின் கட்டட நிதியத்தின் தலைவரும் தொழில் அதிபருமான எம்.எம்.வதூத் பிரதம அதிதியாகவும் மற்றும் நிதியத்தின் பிரதிநிதிகள், பாடசாலை அபிவிருத்திக் குழு, பழைய மாணவர் சங்கம், பழைய மாணவியர் சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் ஆகியோர் உட்பட பலரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர். அவர்களை கல்லூரி அதிபர் ஏ.எல்.அப்துர் ரஹ்மான் வரவேற்றதோடு இவ்வாறு வர்த்தகப் பிரிவு மாணவர்களால் குறித்த வணிக தினம் கொண்டாடப்படுவதன் முக்கியத்துவம் பற்றி விளக்கமளித்தார்.

வணிக தினம் 2022ஐ முன்னிட்டு கல்லூரியின் வர்த்தகப் பிரிவு ஆசிரியர்களின் வழிகாட்டலில் வர்த்தகப் பிரிவு மாணவர்களின் வர்த்தக சுற்றுலா, பரிசுப் போட்டி போன்ற நிகழ்ச்சிகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

இக்கல்லூரியின் வர்த்தகப் பிரிவானது ரிஸ்வான், ரியாஸ், ரொஷான், ரிஸ்வியா, நஸ்லியா மற்றும் ரிஸ்லா ஆகிய தரமான ஆசிரிய ஆசிரியைகளைக்கொண்டு இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது.





மக்கள் விடுதலை முன்னணியின் ஏற்பாட்டில் 33ஆவது கார்த்திகை வீரர்கள் ஞாபகார்த்த நிகழ்வு நேற்று முன்தினம் (13) யாழிலுள்ள மக்கள் விடுதலை முன்னணியின் அலுவலகத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வானது மக்கள் விடுதலை முன்னணியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் இ.சந்திரசேகரன் தலைமையில் இடம்பெற்றிருந்ததுடன், கார்த்திகை மாவீரர்களின் அர்ப்பணிப்புகள், தியாகங்களை நினைவுகூர்ந்து மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. மேலும் இந்நிகழ்வில் மக்கள் விடுதலை முன்னணி கட்சியின் உறுப்பினர்கள், இளைஞர் அமைப்பினர் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

# முன்பள்ளி ஆசிரியர்களுக்கு விழிப்புணர்வு செயலமர்வு





(மு.தமிழ்ச்செல்வன்)

கிளிநொச்சி நகர றோட்டறி கழகத்தின் ஏற்பாட்டில், கிளிநொச்சி தெற்கு வலய முன்பள்ளி ஆசிரியர்களுக்கு பற்சுகாதார விழிப்புணர்வு தொடர்பான செயலமர்வு கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில் நடத்தப்பட்டது,

இச்செயலமர்வில் கிளிநொச்சி தெற்கு கல்வி வலயத்தைச் சேர்ந்த 120 வரையான ஆசிரியர்கள் கலந்து கொண்டனர், இவர்கள் செயலமர்வின் பின்னர் பற்சுகாதாரம் தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகளை முன்பள்ளி மாணவரிடையேயும், பெற்றோர்கள் மத்தியிலும் மேற்கொண்டனர்.

செயலமர்வில் பற்சுகாதாரம் பற்றிய ஆரம்ப உரையை வைத்திய நிபுணர் மா.தவராசா வழங்கினார், வளவாளர்களாக கலந்துகொண்ட பேராதனைப் பல்கலைக்கழக பல்மருத்துவ பீட இறுதி வருட மணவர்களான உஷாங்கன், திவாகரன் ஆகியோர் கருத்துகளை முன்வைத்து விளக்கமளித்தனர், றோட்டறி கழக உறுப்பினர் டாக்டர் கௌதமன் ஏற்பாடு செய்திருந்தார். முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் யுவராசா, ஆசிரியர்கள் கலந்துகொள்வதற்கான ஏற்பாட்டை மேற்கொண்டிருந்தார்.

# அகில இலங்கை சிவத்தொண்டர் பேரவை கண்டியில் அங்குரார்ப்பணம்







(இக்பால் அலி - இரா அ. இராமன்)





வேறு விவகாரங்களில் சிக்கிக்கொண்டு காலத்தை வீண்விரயம் செய்யாமல் தன் உள்ளத்திலுள்ள வினைகளை தாங்களே தேட வேண்டும் என்ற படித்தரம்தான் இந்த சிவத்தொண்டர் பேரவை ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கமாகும் - என்று அவுஸ்திரேலியாவிலுள்ள உலக சைவ தமிழ் ஒன்றியத்தின் தலைவர் இளங்கோவன் தெரிவித்தார்.

கண்டி மொரகஹமுல ஸ்ரீமுருகன் தேவஸ்தானமும் கண்டி தமிழ் வர்த்தக சங்கமும் இணைந்து அகில இலங்கை சிவத்தொண்டர் பேரவை அங்குரார்ப்பணம் செய்துவைக்கும் நிகழ்வு நடைபெற்றது.

இதனையடுத்து பொருளாதார நெருக்கடியான சூழலிலிருந்து இலங்கையை மீண்டெழச் செய்யும் விசேட சமய வழிபாடு ஸ்ரீமுருகன் தேவஸ்தானத்தின் அறங்காவலர் சபையின் செயலாளர் ரஞ்ஜிதா பழனியப்பன் மற்றும் தமிழ் வர்த்தக சங்கத்தின் தலைவர் அன்பழகன் ஆகியோர் தலைமையிலும் கோயிலின் பொருளாளர் பெரியய்யா செல்லையாவின் வழிகாட்டலுடன் நடைபெற்றது. அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றும்போது,

நாங்கள் யாவரும் சிவத்தொண்டர்கள். சிவனைத் தியானம் செய்பவர்கள். சிவனை நோக்கியே நாங்கள் கல்வி, துதி, ஞானம், யோகம் ஆகிய நான்கு படித்தரங்களிலும் போய்க்கொணடிருக்கிறோம். அதனால்தான் சனாதன தர்மம் - அதாவது, சனாதன தர்மம் என்றால் அது கீழே இறங்கும் மேலே போகும். அது அலைமாதிரியாகும். இந்து சமயத்தின் வரலாற்றைப் பார்க்கும்போது அது தெரியவரும். எந்தவொரு காலத்திலும் அது விழுந்ததில்லை. இதை வேறு அந்நிய மதத்திலுள்ளவர்கள், பிடித்துவிட்டாரோ போய்விட்டாரோ என்று நிறையப் பேர் கதைத்துக்கொண்டிருக்கிறார்கள். தம் பெருமை தான் அறியார் தன்மையர் என்று திருநாவுக்கரசனார் சிவபெருமானிடம் கூறுகிறார்.

எங்களுடைய பெருமை சைவ சமயத்தில் பிறந்து வளர்ந்தது பெரிய பாக்கியம் என்பது யாருக்கும் தெரியாது. ஆதலால் யாரோ வந்து புத்தகங்களையும் ஆடையும் கொடுப்பதால் அதனை யாராலும் அழிக்க முடியாது. இதன் ஆழம் தெரியாமல் இருப்பதுதான் பிரச்சினையே ஒழிய பிரச்சினைக்குரிய தீர்வு எங்களிடம்தான் இருக்கிறது.

எந்தவிதமான ஆழமும் இருக்கிறதா இல்லையா என்று தெரியாமல் வெளிவிவகாரங்களிலுள்ள பிரச்சினைகளை நாங்கள் கூடுதலாக பார்த்துக் கொண்டிருக்கிறோம். உள்ளே இருக்கின்ற இறைவனை நாங்கள்தான் தேட வேண்டும். அதை விட்டு வெளியுலகிற்குள் சென்று அங்கே முரண்பட்டுக் கொண்டிருந்தால் இவை கடைசி மட்டும் முடிவுக்கு வராது. இதனால்தான் பல சிக்கல்கள். மெய்யடியார்களின் தொண்டையும் பெருமையை அறியாமல் வெவ்வேறு விடயங்களில் சிக்கிக்கொண்டு செயற்பட முடியுமா என்று ஔவையார் தம் பாடலில் கேள்வி எழுப்புகிறார். தன் உள்ளத்திலுள்ள வினைகளை தாங்களே தேட வேண்டும் என்ற படித்தரத்தினால் தான் இந்த சிவத்தொண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளது

இதில் இலங்கை தொழிலாளர் காங்கிஸின் உப தலைவரும் நகர மற்றும் வீடமைப்பு அதிகாரசபையின் பணிப்பாளருமான பாரத் அருள்சாமி, மலேசியா நாட்டு அகில உலக சைவ ஒன்றியத்தின் பிரதிநிதி முனியாண்டி சடையாண்டி, இந்தியா தமிழகத்தில் நாமக்கல் மாவட்டத்திலுள்ள அகில உலக சைவ ஒன்றியத்தின் பிரதிநிதி தமிழ்வேல் சுவாமி கணபதி யோகி, உலக நாட்டு சைவ ஒன்றியத்தின் இலங்கைக்கான செயலாளர் ஊடகவியலாளர் தியாகு, வர்த்தக சங்கப் பிரமுகர்கள், கோயில் அறங்காவலர், சபையின் உறுப்பினர்கள் மற்றும் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் சைவத் தொண்டர்கள் கலந்துகொண்டனர்.







# சர்வதேச நீரிழிவு தினத்தை முன்னிட்டு யாழில் பேரணி




(யாழ். நிருபர்)

சர்வதேச நீரிழிவு தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையிலிருந்து யாழ். மாவட்ட செயலகம் வரை விழிப்புணர்வுப் பேரணி முன்னெடுக்கப்பட்டது.

யாழ். போதனா வைத்தியசாலை முன்பாக நேற்று (14) காலை 7.30 மணியளவில் ஆரம்பித்த பேரணி, யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதி ஊடாக வேம்படிச் சந்தியை அடைந்து, பிரதான வீதி ஊடாக மாவட்ட செயலகத்தைச் சென்றடைந்தது.

பேரணியில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர், பிரதிப் பணிப்பாளர்கள், வைத்தியர்கள், தாதியர்கள், மாவட்ட செயலக, பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

சர்வதேச நீரிழிவு தினம் நவம்பர் 14ஆம் திகதி உலகம் முழுவதும் அனுஷ்டிக்கப்படுகின்ற நிலையில், மக்களிடையே நீரிழிவு சம்பந்தமான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையால் குறித்த பேரணி ஒழுங்குசெய்யப்பட்டது.

# கொடிகாமத்தில் கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகை



(சாவகச்சேரி நிருபர்)

சாவகச்சேரி மதுவரித் திணைக்களத்தின் அதிரடியான நடவடிக்கை காரணமாக நேற்று முன்தினம் (13) பிற்பகல் கொடிகாமம், பாலாவி பகுதியில் கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகையிடப்பட்டு-உற்பத்திக்கு பயன்படுத்தப்பட்ட பெருமளவான உபகரணங்கள் மீட்கப்பட்டுள்ளன.

சாவகச்சேரி மதுவரித் திணைக்களத்தினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பாலாவி மயானத்தை அண்டிய காட்டுப் பகுதியில் கடந்த 4 மாத காலமாக இயங்கிவந்த கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகையிடப்பட்டுள்ளது.

இதன்போது கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட நபர்கள் தப்பித்துள்ள நிலையில், 1100 லீற்றர் கோடா, 58 லீற்றர் ஸ்பிரிட், 4 செப்புச் சுருள்கள், 6 பரல்கள் ஆகியன மதுவரித் திணைக்களத்தினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

மாவட்ட உதவி மதுவரி ஆணையாளர் ரோஷான் பெரேராவின் வழிநடத்தலில், சாவகச்சேரி மதுவரித் திணைக்களப் பொறுப்பதிகாரி ஆ.ராஜ்மோகன் தலைமையிலான மதுவரி சார்ஜன் மேஜர் மகேஸ்வரன், மதுவரி ஹோப்ரல் விஜயரூபன், தேவகர்ணன் ஆகியோர் அடங்கிய குழுவினர் குறித்த முற்றுகை நடவடிக்கையை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இளையதம்பி தருமபாலன் தொகுத்த மூன்று நூல்களின் வெளியீடு



(வவுனியா நிருபர்)

வவுனியா தமிழ்ச் சங்கத்தின் அனுசரணையில் இளையதம்பி தருமபாலன் தொகுத்த மூன்று நூல்களின் வெளியீட்டு நிகழ்வு வவுனியா சுத்தானந்தா இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் நேற்று முன்தினம் (13) காலை 9.30 மணியளவில் இடம்பெற்றது.

தமிழருவி த.சிவகுமாரன் தலைமையில் இடம்பெற்ற இந்நூல் வெளியீட்டு நிகழ்வில் சிறப்பு விருந்தினராக முன்னாள் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எம்.பி.நடராசா கலந்துகொண்டிருந்தார்.

முதல் நிகழ்வாக மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமாகி வரவேற்புரையை திருமதி சி.குமாரதேவியும், வாழ்த்துரையை சிவஸ்ரீ ஜெ.மயூரக் குருக்களும் நூல்களின் அறிமுகத்தை கலாசார உத்தியோகத்தர் சிவ.கஜேந்திரகுமாரும் நிகழ்த்தியிருந்தனர். அத்துடன், வேப்பங்குளம் ஞானவைரவர் ஆலய அறங்காவலர் பொ.நாகேந்திரம் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் ஆகியோர் நூல்களின் முதற்பிரதிகளைப் பெற்றுக்கொண்டனர். நூல்களின் நயவுரைகளில் சைவசமய ஆலய வழிபாட்டு அமுதம் நூல் குறித்து எஸ்.எஸ்.வாசனும், நாயன்மார்களின் வரலாறும் வழிபாடும் நூல் குறித்து கி.உதயகுமாரும் திருவாசகம் நூலை திருமதி அனுஷா மதியழகனும் உரையாற்றியிருந்தனர். நூல்களின் நன்றியுரையை வைத்திய கலாநிதி திருமதி விமலா விஸவநாதன் நிகழ்த்தியிருந்தார். இந் நிகழ்வில் கலைஞர்கள், எழுத்தாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

# வவுனியாவில் முன்னாள் போராளிகள் நலன்புரி சங்கம் அங்குரார்ப்பணம்



(வவுனியா நிருபர்)

நாட்டிலுள்ள அனைத்து முன்னாள் போராளி களையும் ஒன்றிணைத்து செயற்படுவதற்காக முன்னாள் போராளிகள் நலன்புரி சங்கம் எனும் ஒன்றை அங்குரார்ப்பணம் செய்யும் நிகழ்வு வவுனியா நகரசபை மண்டபத்தில் நேற்று முன் தினம் (13) மு.ப. 10.30 மணிக்கு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம், ஜனாதிபதி சட்டத்தரணியும் கொழும்பு தமிழரசுக் கட்சியின் தலைவருமான கே.வி.தவராசா, யாழ். மாநகர மேயர் மணிவண்ணன், முன்னாள் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன், முன்னாள் வட மாகாணசபை உறுப்பினர் செ.மயூரன், சிரேஷ்ட விரிவுரையாளர் பரந்தாமன் மற்றும் முன்னாள் போராளிகள் கலந்துகொண்டிருந்தனர்.

குறித்த அங்குரார்ப்பண நிகழ்வில் முன்னாள் போராளிகள் ஒன்றிணைவதிலுள்ள சட்டச்சிக்கல்கள், முன்னாள் போராளிகளின் அரசியல் பிரவேசம், தற்போது அங்கம் வசிக்கும் தமிழ்க் கட்சிகளின் நிலைமை, போராளிகளின் நலன் சார்ந்து செயற்படுவது, புலம்பெயர் உதவிகள் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

# யாழ். குருநகரில் 41கிலோ கிராம் கஞ்சா மீட்பு



(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் குருநகர் பகுதியில் நேற்று (14) 41 கிலோ கிராம் கஞ்சா மீட்கப் பட்டுள்ளது.

இந்தியாவிலிருந்து படகொன்றில் குருநகர் கடற்கரை பகுதிக்கு கஞ்சா கடத்தி வரப்பட்ட நிலையில், கடற்படையினரின் சோதனை நடவடிக்கையின் மூலம் கஞ்சா மீட்கப்பட்டதுடன், கஞ்சாவை கடத்தி வந்த குற்றச்சாட்டில் இளைஞன் ஒருவரையும் கைது செய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட இளைஞனையும், மீட்கப்பட்ட கஞ்சாவையும் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக யாழ்ப்பாண பொலிஸாரிடம் கடற்படையினர் ஒப்படைத்துள்ளனர்.

# லெனின் மதிவானத்தின் மறைவுக்கு ராமேஸ்வரன் எம்.பி. அனுதாபம்

(தலவாக்கலை நிருபர்)

மலையக கல்வி வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்த கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் முன்னாள் பிரதி ஆணையாளர் லெனின் மதிவானத்தின் இறப்பு செய்தி என்னை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது - என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் நிதிச் செயலாளரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மலையகத்தின் சிறந்த கல்விமான், எழுத்தாளர், திறனாய்வாளர் என பன்முக ஆளுமைமிக்க லெனின் மதிவானத்தின் மறைவையிட்டு அவர் விடுத்துள்ள இரங்கல் செய்தியிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சில வருடங்களாக சுகயீனமுற்றிருந்த அவர் மீண்டு வருவார் என்ற நம்பிக்கையில் இருந்தோம். ஆனால் எவரும் எதிர்பாராத அவரின் மறைவு செய்தியே எமக்குக் கிடைத்தது. நான் மத்திய மாகாண தமிழ்க் கல்வி அமைச்சராக இருந்தபோது எம்மோடு கல்வி மற்றும் சமூகம் சார்ந்த பல்வேறு விடயங்களில் மிகவும் நெருக்கமாக சேவையாற்றியவர் அவர். அமரர் லெனின் மதிவானம் மலையகத்தின் சிறந்த கல்விமானும் கொட்டகலை ஆசிரியர் கலாசாலையின் முன்னாள் விரிவுரையாளருமாவார்.

அவர் இலங்கையின் பல முன்னோடி தமிழ்ப் பத்திரிகைகளில் பல கட்டுரைகளை எழுதியுள்ளதுடன், முன்னாள் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் பிரதி ஆணையாளருமாக பணியாற்றியுள்ளார். அன்னாருக்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் சார்பாக ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன், அவரது ஆத்மா சாந்தியடையவும் இறைவனை பிரார்த்திக்கின்றேன். அன்னாரின் இழப்பு மலையக கல்வி வரலாற்றில் ஈடுசெய்ய முடியாத இழப்பாகும் - என்றார்.

# அப்துல் கலாம் அறக்கட்டளையின் நிர்வாகியுடன் இலங்கைக் குழு சந்திப்பு



(கண்டி செய்தியாளர்)

இலங்கை, இந்தியா உட்பட உலகளாவிய ரீதியில் பல்வேறு நாடுகளில் சமூகப் பணிகளில் ஈடுபட்டு வரும் அப்துல் கலாம் ஞாபகார்த்த உலகளாவிய அறக்கட்டளையின் நிர்வாக நம்பிக்கையாளருக்கும், இலங்கை கிளையினருக்கும் இடையே இருதரப்பு கலந்துரையாடலொன்று இடம்பெற்றது.

மறைந்த இந்திய குடியரசுத் தலைவர் ஏ.பி.ஜே.அப்துல் கலாமின் பேரனாகிய ஏ.பி.ஜே.எம்.ஜே.சேக் சலீமுடன் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் இலங்கையில் மேற்கொள்ளப்படவேண்டிய பொதுச் சேவைகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டதாக அதன் இலங்கைக் கிளைத் தலைவரான கண்டியைச் சேர்ந்த தேசமான்ய, தேச கீர்த்தி என். கருணாகரன் தெரிவித்தார்.

மேற்படி அமைப்பின் இலங்கைக் கிளையின் சட்ட ஆலோசகர் சட்டத்தரணி பிரதீப் விஜேரத்னவால் ஏ.பி.ஜே.எம்.ஜே.சேக் சலீம் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.

# பொதுமக்களின் கருத்துகளைக்கொண்டே அரச நிறுவனங்களின் திறமை தீர்மானிக்கப்படும்

## கண்டி மாவட்ட செயலாளர் தெரிவிப்பு



(கண்டி செய்தியாளர்)

அரச திணைக்களங்கள் மற்றும் பொது நிறுவனங்கள் பற்றி பொதுமக்கள் தெரிவிக்கும் கருத்துகளிலிருந்தே அரச நிறுவனங்களின் உண்மையான வினைத்திறனைக் கண்டுகொள்ள முடியுமே தவிர, போட்டிகள் மூலம் பரிசு வழங்கி அதனூடாக செயற்பாடுகள் வெற்றிகரமாக இடம்பெற்றுள்ளன எனக் கூற முடியாது - என்று கண்டி மாவட்ட செயலாளர் சந்தன தென்னகோன் தெரிவித்தார்.

கண்டி செயலக கேட்போர் கூடத்தில் இடம் பெற்ற கூட்டமொன்றிலே அவர் இதனைத் தெரிவித்தார். கண்டி, மாத்தளை, நுவரெலியா மற்றும் கேகாலை மாவட்ட அரச நிறுவனங்களின் வினைத்திறன்காண் போட்டியின் பரிசளிப்பு வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரச நிறுவனம் ஒன்று பற்றி மற்றொரு நிறுவனம் வழங்கும் புள்ளிகளை வைத்து அது திறமையாக சேவை செய்கிறது என்ற முடிவுக்கு வரமுடியாதுள்ளதென நான் நினைக்கிறேன். உண்மையான வினைத்திறன் பொதுமக்களது விமர்சனத்தில்தான் தங்கியுள்ளது.

வினைத்திறன் பொதுமக்கள் தொடர்பாகவே இருக்கவேண்டும். எனவே, திடீர் விஜயம் செய்து அவற்றை கணிப்பிடுவது நல்லதென நினைக்கறேன் - என்றார்.



**கண்டி இந்து சிரேஷ்ட பாடசாலையின் நீண்டகால குறைபாடாகக் காணப்படும் கட்டடப் பிரச்சினை தொடர்பாக மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே நேரடி விஜயமொன்றை மேற்கொண்டு அவதானித்தார். இதன்போது அமைச்சு அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.**

# மஸ்கெலியாவில் ஐயப்ப பூஜை

(மஸ்கெலியா)

மஸ்கெலியா ஸ்ரீ சண்முகநாதர் ஆலயத்தில் ஐயப்ப பக்தர்களுக்கு மாலை அணிவிக்கும் நிகழ்வும் விசேட பூஜைகளும் கார்த்திகை முதலாம் திகதியான எதிர்வரும் 17ஆம் திகதி வியாழக்கிழமை இடம்பெறவுள்ளது. அன்றைய தினம் காலை 6.30 மணிக்கு திருப் பள்ளியெழுச்சியுடன் பூஜைகள் ஆரம்பமாகவுள்ளன.

மேலும், காலை 7.30 மணிக்கு மகா கணபதி ஹோமம், 8.30 மணிக்கு விக்னேஷ்வரர் பூஜை 10 மணிக்கு ஐயப்ப சுவாமிக்கு விசேட அபிஷேகம் இடம்பெறவுள்ளன.

அதனைத் தொடர்ந்து ஐயப்ப சுவாமிமார்களுக்கு விரத மாலை அணிவிக்கப்படவுள்ளது. அன்றைய தினம் இரவு 07 மணிக்கு 18 படிபூஜை இடம்பெறவுள்ளது.

# வீதி பெயர்ப்பலகையின் அவலநிலை




(கண்டி செய்தியாளர்)

கண்டி மாநகர சபை எல்லைக்குட்பட்ட அஸ்கிரிய, காமினி திசாநாயக்க மாவத்தையின் பெயர்ப்பலகை கழன்று சுமார் 6 மாதங்களுக்கு மேலானபோதும் இதுவரை அதனை செப்பனிட கண்டி மாநகர சபை நடவடிக்கை எடுக்கவில்லையென ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணியின் கண்டி மாநகர சபை ஒருங்கிணைப்பளர் எம்.தீபன் நேற்று தெரிவித்தார். இந்தப் பாதை ஊடாக தினமும் கண்டி மாநகர சபையின் உயர் அதிகாரிகள் பலர் பயணிப்பதாகவும் அவர்களின் பார்வையில் கூட இது தென்படவில்லையெனவும் அவர் கவலை தெரிவித்தார்.

இப்பாதையால் தினமும் புதியவர்கள் பலர் பயணிப்பதாகவும் பாதைகளை அறிந்துகொள்ள முடியாது சிரமத்துக்குள்ளாவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

எனவே, இந்த வீதியின் பெயர்ப்பலகை சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

# மனைவியின் கள்ளக் காதலனை மரத்தில் கட்டி அடித்துக் கொலை

(ஏ.ஏ.எம்.பாயிஸ்)

தனது மனைவியின் கள்ளக் காதலனை கணவன் மரத்தில் கட்டி அடித்துக் கொலை செய்த சம்பவமொன்று இரத்தினபுரி குருவிட்ட ஹிதெல்லன பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

குருவிட்ட, ஹிதெல்லன பிரதேசத்தில் ஒருவரை மரத்தில் கட்டி மூர்க்கத்தனமாகத் தாக்குவதாக குருவிட்ட பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் தாக்குதலுக்குள்ளான நபரை வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர்.

எனினும், சேர்க்கப்பட்ட சிறிதுநேரத்தில் தாக்குதலுக்குள்ளான 24 வயது நபர் மரணித்துள்ளார். குறித்த நபர் தனது மனைவியுடன் தகாத உறவு வைத்திருந்தமை தொடர்பில் அறிந்திருந்த கணவன் சந்தர்ப்பம் வரும்வரை காத்திருந்து இத்தாக்குதலை மேற்கொண்டுள்ளமை விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது. இச்சம்பவம் தொடர்பில் குருவிட்ட பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# உற்பத்தித் திறன் விருது வழங்கும் விழாவில் அட்டாளைச்சேனை செயலகத்துக்குப் பாராட்டு



(திராய்க்கேணி நிருபர் )

தொழில் அமைச்சின் கீழ் இயங்குகின்ற தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தினால் நடத்தப்படுகின்ற அரச நிறுவனங்களுக்கிடையிலான உற்பத்தித் திறன் போட்டி நாடளாவிய ரீதியில் கடந்த வருடம் நடைபெற்றது.

இதில் அட்டாளைச்சேனை பிரதேச செயலகம் முதன்முறையாக பங்குபற்றி சிறப்பு பாராட்டுப் பரிசை (Special Commendation ) வென்றது.

இதற்கான பரிசளிப்பு நிகழ்வு அண்மையில் மொனராகல மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.அகமது ஷாபிர் கலந்து கொண்டு சிறப்பு பாராட்டுப் பரிசு (Special Commendation) பெற்றமைக்கான நினைவுச் சின்னம் மற்றும் சான்றிதழையும் பெற்றுக் கொண்டார்.

# தேசிய, மாகாண மட்ட சாதனையாளர்களுக்கு அமோக வரவேற்பளித்த மருதமுனை ஹம்ரா




(நூருல் ஹுதா உமர்)

கல்முனை கல்வி வலய மருதமுனை கமு/கமு/ அல்-ஹம்றா வித்தியாலயத்திலிருந்து சென்று தேசிய மற்றும் மாகாண மட்டங்களில் சாதித்த மாணவர்களுக்கு வரவேற்பளித்து பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலை அதிபர் ஐ.உவைதுல்லாஹ்வின் தலைமையில் நேற்று (14) பாடசாலை திறந்தவெளி அரங்கில் இடம்பெற்றது.

தேசிய மட்ட பேச்சுப்போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்ற முஹம்மட் வலீத் பாத்திமா ஜெஸ்னா, மாகாண மட்ட சமூக விஞ்ஞானப் போட்டியில் முதலிடம் பெற்ற எஸ்.எம்.அபாப், ஏ.எஸ். ஹயானி, சதுரங்கப் போட்டியில் தனிப் பிரிவில் முதலிடம் பெற்ற எம்.எஸ்.ஆயிஷா, ஆங்கில தினப்போட்டியில் மாகாணத்தில் இரண்டாமிடத்தைப் பெற்ற எம்.அனுபா ஆகியோரை பாடசாலை சமூகம் வரவேற்பளித்து நினைவுச்சின்னங்கள், பரிசில்கள், பணப்பரிசு, சான்றிதழ்கள், பதக்கங்கள் அணிவித்து பாராட்டி கௌரவித்தது.

இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வில் பாடசாலையின் பழைய மாணவரும், கல்முனை வலயக்கல்வி அலுவலகப் பணிப்பாளருமான எம்.எஸ்.எஸ்.நஜீம் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

மேலும் கல்முனை வலயக்கல்வி அலுவலக உதவி கல்விப் பணிப்பாளர் கே.குணசேகரன், ஓய்வுபெற்ற கோட்டக்கல்வி அதிகாரி ஏ.எல்.சஹாப், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக்குழு செயலாளர் பீ.எம்.நஸ்ருதீன், தேசிய மட்ட பேச்சுப்போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்ற முஹம்மட் வலீத் பாத்திமா ஜெஸ்னாவின் தந்தையும் உள்ளூராட்சி செயற்திட்ட ஆலோசகருமான எம்.ஐ.எம்.வலீத், அவரின் பாரியார் உட்பட பாடசாலை பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசாரா உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

கடந்த காலங்களிலும் பல்வேறு சாதனை களைப் புரிந்து அண்மையில் தேசிய மட்ட பேச்சுப் போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்றிருந்த முஹம்மட் வலீத் பாத்திமா ஜெஸ்னாவின் உரையும் இந்நிகழ்வில் இடம்பெற்றமை சிறப்பம்சமாகும்.

# ஐ.நா. மனித உரிமைகள் அமைப்பின் மட்டு. பிரதிநிதிகளால் மரநடுகை



(மட்டக்களப்பு நிருபர்)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் அமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பிரதிநிதிகளால் மர நடுகை நிகழ்வும் கூட்டமும் கடந்த சனிக்கிழமை (12) மட்டக்களப்பில் இடம்பெற்றது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் அமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பணிப்பாளர் ரஜனிகாந் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்ட தலைவர் வசந்தராஜா மற்றும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் அமைப்பின் மாவட்ட நிர்வாகிகள், சமூக செயற்பாட்டாளர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். இதன்போது சூழலுக்கு நன்மைதரும் நிழல் மரங்களும் நடப்பட்டதுடன், தொடர்ந்து மன்றேசாவில் கூட்டமும் இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் மனித உரிமைகள் செயற்பாடுகள தொடர்பாகவும், அமைப்பின் எதிர்கால திட்டங்கள் பற்றியும் கலந்துரையாடப்பட்டது.



இன, மத மொழிகளைக் கடந்து இங்குள்ள அனைத்து மக்களுக்கும் தமது அமைப்பு தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் பணியாற்றும் என ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் அமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பணிப்பாளர் ரஜனிகாந்த் தெரிவித்தார்.



அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் ஆதார வைத்தியசாலை அக்கரைப்பற்று கிளையினால் ஒரு தொகுதி மருத்துவப் பொருட்கள் வைத்திய அத்தியட்சகர் பாக்டர் ஜி. போல் றொஷான் மற்றும் பிரதம மருந்தகவியலாளர் ஐ.எவ்.நாதிரா ஆகியோரிடம் கடந்த வியாழக்கிழமை கையளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் அக்கரைப்பற்றுக் கிளைத் தலைவரும் பொது சத்திர சிகிச்சை நிபுணருமான டொக்டர் றிப்சான் ஜெமீல், செயலாளர் டொக்டர் ஏ.சீ.அப்துல் றசாக் மற்றும் அதன் நிறைவேற்றுக்குழு உறுப்பினர்களான டொக்டர் எம்.எச்.எம். சனூபர், டொக்டர் எஸ்.எம்.ஏ. றிகான் ஆகியோர் கலந்துகொண்டனர். (சியாத்.எம்.இஸ்மாயில்)

# சிறுவர் இயற்கை ஆர்வலர் போட்டியில் செங்கலடி மாணவனுக்கு இரண்டாமிடம்



(மட்டக்களப்பு நிருபர்)


தேசிய சிறுவர் இயற்கை ஆர்வலர் போட்டியில் செங்கலடி விவேகானந்தா வித்தியாலயத்தைச் சேர்ந்த அனுன் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

தேசிய ரீதியில் நடைபெற்ற சிறுவர் இயற்கை ஆர்வலர் போட்டியில் மட்டக்களப்பு மாவட்டம், செங்கலடி விவேகானந்தா வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவன் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளார். தரம் ஒன்று தொடக்கம் 6 வரையிலான மாணவர்களிடையே தேசிய விஞ்ஞான மன்றத்தினால் நடத்தப்பட்ட இவ்வருடத்திற்கான சிறுவர் இயற்கை ஆர்வலர் போட்டியில் மட்.ககு.செங்கலடி விவேகானந்தா வித்தியாலயத்தில் தரம் 6இல் கல்வி பயிலும் ஆதவன் அனுன் எனும் மாணவன் தேசிய மட்டத்தில இரண்டாம் இடத்தைப் பெற்று பாடசாலைக்கும் மாவட்டத்திற்கும் பெருமை சேர்த்துள்ளார்.

மாணவர்கள் வாழும் சூழலை விஞ்ஞான நோக்கத்தேடு ஆய்ந்தறியும் கற்றலை சிறுபராயத்திலிருந்தே வளர்ப்பது இப்போட்டியின் நோக்கமாகும். உலக விஞ்ஞான தினமான கடந்த வியாழக்கிழமை (10) இப்போட்டியில் தேசிய மட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்ற மேற்படி மாணவனை பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வும், உலக விஞ்ஞான தின நிகழ்வும் மேற்படி பாடசாலையில் வித்தியாலய அதிபர் க.சந்திரகுமார் தலைமையில் நடைபெற்றன.

இதன்போது பாடசாலை மாணவர்கள் கண்டுபிடித்த பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்ததோடு, தேசிய மட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்ற ஆதவன் அனுன் என்ற மாணவரும் இதன்போது பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார்.

# திருமலை பிரதேச செயலகத்தில் மக்களுக்கான இலகு அரச சேவை



(கிண்ணியா நிருபர்)

திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலகத்திற்கு திங்கள் மற்றும் புதன்கிழமைகளில் சேவைகளைப் பெறுவதற்காக நூற்றுக்கணக்கான பொதுமக்கள் வருவதுடன், அவர்களுக்கான சேவைகள் கிரமமான முறையில் வழங்குவதற்கான ஏற்பாடுகளை பிரதேச செயலாளர் பி.தனேஸ்வரன் தலைமையிலான பணிக் குழாமினர் நடைமுறைப்படுத்தி வருகின்றனர்.

அவ்வகையில் குறித்த தினங்களில் பிரதேச செயலாளர் தம் பிரத்தியேக அலுவலக அறையிலிருந்து கீழிரங்கி பிரதேச செயலக கட்டடத்தின் நுழைவாயில் அருகே வருகை தந்து மக்களுக்கான சேவைகளை வழங்கி வருவதனை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. மக்களது பிரச்சினைகள், தேவைகள் இனங்காணப்பட்டு உரிய உத்தியோகத்தர் குழாமிடம் அவர்கள் சேவை பெறலுக்கு அனுப்பப்படுகின்றனர்.

சேவை பெற வரும் மக்கள் அமர்வதற்காக பிரத்தியேக இருக்கை வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. மக்களுக்கான சேவைகளை சிரமமின்றி குறுகிய நேரத்தினுள் வழங்கும் வகையில் இவ்விசேட ஒழுங்குகள் குறித்த தினங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பிரதேச செயலாளர் தெரிவித்தார்.

மக்களுக்கான சேவைகளை அவர்களது காலடியை நோக்கி விரிவுபடுத்தல் இதன்மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

திகதி 13.11.2022 ஞாயிற்றுக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4938
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 6,256,000.00
ஆங்கில எழுத்து E வெற்றி இலக்கங்கள் 9 8 4 3 6 6
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.43,700,188.00

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் 3180
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,664,240.00
ஆங்கில எழுத்து W வெற்றி இலக்கங்கள் 13 22 60 75
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 60,067,281.20

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 1393
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,732,740.00
வெற்றி இலக்கினம் மகரம் வெற்றி இலக்கங்கள் 5 9 7 6 2 9
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,679,274.80

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 968
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,937,780.00
வெற்றி இலக்கினம் O வெற்றி இலக்கங்கள் 10 27 41 58
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 132,932,622.00


ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 247
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 6,438,060.00
இலக்கினம் துலாம் வெற்றி இலக்கங்கள் 04 22 30 61
விசேட இலக்கினம் துலாம்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,851,903.40

கோடி 28 + Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1286
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,564,300.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 280,355,046.00
G 04 25 41 54 78
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk
இலக்கம் 32, தேவுமாவத்தை N.W.I. முதலிகே மாவத்தை, கொழும்பு 01

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# விவசாயிகளுக்கு கரம் கொடுக்கும் கிழக்குப் பல்கலைக்கழகம்



கிழக்குப் பல்கலைக்கழகத்தின் தொழில் மற்றும் சமூக இணைப்பிற்கான மையம் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட வர்த்தக கைத்தொழில் விவசாய சம்மேளனம் என்பன இணைந்து "பொருளாதார நெருக்கடி மற்றும் ஒருங்கிணைந்த விவசாயத்திற்கான தீர்வுகள்" எனும் தொனிப்பொருளில் மாவட்ட விவசாயிகளின் எதிர்கால நன்மை கருதிய விசேட கலந்துரையாடலொன்று கடந்த 10ஆம் திகதி மட்டக்களப்பில் இடம்பெற்றது.

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் தொழில் மற்றும் சமூக இணைப்பிற்கான மையத்தின் பணிப்பாளரும் கிழக்குப் பல்கலைக்கழக வைத்திய சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞான பீட சிரேஷ்ட விரிவுரையாளருமான வைத்திய கலாநிதி கே.அருளானந்தம் தலைமையில் கிழக்குப் பல்கலைக்கழக வைத்திய சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞான பீட அரசடி வளாகத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற குறித்த விசேட கலந்துரையாடலுக்கு விசேட விருந்தினர்களாக கிழக்கு பல்கலைக் கழகத்தின் உபவேந்தர் வல்லிபுரம் கனகசிங்கம், மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் கே.ஜெகன்நாத், கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் ஏ.பகீரதன், மட்டக்களப்பு மாவட்ட வர்த்தக கைத்தொழில் விவசாய சம்மேளனத்தின் விவசாயப் பிரிவிற்கான தலைவரும் மட்டக்களப்பு தமிழ்ச் சங்கத்தின் தலைவருமான வீ.ரஞ்சிதமூர்த்தி, மட்டக்களப்பு மாவட்ட வர்த்தக கைத்தொழில் விவசாய சம்மேளனத்தின் விவசாயப் பிரிவிற்கான செயலாளர் அருளானந்தராஜா ரமேஸ் உள்ளிட்டோர் கலந்துகொண்டு கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளனர்.

தற்போதைய சூழலில் பாரிய சவாலுக்குள்ளாகிவரும் நிலையிலுள்ள விவசாயத்தையும் அதனை மேற் கொள்ளும் விவசாயிகளுக்குமான தீர்வைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கில் இடம்பெற்ற குறித்த ஆரம்பகட்ட கலந்துரை யாடலின்போது விவசாயத்துறை சார்ந்து மேற்கொள்ளப்பட வேண்டிய ஆய்வுகள், விவசாயத்துறைக்காக கிழக்குப் பல்கலைக்கழத்தினால் ஆற்றப்படவுள்ள சேவைகள், கிழக்குப் பல்கலைக்கழகத்தின் தொழில் மற்றும் சமூக இணைப்பிற்கான மையத்தினால் விவசாயத்துறைக்காக ஆற்றப்படவுள்ள விடயங்கள், நவீன முறையிலான விவசாயத் திட்டத்தினை நடைமுறைப்படுத்துதல் தொடர்பான விடயங்கள், காலநிலை மற்றும் ஒட்டு முறைகள், சுகாதாரமான உணவு உற்பத்தி தொடர்பான மேலும் பல விடயங்கள் தொடர்பாக இதன்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டதுடன், வளவாண்மைகளும் அனுபவப்பகிர்வுகளும் இடம்பெற்றிருந்தன.

இக்கலந்துரையாடலில் வைத்திய நிபுணர் அருள்ஜோதி, கரடியனாறு விதைப்பண்ணையின் பிரதிப் பணிப்பாளர் சிவநேசன், தொழில்நுட்ப ஆலோசகர் நாகலிங்கம் சுரேஸ்குமார், விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகள், விவசாயிகள் உள்ளிட்ட துறைசார் திணைக்களங்களின் அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் தொழில் மற்றும் சமூக இணைப்பிற்கான மையம் ஆரம்பிக்கப்பட்ட நாள் தொடக்கம் சமூகம் சார்ந்த பல்வேறுபட்ட செயற்பாடுகளை கிழக்குப் பல்கலைக்கழகம் ஆற்றிவருவதுடன், அதன் ஒரு செயற் பாடாகவே விவசாயத்துறையை கட்டி யெழுப்பும் நோக்கில் இன்றைய கலந்துரை யாடல் இடம்பெற்றதாக கிழக்குப் பல்கலைக்கழகத்தின் தொழில் மற்றும் சமூக இணைப்பிற்கான மையத்தின் பணிப் பாளரும் கிழக்குப் பல்கலைக்கழக வைத்திய சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞான பீட சிரேஷ்ட விரிவுரையாளருமான வைத்திய கலாநிதி கே.அருளானந்தம் இதன்போது தெரிவித்தார்.

## போடியார் புலம்பல்!



கட்சிப் பேதங்கள உதறி தள்ளிப்போட்டு இண்டைக்கு சம்பந்தரிட ஊட்ட கொழும்புக்கு வரட்டாம் எண்டு தமிழ்க் கட்சிகள கூப்பிட்டிருக்காரு எலுவா?

சோக்கான கூட்டம் கனகாலத்துக்கு புறகு நடக்கப்போகுது... இதில தமிழ்த் தேசியக் கூட்டமைப்பா ஒரு கட்சியாக இருந்து பத்தாக மாறுனவங்க பதறி அடிச்சி ஓடுனாலும் சைக்கிளில சவாரி செய்யிற தம்பியவங்க போறமாதரி இல்ல!

கூட்டம் நடக்கிற படம் மட்டும் வரும் ஆனா ஒண்டுமே நடக்கா இருந்து பாருங்கவன்!

# சாய்ந்தமருதில் பிரதேச நல்லிணக்கக் குழு ஆரம்ப நிகழ்வும் பயிற்சிப் பட்டறையும்




(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

"சமாதானமும் சமூகப் பணியும்" எனும் (PCA) நிறுவனத்தினால் செயற்படுத்தப்பட்டுவரும் செயற்பாடுகளில் ஒன்றாக சாய்ந்தமருது பிரதேச நல்லிணக்கக் குழு (DIRF) அங்குரார்ப்பண நிகழ்வும், ஒரு நாள் பயிற்சிப் பட்டறையும் "சமாதானமும் நல்லிணக்கமும்" என்ற தொனிப்பொருளில் நேற்றுமுன்தினம் (13) இடம்பெற்றன.

இதில் சமூகங்களுக்கிடையே எவ்வாறு சமூக ஒற்றுமையையும் புரிந்துணர்வையும் ஏற்படுத்தலாம், சிவில் சமூகத்தின் தற்கால வகிபாகம் என்ன?, எதிர்காலத்தில் சமூக ஒற்றுமைக்காக அம்பாறை மாவட்டத்தில் என்ன செயற்பாடுகளை மேற்கொள்ளலாம், மூவினங்களுக்கிடையே தொடர்ந்தும் ஒற்றுமையை தக்கவைத்துக்கொள்ள என்ன வழிமுறைகளை முன்னெடுக்கலாம் என்ற பல விடயங்கள் பற்றிக் கலந்துரையாடப்பட்டன.

நிகழ்வில் ISD நிறுவனத்தின் பிராந்திய திட்ட ஆலோசகர் எம்.எஸ். ஜலீல் வளவாளராகக் கலந்து கொண்டார்.

முழுநாள் நிகழ்வாக இடம்பெற்ற இந்நிகழ்வில், 30 உறுப்பினர்கள் புதிதாக இணைந்துகொண்டனர்.

"சமாதானமும் சமூகப் பணியும்" நிறுவனமானது (PCA) நாட்டில் சமாதானம் மற்றும் சமூக ஒற்றுமையை இனங்களுக்கு இடையில் ஏற்படுத்துவதற்காக செயற்பட்டுவரும் ஒரு சமூக நிறுவனமாகும்.

இப்பயிற்சிப் பட்டறையில் சமாதானமும் சமூக நிறுவனத்தின் திட்ட முகாமையாளர் தேசமான்ய ரீ. ராஜேந்திரன், திட்ட உத்தியோகத்தர் எம்.எல்.ஏ.மாஜித், மாவட்ட நல்லிணக்கக் குழு இணைப்பாளர் எஸ்.எல்.அஸீஸ், சாய்ந்தமருது பிரதேச சமாதான சமூகப் பணி நல்லிணக்கக் குழு இணைப்பாளர் அகமட்லெப்பை ஆதம்பாவா, மாவட்ட செயலக அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைப்பாளர் ஐ.எல்.ஏ.இர்பான் மற்றும் பிரதேச நல்லிணக்கக் குழு உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

# மழையிலும் பெரும்போக பயிர்ச்செய்கை மும்முரம்



(கந்தளாய் நிருபர்)

திருகோணமலை மாவட்டத்தில் கந்தளாய் நீர்ப்பாசனப் பொறியியலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பெரும்போக வேளாண்மை பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன.

இம் மாவட்டத்தில் கந்தளாய், மூதூர், கிண்ணியா ,தம்பலகாமம் மற்றும் வான் ஏல போன்ற இடங்களில் பயிர்ச்செய்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

கந்தளாய் குளத்தின் நீரைப் பயன்படுத்தி பதினாறாயிரத்து எண்ணூறு ஏக்கர் நெற்பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். இதில் வயல் அடித்தல், வரம்பு கட்டுதல், விதைத்தல் போன்ற நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

விவசாயிகள் அடை மழை என்றும் பாராமல் விவசாய செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

# பயிற்சிநெறிக்கு விண்ணப்பங்கள் கோரல்

(அக்கரைப்பற்று நிருபர்)

கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களம், அக்கரைப்பற்று பிரதேச செயலகப் பிரிவில் வசிக்கும் பெண்களுக்கு தையல், கைவினை மற்றும் மனையியல் பயிற்சிநெறிக்கான விண்ணப்பங்களை கோரியுள்ளது.

அக்கரைப்பற்று மாதர் அபிவிருத்தி பயிற்சி நிலையத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள இக்கற்கைநெறியில் இணைந்துகொள்ளும் மாணவர்களுக்கு மாதாந்தம் 6 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது. 2023.01.03ஆம் திகதியன்று 17 வயதிற்கு குறையாதவராகவும் 40 வயதிற்கு மேற்படாதவராகவும் இருப்பதுடன், 10ஆம் தரத்தில் பாடசாலை கல்வியை பூர்த்தி செய்தவராகவும், அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் 03 வருடங்களுக்கு மேலாக வசித்து வருபவராகவும் இருத்தல் வேண்டும்.

கற்கைநெறியில் இணைந்துகொள்ள விரும்புபவர்கள் 2022.12.01ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பப்படிவத்தை பூர்த்திசெய்து அக்கரைப்பற்று பிரதேச செயலகப் பிரிவில் ஒப்படைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

# மைதானம் கோரி பொத்துவிலில் இளைஞர்கள் பாரிய ஆர்ப்பாட்டம்





(றியாஸ் இஸ்மாயில்)

பொத்துவில் சுயாதீன இளைஞர் அமைப்பினர் பொத்துவில் பிரதேசத்திற்கென்று பொது விளையாட்டு மைதானம் வேண்டும் என்ற கோரிக்கையினை முன்வைத்து கொட்டும் மழைக்கு மத்தியில் ஆவேசத்துடன் நேற்று (14) கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பொது மைதானத்திற்காக ஒன்றிணைவோம், அரசியல் பேதமில்லை, வேறுபாடு என்றுமில்லை, ஓரணியில் நிற்போம், பேரணியாய் செல்வோம், இனவாதம் வேண்டாம், இளைஞர்களுக்கு மைதானத்தை பெற்றுத்தா எனும் தொனிப் பொருளில் இப்பேரணி பொத்துவில் பூட்சிட்டி அருகாமையில் ஆரம்பித்து பிரதான வீதி ஊடாக பொத்துவில் பிரதேச செயலகம் வரையும் கோஷங்களை எழுப்பியவாறு சென்றனர். போக்குவரத்திற்கு எந்தவிதமான இடைஞ்சலும் ஏற்படவில்லை.

பொத்துவில் பிரதேச செயலாளர் எம்.ஐ.பிர்னாஸை பிரதான நுழைவாயிலுக்கு பேரணியினர் வரவழைத்து தங்களது கோரிக்கை அடங்கிய மகஜரை பகிரங்கமாக வாசித்து அவரிடம் ஒப்படைத்தனர்.

இதன்போது பொத்துவில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையில் பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டனர்.

பொத்துவில் பிரதேச செயலாளர் கருத்து தெரிவிக்கையில்,

இது விடயமாக உங்களது கோரிக்கையை அம்பாறை மாவட்ட செயலாளருக்கு தெரியப் படுத்துகின்றேன். இது விடயமாக ஏற்கனவேயும் தெரியப்படுத்தி யுள்ளேன். உங்களது ஆவணங்கள் சரிபார்க்கப்பட்டு நீங்கள் கூறும் இடம் அரச காரணியாக இருக்கும் பட்சத்தில் பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்படும் - என்றார்.

இந்த மகஜரில் 30 விளையாட்டுக்கழகத்தினரும், 20 பாடசாலைகளும் ஒப்பமிட்டுள்ளன. இப் பேரணியில் சுமார் 500இற்கும் மேற்பட்ட இளைஞர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# அஷ்ரப் வைத்தியசாலைக்கு அபிவிருத்திக் குழு நியமனம்

(பெரியநீலாவணை நிருபர்)

சுகாதார அமைச்சர் கெஹேலிய ரம்புக்வெல வினால் 15.06.2022ஆம் திகதி முதல் எதிர்வரும் மூன்று வருடங்களுக்கு தொழிற்படும்வண்ணம் கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்திய சாலையின் புதிய அபிவிருத்திக் குழு நியமனம் செய்யப்பட்டுள்ளது.

இந்த அபிவிருத்திக் குழு நியமனத்தில் கல்முனை பிராந்தியத்தை பிரதிநிதித்துவப்படுத்தி பின்வரும் அங்கத்தவர்கள் வைத்தியசாலையின் அபிவிருத்திக் குழு உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

பேராசிரியர் ஏ.எம்.ரஸ்மி - தென்கிழக்குப் பல்கலைக்கழகம், சட்டத்தரணி சாரிக் காரியப்பர், வைத்தியர் எம்.ஷாஹீர் ஜமால்தீன் (சனா), ஜனாப். எம்.ஐ.ஏ.ரசாக் - அதிபர், அல்-மிஸ்பாஹ் மகா வித்தியாலயம், ஜனாப் ஏ.எல்.ஜாபீர் - அதிபர், ஸாஹிரா கல்லூரி (தேசிய பாடசாலை), ஜனாப். எம்.எம்.எம்.காமில் - முகாமைத்துவ சேவைகள் உத்தியோகத்தர், தென்கிழக்குப் பல்கலைக்கழகம், ஜனாப் - எம்.எம்.சமீலுல் இலாஹி - இளைஞர் சேவைகள் உத்தியோகத்தர், கலாநிதி ஏ.எம்.எம். நவாஸ் (சிரேஷ்ட விரிவுரையாளர் தென்கிழக்குப் பல்கலைக்கழகம்), வைத்தியர் எம்.சி.எம்.ஜுனைட், மிருக வைத்தியர் நிபுணர், ஏ.எம்.நௌபல் (வீதி அபிவிருத்தி அதிகாரசபை).

மேற்படி அபிவிருத்திக் குழுவிலிருந்து பின்வரும் அங்கத்தவர்கள் அதன் நிர்வாக உறுப்பினர்களாகவும் ஏனைய அங்கத்தவர்கள் மூலம் தெரிவுசெய்யப்பட்டனர்.

பேராசிரியர் ஏ.எம்.ரஸ்மி (தலைவர்), சட்டத்தரணி சாரிக் காரியப்பர் (உப தலைவர்), ஜனாப். எம்.ஐ.எம்.ரசாக் - அதிபர் (பொருளாளர்)

# அனுமதியின்றி மணல் ஏற்றிவந்த உழவு இயந்திரத்திற்கு அபராதம்

(கோணாவத்தை நிருபர்)

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் அனுமதிப்பத்திரமில்லாமல் மணல் ஏற்றிவந்த உழவு இயந்திர உரிமையாளருக்கு அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தினால் தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

அட்டாளைச்சேனை அஷ்ரப் நகர் பிரதேசத்தில் அனுமதிப்பத்திரமில்லாமல் மணல் ஏற்றிவந்த உழவு இயந்திரத்தை அக்கரைப்பற்று பொலிஸார் கைப்பற்றியிருந்தனர்.

கைப்பற்றப்பட்டிருந்த வாகனத்தை அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தில் நேற்று (14) ஆஜர்படுத்தியபோது ஐம்பதாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டது. வாகன உரிமையாளரினால் குறித்த தண்டப்பணம் செலுத்தப்பட்டதோடு வாகனமும் விடுவிக்கப் பட்டது.

# அம்பாறை மாவட்ட செயலகத்தின் இடமாற்ற சபை கூட்ட விழிப்பூட்டல்

(நூருல் ஹுதா உமர்)

அம்பாறை மாவட்ட செயலகத்தின் வருடாந்த இடமாற்ற சபை எதிர்வரும் 22ஆம் திகதி கூடுகின்றது.

இம் மாவட்ட செயலகத்தின் நிர்வாகத்துக்கு உட்பட்ட பிரதேச செயலகங்களில் கடமையாற்று கின்ற ஊழியர்களின் 2023ஆம் ஆண்டுக்கான இடமாற்ற கோரிக்கைகளை பரிசீலிப்பார்கள். இந்நிலையில், வருடாந்த இடமாற்றத்துக்கு விண்ணப்பித்துள்ள ஊழியர்கள் கடைசி நேரம்வரை காத்திருக்க வேண்டாம் என்று அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கம் கோரியுள்ளது.

ஊழியர்களின் நலன்களை முன்னிறுத்தி கூட்டத்தில் பொது ஊழியர் சங்கம் ஆஜராகின்ற நிலையில் விண்ணப்பதாரிகள் இயலுமான விரைவில் தொடர்புகொள்ளுமாறு அதன் தலைவர் எஸ். லோகநாதன் அறிவித்துள்ளார்.

அம்பாறை மாவட்ட செயலகத்தின் வருடாந்த இடமாற்ற சபை கூட்டத்தில் கடந்த 15 வருடங்களாக அரசாங்க பொது ஊழியர் சங்கம் பங்கேற்று ஊழியர்களின் நலனுக்காக குரல் கொடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது

# உலக சம்பியனான இங்கிலாந்து அணிக்கு ரூ.13.84 கோடி

ஆம் ஆண்டுக்கான ஐ.சி.சி. இருபதுக்கு 20 உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடர் நேற்று முன்தினம் நிறைவுக்கு வந்தது. இறுதிப் போட்டியில் பாகிஸ்தான் அணியை வீழ்த்திய இங்கிலாந்து அணி, இரண்டாவது தடவையாக எட்டாவது உலகக்கிண்ணத்தைக் கைப்பற்றியது.

சர்வதேச கிரிக்கெட் பேரவையானது உலகக்கிண்ணத்தில் ஆடிய ஒவ்வொரு அணிகளுக்கும் பரிசுத்தொகையை வழங்கியது. அந்தவகையில் சம்பியன் பட்டம் வென்ற இங்கிலாந்து அணிக்கு இந்திய மதிப்பில் ரூபா 13.84 கோடி வழங்கப்பட்டது. அதேவேளை, இரண்டாமிடத்தைப் பெற்ற பாகிஸ்தான் அணிக்கு ரூபா 7.40 கோடி வழங்கப்பட்டது.

அரையிறுதிக்குத் தெரிவான இந்திய அணிக்கு ரூபா 4.50 கோடியும், நியூசிலாந்து அணிக்கு ரூபா 4.19 கோடியும் வழங்கப்பட்டன. சுப்பர் 12 சுற்றுடன் வெளியேறிய இலங்கை அணிக்கு முதல் சுற்று வெற்றியுடன் சேர்த்து மொத்தமாக ரூபா 1.85 கோடி கிடைக்கிறது.

**ஒவ்வொரு அணிகளும் பெறும் பரிசுத்தொகை விபரம்**

இங்கிலாந்து - ரூ. 13.84 கோடி, பாகிஸ்தான் - ரூ. 7.40 கோடி, இந்தியா - ரூ. 4.50 கோடி, நியூசிலாந்து - ரூ. 4.19 கோடி, இலங்கை - ரூ. 1.85 கோடி, நெதர்லாந்து - ரூ. 1.85 கோடி, அவுஸ்திரேலியா - ரூ. 1.53 கோடி, அயர்லாந்து - ரூ. 1.53 கோடி, சிம்பாப்வே - ரூ. 88.50 இலட்சம், மேற்கிந்திய தீவுகள் - ரூ. 64.40 இலட்சம், ஐக்கிய அரபு இராச்சியம் - ரூ. 64.40 இலட்சம், ஸ்கொட்லாந்து - ரூ. 64.40 இலட்சம், நமீபியா - ரூ. 64.40 இலட்சம், ஆப்கானிஸ்தான் - ரூ. 56.35 இலட்சம்.

# தென்கொரியாவில் மாயமான இலங்கை றக்பி அணியின் தலைவி



தென்கொரியாவில் இடம்பெற்ற ஆசிய மகளிர் ரக்பி செவன்ஸ் போட்டித் தொடருக்காக சென்ற இலங்கை மகளிர் றக்பி அணியின் தலைவர் டுலானி பல்லேகொண்டகே தென்கொரியாவில் வைத்து காணாமல் போயுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.


இதையடுத்து கொரிய ரக்பி சங்கத்தின் ஊடாக இலங்கை மகளிர் ரக்பி அணியின் முகாமையாளர் சமந்த நாணயக்கார அந்த நாட்டு பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளார். நேற்று முன்தினம் பிற்பகல் ஒரு மணியளவில் நிறைவடைந்த இலங்கை மற்றும் ஹொங்கொங் ஆகிய அணிகளுக்கு இடையிலான போட்டியை அடுத்து இரவு 11.30 மணியளவில் இலங்கை அணி இன்சியான் விமான நிலையத்திலிருந்து புறப்படவிருந்தது.

இதையடுத்தே இலங்கை மகளிர் அணியின் தலைவி டுலானி பல்லேகொண்டகே காணாமல் போயுள்ளதாக இலங்கை மகளிர் அணியின் முகாமையாளர் தெரிவித்தார்.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

# லண்டனில் வடிவமைக்கப்படும் பீபா உலகக்கிண்ணம்

(ரமணி)



2022 பீபா உலகக்கிண்ணத் தொடரின் சம்பியன் கிண்ணம் பரம்பரை பரம்பரையாக லண்டனில் உள்ள தோமஸ் லைட்டின் வடிவமைப்புக் குழுவால் வடிவமைக்கப்படுகிறது. தோமஸ் லைட்டின் உலகப் புகழ்பெற்ற லண்டன் பட்டறைகளில் மிகச்சிறந்த வெள்ளி மற்றும் தங்கத் தகடுகளிலிருந்து கையால் வடிவமைக்கப்பட்டது. உலக நாடுகளைச் சுற்றிவந்த உலகக்கிண்ணம் கட்டாரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

18 கரட் தங்கத்தாலான உலகக்கிண்ணம் 37 செ.மீ. (14 அங்குலம்) உயரத்திற்கும் குறைவானது மற்றும் 13 பவுண்ட்கள் எடை கொண்டது. உருவாக்கப்பட்டபோது அதன் விலை சுமார் 50,000 டொலர் என்றாலும் தற்போது இதன் மதிப்பு அதைவிட அதிகமாக காணப்படுகிறது.

இத்தாலியின் உதைபந்தாட்ட அணி உலகக்கிண்ணப் போட்டியில் விளையாடத் தகுதி பெறவில்லை. என்றாலும், ஓர் இத்தாலிய குடும்பம் கட்டாரில் பிரதிநிதித்துவப்படுத்தப்படும். மிலனில் உள்ள கலைஞரான சில்வியோ கஸ்ஸானிகா, 1971 இல் புகழ்பெற்ற சம்பியன் கிண்ணத்தைச் செதுக்கினார். பிரேஸில் மூன்று முறை போட்டியை வென்ற பிறகு முந்தைய கிண்ணத்தை வைத்திருக்க அனுமதிக்கப்பட்டது.

முதல் உலகக்கிண்ணத்துக்கு முன்னோடியாக இருந்த பீபாவின் மூன்றாவது தலைவரின் நினைவாக இது ஜூல்ஸ் ரிமெட் டிராபி என்று பெயரிடப்பட்டுள்ளது. கஸ்ஸானிகா பணிபுரிந்த கைவினைஞர் குடும்ப வணிகம் இன்னும் சின்னமான கிண்ணத்தை உருவாக்கும் உரிமையைக் கொண்டுள்ளது.




# குணதிலக்கவின் இரண்டாவது பிணைக் கோரிக்கை மனு டிசம்பர் 8இல் விசாரணை

பாலியல் குற்றச்சாட்டில் அவுஸ்திரேலியாவின் சிட்னியில் வைத்து கடந்த 6ஆம் திகதி கைதுசெய்யப்பட்ட இலங்கை கிரிக்கெட் அணியின் வீரர் தனுஷ்க குணதிலக்கவின் இரண்டாவது பிணைக் கோரிக்கை மனுவை எதிர்வரும் டிசம்பர் 8ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளவுள்ளதாக நிவ் சவுத்வேல்ஸ் நீதிமன்றம் அறிவித்துள்ளது.

முன்னதாக தனுஷ்க குணதிலக்க சார்பில் தாக்கல் செய்யப்பட்ட முதலாவது பிணை மனுக் கோரிக்கை கடந்த 7ஆம் திகதி நிராகரிக்கப்பட்டிருந்தது. அதனைத் தொடர்ந்து தனுஷ்க குணதிலக்கவை சிட்னியிலுள்ள தடுப்புக் காவலுக்கான மத்திய நிலையத்தில் தடுத்துவைக்குமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டமை குறிப்பிடத்தக்கது.

# பாடசாலை வலைப்பந்தாட்ட சம்பியன்ஷிப்பில் ஒட்டுமொத்த சம்பியனான குருநாகல்




கல்வி அமைச்சின் வழிகாட்டுதலின் கீழ் இலங்கை பாடசாலைகள் வலைப்பந்தாட்ட சங்கத்தினால் ஏற்பாடுசெய்யப்பட்டு நடைபெற்ற இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான வலைப்பந்தாட்ட சம்பியன்ஷிப் தொடரின் ஒட்டுமொத்த சம்பியனாக குருநாகல் எச்.எவ்.சி. அணி தெரிவானது.




கடந்த வெள்ளிக்கிழமை வென்னப்புவ ஆல்பர்ட் பீரிஸ் மைதானத்தில் ஆரம்பமான குறித்த சுற்றுத்தொடரின் இறுதிநாள் நிகழ்வுகள் நேற்று முன்தினம் நடைபெற்றன.

13, 15, 17 மற்றும் 19 வயதுக்குட்பட்ட நான்கு வயதுப் பிரிவுகளில் ஏ மற்றும் பி என இரண்டு பிரிவுகளாக போட்டிகள் நடத்தப்பட்டன. 13, 15, 17, 19 வயதுப் பிரிவுகளில் சிறந்த வீராங்கனைகளுக்கு பதக்கங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. குறித்த போட்டிகளுக்கு நெஸ்லே மைலோ 29ஆவது ஆண்டாக அனுசரணை வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

Nestle MILO




# ஜனாதிபதி ரணிலின் வரவு - செலவுத்திட்ட உரையின் முக்கியம்சங்கள்

## 2023ஆம் ஆண்டிற்கான வரவு - செலவுத்திட்ட முன்மொழிவுகள்



**அ.** அரசிறை நிலைநிறுத்தல் நிகழ்ச்சித்திட்டமானது அரசாங்க வருமானத்தை 2021 இன் இறுதியிலுள்ளவாறான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 8.3 சதவீதத்திலிருந்து 2025 இல் ஏறத்தாழ மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 15 சதவீதமாக அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கின்றது.

**ஆ.** 2025 இல் முதலாந்தர மிகையை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 2 சதவீதத்திற்கு மேல் அடைய அரசாங்கம் இலக்கினைக் கொண்டுள்ளதுடன், அதன் பின்னர் இம்மட்டத்தை மேம்படுத்துவதற்கு எதிர்பார்க்கின்றது.

**இ.** அரசாங்கத்துறை படுகடனை 2022 இன் இறுதியில் உள்ளவாறான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சுமார் 110 சதவீதத்திலிருந்து நடுத்தர காலத்தில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 100 சதவீதத்திற்கு மேற்படாதவாறு குறைப்பதற்கு நாம் திட்டமிடுகின்றோம்.

**ஈ.** பணவீக்கமானது நடுத்தர காலத்தில் நடு ஒற்றை இலக்க மட்டமொன்றுக்கான கட்டுப்பாட்டின் கீழ் மீண்டும் கொண்டுவரப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**உ.** இவற்றுக்கு இசைவாக, வட்டி வீதங்களும் படிப்படியாக மிதமான மட்டத்தைச் சென்றடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

**ஊ.** வெளிநாட்டு நிதியிடல் ஊடாக பொருளாதார நம்பிக்கை மீளவும் நிறுவப்பட்டு, வெளிநாட்டு செலாவணி ஒதுக்குகள் நிறைவாக்கப்பட்டமையுடன், செலாவணி வீதம் மீதான பாதகமான அழுத்தமும் குறைவடையுமென எதிபார்க்கப்படுகின்றது.

**ஊ.** தொடர்ச்சியான வளர்ச்சியை அதிகரிக்கின்ற கட்டமைப்பு சார்ந்த மறுசீரமைப்புகளை நடைமுறைப்படுத்துவதன் மூலம் பொருளாதார வளர்ச்சியானது நடுத்தர காலத்தில் 5 சதவீதத்தை நோக்கி திரும்பலடையுமெனவும் அதன் பின்னர் உயர்வான மட்டமொன்றுக்கு துரிதமடையுமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

### வர்த்தகம் மற்றும் முதலீடு - வெளிநாட்டு வர்த்தகம் மற்றும் முதலீட்டு முகவராண்மை

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக வெளிநாட்டு செலாவணி உட்பாய்ச்சல் தொடர்பான செயற்பாடுகளை மீள்பரிசீலனை செய்யவேண்டும். ஏற்றுமதி மற்றும் முதலீட்டு நடவடிக்கைகளுக்கு வசதியளிக்கும் வகையில் தற்பொழுது ஏற்படுத்தப்பட்ட நிறுவனங்கள் தனித்தனியாக செயற்படுவதால் நிறுவனங்களுக்கு இடையில் ஏற்பட்டுள்ள இடைவெளி ஏற்றுமதியாளர்களை மிகவும் பாதித்துள்ளது. அதேபோன்று முதலீடு மற்றும் ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்கான பல நிகழ்ச்சித்திட்டங்கள் பல்வேறு அரசாங்க நிறுவனங்களினால் செயற்படுத்தப்படும். இதனால் வசதிகளை அதிகரிப்பது போன்று முதலீட்டு நட்பு சூழலொன்றினை உருவாக்குவதற்கு ஏற்றமதி மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு தொடர்பாக மத்தியப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றினை தாபித்தல் அவசியமாகும். இதனடிப்படையில், தற்பொழுது செயற்பட்டு வருகின்ற ஏற்றுமதி அபிவிருத்திச் சபை, முதலீட்டுச் சபை, இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதிக் கூட்டுதாபனம், தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகார சபை போன்ற நிறுவனங்கள் அனைத்திற்கும் பதிலாக புதிய சட்டமொன்றினை உருவாக்கி ஏற்றுமதி மற்றும் முதலீட்டு ஊக்குவிப்புக்கான விசேட நிறுவனமொன்றினை தாபிப்பதற்கு முன்மொழிவு. இந்த முன்மொழிவினை செயற்படுத்துவதற்கு ரூபா 100 மில்லியனை ஒதுக்கீடு செய்யப்படும்.

### புதிய பொருளாதார வலயங்கள்

வெளிநாட்டு முதலீட்டினை கவருவதற்காக தற்பொழுது இனம் காணப்பட்டுள்ள மேல் மாகாணம், அம்பாந்தோட்டை மற்றும் திருகோணமலை சூழலினைஅண்டிய பொருளாதார வலயங்களை உருவாக்குவதற்கு முன்மொழிவு. இதற்காக முதலீட்டாளர்களுக்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அதேபோன்று தற்போது பல்வேறு நிறுவனங்களின் கீழ் செயற்படுகின்ற முதலீட்டு மற்றும் கைத்தொழில் வலயங்களையும் உள்ளடக்கும் வகையில் அறிமுகப்படுத்தப்படும் விசேட புதிய சட்ட ஏற்பாடொன்றின் கீழ் இந்த பொருளாதார வலயங்கள் தாபிக்கப்படும். வரிச்சலுகை அடிப்படையில் வெளிநாட்டு முதலீட்டாளர்களை கவருகின்ற செயற்பாடுகளுக்குப் பதிலாக மாற்று உபாயங்களையும் கவனத்தில் கொள்தல் வேண்டும். இதற்காக ரூபா 300 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்படும்.

### தேசிய உற்பத்தித்திறன் ஆணைக்குழுவினைத் தாபித்தல்

கைத்தொழிற்துறைகளுடன் தொடர்பான இறக்குமதி வரி மற்றும் போட்டித் தன்மையுடன் தொடர்பான பிரச்சினைகளை கவனத்திற் கொண்டு முனைப்பழிவுள்ள மற்றும் தரமான தரவுகளை அடிப்படையாகக் கொண்ட விசாரணை மற்றும் ஆய்வுகளை மேற்கொண்டு தொழில்துறைக்குப் பொருத்தமான விற்பனையினை சிபாரிசு செய்தல், கைத்தொழில், வாணிப மற்றும் வியாபாரத்துறைகளுடன் தொடர்பான நுண்பொருளாதார கொள்கை தொடர்பாக அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குதல், சமூக மற்றும் சுற்றாடல் பிணக்குகள் தொடர்பாக தற்பொழுது காணப்படும் ஒழுங்கு விதிகளை மதிப்பாய்வு செய்து திருத்த வேண்டிய விடயங்கள் தொடர்பில் சிபாரிசு செய்தல், பொருளாதார ஸ்திரத்தன்மைக்கும் புதிய தொழில்நுட்பத்திற்கும் இணங்குவதற்கு முடியாத காரணத்தினால் மூடப்படுகின்ற தொழில்துறைகளில் சேவையாற்றுகின்ற ஊழியர்களுக்கு புதிய தொழில்வாய்ப்புகளை வழங்குவதற்கு முடியுமான வகையில் அவர்களை பயிற்றுவித்து அவற்றில் ஈடுபடுத்துதல், அவ்வாறு அல்லாத சந்தர்ப்பங்களில் ஊழியர்களுக்கு நட்டஈட்டு முறைமையினை முன்மொழிதல் போன்ற விடயங்கள் தொடர்பாக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு சுயாதீனமான நிறுவனமொன்றாக தேசிய உற்பத்தித்திறன் ஆணைக்குழுவினை தாபிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன். இதன்போது தற்பொழுது செயற்பட்டு வருகின்ற தேசிய உற்பத்தித்திறன் செயலகத்திற்குப் பதிலாக அவற்றின் செயற்பாடுகளும் உத்தேச ஆணைக்குழுவின் கீழ் கொண்டுவரப்படும். இந்த முன்மொழிவினை செயற்படுத்துவதற்கு ரூபா 100 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்படும்.

### உலக சந்தைக்கான அடைவினை அதிகரித்தல்

சர்வதேச வர்த்தக உடன்படிக்கைகள் அனைத்தையும் கையாள்வதற்கான சர்வதேச வர்த்தக அலுவலகம் ஒன்றினைத் தாபிப்பதற்கு முன்மொழிவு செய்யப்படுகிறது. இது ஆரம்பத்தில் நிதி அமைச்சின் கீழ் தாபிக்கப்படுவதுடன், அது மீள் கட்டமைப்புச் செய்யப்படுகின்றபொழுது இது வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சுடன் இணைக்கப்படுவதுடன், வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சானது, வெளிநாட்டு அலுவல்கள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சு என பெயர் மாற்றம் செய்யப்படும்.

### ஏற்பாட்டுச் சேவை உட்கட்டமைப்பு நிகழ்ச்சித் திட்டம்

ஏற்றுமதியாளர்கள், இறக்குமதியாளர்கள் மற்றும் முதலீட்டாளர்களுக்கான மற்றுமொருதடையாக ஏற்பாட்டுச்சேவைகள் உட்கட்டமைப்பு செயலாற்றுகை காணப்படுகின்றது. எனவே, முதல் 70 நாடுகளுக்கிடையில் இலங்கையின் ஏற்பாட்டுச் சேவை செயலாற்றுகையினை முன்னேற்றுவதை இலக்காகக் கொண்டு 2023 இலிருந்து 2027 வரையான காலப்பகுதியில் மூன்று வருட ஏற்பாட்டுச் சேவை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் ஒன்றினை அறிமுகப்படுத்துவதற்கு முன்மொழிவு.

### முதலீட்டு நட்புச் சூழல்

மிக அதிகமான வியாபார நட்புச் சூழல் ஒன்றினை உருவாக்குவதற்கு இலகுபடுத்தப்பட்ட மற்றும் தற்பொழுது காணப்படுகின்ற ஏற்பாடுளை வினைத்திறன் மிக்கதாக மாற்றுவதற்கான அவசியம் ஏற்பட்டுள்ளது. இதற்கமைவாக, ஆரோக்கியமான வியாபார சூழலொன்றினை உருவாக்குவதற்கு இயலுமான வகையில் செலவினம், நடபடி முறைகள் மற்றும் நேரத்தைக் குறைத்தல் என்பதுடன் வெளிப்படைத் தன்மையினை மேம்படுத்துவதற்கும் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். இந்த வகையில் தேவையான மறுசீரமைப்புகளை அறிமுகம் செய்வதற்கு முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சுக்கு ரூபா 200 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு முன்மொழிவு.

### புதிய தொழிற்கொள்கைகள்

உற்பத்தித்திறன் வாய்ந்த பொருளாதார நடவடிக்கைகளை வினைத்திறனுடன் கொண்டு நடத்தும் விதத்தில் தொழிலாளர், தொழில் தருநர் ஆகிய இருவரும் பாதுகாக்கப்பட வேண்டிய தொழிலாளர் துறையின் மறுசீரமைப்புகள் நீண்டகாலமாக தீர்க்கப்படாதுள்ளன. போட்டிமிக்க ஏற்றுமதியை நோக்காகக் கொண்ட பொருளாதாரமொன்றில் நாட்டின் முன்னேற்றத்தை ஊக்குவிப்பதில் இருதரப்பினர்களும் உற்பத்தித்திறன்மிக்க விதத்தில் பங்கேற்க வேண்டும். துறையில் காணப்படுகின்ற சட்டங்கள், கொள்கைகள் மற்றும் நிறுவனசார் ஏற்பாடுகள் என்பன தொழில் முயற்சியாளர் இயலுமைகளையும் வியாபார அபிவிருத்திகளையும் நிறுத்தக் கூடாது. தனிப்பட்டவர்களின் ஆற்றல்களைப் பயன்படுத்திக்கொள்வதற்கு அனைத்து சூழலும் ஆக்கபூர்வமாக இருக்க வேண்டிய அதேவேளை, தொழில்முயற்சியாளர்களின் இடர்நேர்வை எடுத்துக்கொள்கின்ற நடத்தையும்கூட முறையாகவும் வெகுமதியளிக்கப்பட வேண்டும். நாட்டின் தொழிற்சட்டங்கள் காலம் கடந்துள்ளன என்பதுடன், கூறுகளாக ஆக்கப்பட்டுள்ளமையினால் தொழில்தருநர் – தொழிலாளர் வகுப்பிற்கும் பொருளாதாரத்திற்கும் நன்மை பயக்கும் விதத்தில் புதிய, இற்றைப்படுத்தப்பட்ட அத்துடன் ஒன்றுசேர்க்கப்பட்ட தொழிற் சட்டமொன்றை இயற்றுவதற்கு முன்மொழிவு.

### வேளாண்மை ஏற்றுமதிக்கான காணிகள்

பல்வேறு காரணங்களின் அடிப்படையில் அதாவது சட்டச் சிக்கல்கள், நிறுவனசார் முரண்பாடுகள், மூலதனம் போதாமை போன்ற காரணத்தினால் மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை, அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் மற்றும் காணி மீட்டல் ஆணைக்குழு ஆகியவற்றுக்கு உரித்தான பாரியளவிலான காணிகள் நீண்டகாலமாக பயிரிடப்படாது அல்லது உற்பத்தித் திறனற்றுக் காணப்படுகின்றன. அத்தகைய காணிகளை பொருளாதாரத்தின் நன்மைக்காக உற்பத்தித்திறனுடன் பயன்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன. அதற்கமைய, உற்பத்தி மற்றும் ஏற்றுமதிகள் இரண்டையும் அதிகரிக்கக்கூடிய விதத்தில் அவற்றை உற்பத்தித்திறன் மிக்கவாறு உபயோகிப்பதற்கு முதலீட்டாளர்களை இயலச்செய்கின்ற திட்டமொன்று உருவாக்கப்படும். ஆகையினால், பாரியளவிலான உபயோகப்படுத்தப்படாத/ உற்பத்தித்திறனின்றி பயன்படுத்தப்படுகின்ற காணிகள் ஏற்றுமதிப் பயிர்களை பயிரிடுவதற்காக நீண்டகால அடிப்படையில் குத்தகைக்கு விடப்படும். மேலும், முன்மொழியப்பட்ட வேளாண்மைக் காணி குத்தகை நிகழ்ச்சித் திட்டத்தை வசதிப்படுத்துவதற்கு புதிய சட்டமொன்று சபைக்குச் சமர்ப்பிக்கப்படும்.

### அரச காணிகளை உரிமை மாற்றல்

அரச காணிகளை உரிமை மாற்றம் செய்வதுடன், தொடர்புடைய பூர்வாங்க நடவடிக்கைகள் பிரதேச செயலாளர்கள், உதவி அரசாங்க அதிபர் ஊடாக மாவட்டச் செயலாளர்/அரசாங்க அதிபர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் விசேட சந்தர்ப்பங்களுக்காக நிறுவப்படுகின்ற இலங்கை மகாவலி அதிகார சபை மற்றும் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிடம் அப்பணி பொறுப்பளிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு நிறுவனத்திற்கும் காணி குறித்தொதுக்குதல் தொடர்பிலான பூர்வாங்க நடவடிக்கைகள் பல்வேறு முறைகளில் மேற்கொள்ளப்படுகின்ற காரணத்தினால் முரண்பாடுகள் மற்றும் முறைகேடாக இடம்பெறுகின்றமை பதிவாகியுள்ளது. ஆகையினால், மேலே குறிப்பிடப்பட்ட விசேட தேவைகள் தற்போது மேற்கொள்ளப்படவேண்டி ஏற்பட்டுள்ளமையினால் அவ்விரு நிறுவனங்கள் மூலமும் செய்யப்படுகின்ற அரச காணி கையுதிர்த்தல் உள்ளடங்கலாக அனைத்து காணி கையுதிர்த்தலுடனும் தொடர்புடைய பூர்வாங்க நடவடிக்கைகள் பிரதேச செயலாளர்கள் ஊடாக மாத்திரம் மேற்கொள்ளத் தேவையான ஒழுங்குமுறைமை எதிர்வரும் ஆண்டினுள் தயாரிக்கப்படும்.

### டிஜிட்டல் தொழில்நுட்பம்

பல்வேறு பொருளாதார நடவடிக்கைகளிலும் சேவை வழங்கும் முறைமைகளிலும் டிஜிட்டல் தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதன் நன்மையை நாடு அனுபவித்துவருகின்றது. மின்சக்தி எரிசக்தி அமைச்சினால் பெற்றோலிய விநியோகத்திற்கு கியூஆர் (QR) முறைமை அறிமுகப்படுத்தப்பட்டமையின் நன்மை பயக்கத்தக்க விளைவுகள் அண்மையில் அவதானிக்கப்பட்டன. எனவே, தேவையான கொள்கைச் சூழல், சட்டங்கள், நிறுவனசார் ஆதரவு மற்றும் வசதிகள் உள்ளடங்கலாக டிஜிட்டல் தொழில்நுட்பத்துறையை மேலும் மேம்படுத்தத் தேவை பற்றி ஆராய்வதற்கும் அமைச்சரவைக்கு அறிக்கை சமர்ப்பிப்பதற்கும் தொழில்துறையிலுள்ள நிபுணர்களையும் தொடர்புடைய அலுவலர்களையும் ஈடுபடுத்தி குழுவொன்றினை நியமிப்பதற்கும் முன்மொழிவு.

### இலங்கையின் கனிய வளங்களை தேசிய அபிவிருத்திக்குப் பயன்படுத்தல்

இலங்கையில் காணப்படும் பெரும்பாலான கனிய வளங்கள் தேசிய அபிவிருத்திக்குப் பங்களிப்பதற்காக பயன்படுத்தப்படுவது குறைந்த மட்டத்திலாகும். எனவே, அனைத்து கனிய வளங்களும் தேசிய அபிவிருத்திக்கு வினைத்திறன் மிக்க வகையில் பயன்படுத்துவதற்கு முடியுமான பொருத்தமான கொள்கையொன்றினை உருவாக்கி செயற்படுத்துவதற்கு கைத்தொழில் அமைச்சு, சுற்றாடல் அமைச்சு, புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகம், அரச தனியார் பங்களிப்பு தொடர்பான தேசிய முகவராண்மை (NAPP) மற்றும் உரிய நிறுவனங்களை உள்ளடக்கிய குழுவொன்றினை நியமிப்பதற்கு முன்மொழிவு. இக்குழுவின் அறிக்கையானது மூன்று மாதங்களுக்குள் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

### கறுவா தொழில்துறைக்கான புதிய திணைக்களம்

கறுவா உற்பத்தி ஏற்றுமதியானது பாரம்பரியமாக முதலிடம் வகிப்பதன் காரணமாக இத்துறையின் முன்னேற்றம் தொடர்பில் துரித நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். இலங்கையின் கறுவா உற்பத்திக்கு வெளிநாட்டு சந்தையில் விசேட அடையாளமொன்று கட்டியெழுப்பப்பட்டுள்ளது என்ற வகையில் பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளை ஏற்றுமதி செய்வதனை மேலும் ஊக்குவித்தல் வேண்டும். இதனால் கறுவா உற்பத்தி மற்றும் ஏற்றுமதியினை ஊக்குவிப்பதற்காக திணைக்களமொன்றினை கறுவாச் செய்கை அதிகளவு இடம்பெறுகின்ற கரந்தெனிய பிரதேசத்தில் தாபிப்பதற்கு முன்மொழிவு. இதற்காக ரூபா 200 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்படும்.

### புதிய கருத்திட்டங்கள் / நிகழ்ச்சித் திட்டங்களை மதிப்பீடுசெய்தல் திட்டம்

எதிர்காலத்தில் ஆரம்பிக்கப்படும் அனைத்து கருத்திட்டங்களும்/ நிகழ்ச்சித்திட்டங்களும் உரிய பொறிமுறையொன்றின் கீழ், பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ரீதியில் பொருத்தமானவை என சாத்தியவள ஆய்வொன்றின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர், அவ்வாறு இனங்காணப்பட்ட கருத்திட்டம்/ நிகழ்ச்சித்திட்டம் மாத்திரம் தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் மதிப்பீட்டாய்வுக்குட்பட்டு, தேசிய அபிவிருத்திக் குழுவுக்கு (National Development Committee) சமர்ப்பித்தல் வேண்டும். தேசிய அபிவிருத்திக்குழுவானது அரச மற்றும் தனியார் துறையினைச் சேர்ந்த ஐந்து விசேட நிபுணர்களைக் கொண்டிருக்கும். இக்குழுவின் மூலம் அனைத்து கருத்திட்டங்களும் முன்னுரிமை அடிப்படையில் இனங்காணப்பட்டு அவற்றை மீண்டும் சாத்தியவள ஆய்விற்குட்படுத்தி பொருளாதார ரீதியில் வினைத்திறன் மிக்கது என உறுதிப்படுத்தியதன் பின்னர் முன்னுரிமை அடிப்படையில் செயற்படுத்துவதற்கு பொருத்தமான கருத்திட்டங்கள் மாத்திரம் அரசாங்கத்திற்கு சிபாரிசு செய்யப்படும்.

### சுற்றுலாத்துறை - கடல்சார் சுற்றுலாத்துறையை ஊக்குவித்தல்

சுற்றுலா பயணிகளை கவருவதை அதிகரிப்பதற்காக உலகில் பெரும்பாலான நாடுகளின் பல்வேறு துறைகளின் புதிய நிகழ்ச்சித்திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றன. எனினும், இலங்கையின் அமைவிடத்தைக் கருத்திற்கொண்டு கடல்சார் சுற்றுலா நிகழ்ச்சித் திட்டத்திற்காக இன்னும் போதுமான அணுகுமுறைகள் மேற்கொள்ளப்படவில்லை. ஆகையினால், முதற்கட்டத்தில் கிழக்கு மாகாணம், தென் மாகாணம் மற்றும் மேல் மாகாணங்களில் கடலுடன் தொடர்புபட்ட மூன்று பிராந்தியங்களை இணங்கண்டு அப்பிராந்தியம் தொடர்பில் செய்யப்பட வேண்டிய உட்கட்டமைப்பு வசதிகள் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும். இதன்கீழ் தெரிவு செய்யப்பட்ட வலயங்களில் ஆழமற்ற கடல்களில் கடல்சார் செயற்பாடுகளுடன் தொடர்புற்ற சுற்றுலா பயணிகளுக்கு பாதுகாப்பான வலயங்களை இனங்கண்டு அவற்றுக்கான உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல், அனைத்து சிறிய படகுகளை எடுத்து வருவதற்கும் அவற்றை நிறுத்துவதற்கும், சுழியோடுவதற்கான உட்கட்டமைப்பு வசதிகளையும் நிவர்த்தி செய்தல், சுற்றுலா பயணிகளுக்காக கடற்கரைகளை அண்மித்து சுகாதாரமான உணவுகளைப் பெற்றுக் கொள்வதற்கான வசதிகள் போன்றவற்றை வழங்குதல்.

இச்செயற்பாடுகளுக்கு தேவையான நிதி சுற்றுலா அபிவிருத்தி நிதியத்தின் மூலம் வழங்கப்பட வேண்டும். இச்செயன்முறையினை ஆரம்பிப்பதற்கு 2023 வரவு-செலவுத் திட்டத்திலிருந்து ரூபா 50 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்படும்.

### பொதுக் கல்வி பாடசாலைகளுக்கு இணைய வசதிகளை வழங்குதல்

நாட்டில் 10,155 பாடசாலைகளில் 1/3 பகுதி மாத்திரமே போதுமான அணுகுவழி மற்றும் வேகத்துடன் கூடிய இணைய வசதிகளைக் கொண்டுள்ளன. பிந்திய தொழில்நுட்பத்துடன் கூடிய கல்விமுறை முன்னேற்றத்திற்காக பாடசாலை முறைமைக்கு இணைய வசதிகளை வழங்குவது தவிர்க்க முடியாததாகும். குறிப்பாக, கிராமியப் பிரதேசங்களில் அமைந்துள்ள பாடசாலைகளுக்கு இணைய வசதிகளை வழங்குவதற்கு அப்பிரதேசங்களில் காணப்படும் உட்கட்டமைப்பு தடைக் காரணியாக விளங்குகின்றது. ஆகையினால், தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக் குழுவின் பங்களிப்புடன் இணைய வசதிகளையும் வழங்குகின்ற தனியார் நிறுவனங்களின் சமூகப்பொறுப்பு எண்ணக்கருவுடன் ஒருங்கிணைத்து தூரப்பிரதேசங்களில் அமைந்துள்ள 1000 சிரேஷ்ட மற்றும் கனிஷ்ட இரண்டாம் நிலைப் பாடசாலைகளுக்கு இலவசமாக இணைய வசதிகளை வழங்குகின்ற சாத்தியப்பாடு ஆராயப்படும்.

### கிராமிய பாடசாலைகளில் வசதிகளை மேம்படுத்தல்

கிராமிய பாடசாலைகளில் காணப்படுகின்ற சுகாதார மற்றும் துப்பரவேற்பாட்டு வசதிகள் போதுமானதாக இல்லை என்பது எமக்கு அறியக் கிடைத்துள்ளது. அதன் கீழ் அவ்வாறான சிறுவர்கள் கல்வி கற்கின்ற 139 மாகாணப் பாடசாலைகளும் 23 தேசிய பாடசாலைகளையும் போன்று மிகக் குறைந்த வசதிகளைக் கொண்ட கிராமியப் பாடசாலைகளில் துப்பரவேற்பாட்டு வசதிகளை விசேடமாக முறையான நீர் வசதிகளைக் கொண்ட மலசலகூடங்களை நிர்மாணிப்பதற்காக அல்லது தற்போது காணப்படுகின்ற மலசலகூடங்களுக்கு நீர் வசதிகளை வழங்குவதற்கு நிதி ரூபா 200 மில்லியன் ஏற்பாடு செய்யப்படும்.

### உயர் கல்வி - அரச பல்கலைக்கழக அனுமதியை திறமை அடிப்படையில் அதிகரித்தல்

அரச பல்லைக்கழகங்களுக்கு மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளும்போது கலைத்துறைக்காக மாத்திரம் தீவு முழுவதற்குமான மட்டத்தில் திறமை அடிப்படையில் அனைத்து மாணவர்களினதும் தெரிவு இடம் பெறுகின்றது.

( தொடர்ச்சி 10 ஆம் பக்கம்...)

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இருந்தும் வணிக, தொழில்நுட்ப, விஞ்ஞான மற்றும் கணித பாடத்துறைகளுக்கான மாணவர்களை உட்சேர்க்கின்ற போது திறமை அடிப்படையில் சேர்த்துக் கொள்கின்றவர்களின் தொகை 40 சதவீதம் மாத்திரமே ஆகும். இந்நிலைமையில், அதிக திறமையினைக் காண்பித்த ஏராளமான மாணவர்களுக்கு பல்கலைக்கழக நுழைவுக்கான சந்தர்ப்பம் கிடைக்காததால், அவர்கள் கடுமையான இன்னல்களுக்கும் அநீதிக்கும் உட்படுகின்ற அதேவேளை, பொருளாதார அபிவிருத்திக்காக அவர்களிடமிருந்து கிடைக்க வேண்டிய பங்களிப்பு இல்லாமல் போகின்றது. ஆகையினால், இந்நிலைமையினை சீரமைப்பதற்கு முறையான செயன்முறை ஒன்றினை அறிமுகப்படுத்துவது அவசியமாகியுள்ளது. அதற்கமைய, 2023/2024 தொடக்கம் மூன்று வருட காலப்பகுதியினுள் தற்போது திறமை அடிப்படையில் அரச பல்கலைக் கழகங்களுக்கு சேர்த்துக் கொள்ளப்படுகின்ற மாணவர்களின் சதவீதத்தை 40 சதவீதத்திலிருந்து 50 சதவீதம் வரை படிப்படியாக அதிகரிப்பதற்கு முன்மொழிகின்றேன். கல்வி அமைச்சின் மூலம் அரச பல்கலைக்கழகத்திற்கு சேர்த்துக் கொள்ளப்படும் முறைமையினைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். மூன்று வருடங்களின் பின்னர், இம்முறைமை மீளாய்வு செய்யப்படுதல் வேண்டும்.

### வைத்தியர்களுக்கான பட்டப்பின்படிப்பு வசதிகள்

கொழும்பு பல்கலைக்கழகத்திற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்ட வைத்தியர்களுக்கான பட்டப்பின் படிப்பு கற்கை செயற்பாடுகளை அதிகளவான வைத்தியர்களுக்கு விரிவுபடுத்தும் வகையில் பயிற்சியினை வழங்கும் வகையில் விரிவுபடுத்தப்படல் வேண்டும். பேராதனை, உருகுணை, யாழ்ப்பாணம் போன்ற பல்கலைக்கழகங்களில் பட்டப் பின் படிப்பு நிறுவனங்களை தாபிப்பதற்கு முன்மொழிகின்றேன். அதற்கான சட்டரீதியான ஏற்பாடு மற்றும் நடைமுறைகளைத் தயாரிப்பதற்கு இந்த பல்கலைக்கழகங்கள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அதற்கமைய, இத்திட்டத்தினைச் செயற்படுத்துவதற்காக ரூபா 60 மில்லியனை ஒதுக்கீடு செய்கின்றேன். அதேபோன்று, வைத்தியர்களுக்கு பட்டப்பின்படிப்பு கற்கைகளை உள்நாட்டிலேயே அறிமுகப்படுத்தும் பொருட்டு அதற்கான தேசிய கொள்கை ஒன்றினை தயாரிப்பதற்கு முன்மொழிவு .

### தர உத்தரவாத மற்றும் சான்றுப்படுத்தல் சபை

பல்கலைக்கழகங்களில் காணப்படும் பட்டப்படிப்பு கற்கைகளின் தரம் மற்றும் அங்கீகாரம் தொடர்பில் கண்டறிவதற்கு நிலைமை சான்றிதல் மற்றும் தர உத்தரவாத மற்றும் அங்கீகார சபையினை (Quality Assurance and Accreditation Board) தாபிப்பதற்கு முன்மொழிவு. இதன்கீழ் அனைத்து பட்டப்படிப்பு கற்கை நெறிகளையும் சான்றுப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கமைய தேவையான சட்ட ஏற்பாடுகளை தயாரிப்பதற்கு உயர் கல்விக்கு பொறுப்பான அமைச்சு மூலம் நடவடிக்கை எடுக்கப்படும். இந்நோக்கத்திற்காக ரூபா 100 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு முன்மொழிவு.

### உயர்தர தகைமைபெற்ற மாணவர்கள் மற்றும் பட்டதாரிகளுக்கு வெளிநாட்டு புலமைப்பரிசில்கள்

இலங்கை சுதந்திரம்பெற்று 75 வருடங்கள் பூர்த்தியினைக் குறிக்கும் முகமாக 2022 உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக் கொண்ட 75 மாணவர்களுக்கு தெரிவு செய்யப்பட்ட துறைகளில் வெளிநாட்டுப் பல்கலைக்கழங்களில் பட்டப்படிப்பை தொடர்வதற்கு 75 புலமைப்பரிசில்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளேன். அதற்கமைய, தொடர்புடைய வெளிநாட்டு பல்கலைக் கழகங்களை தெரிவுசெய்தல். அவற்றுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை கைச்சாத்திடுதல், மாணவர்களைத் தெரிவு செய்தல், தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு தேவையான வசதிகளைச் செய்து கொடுத்தல் போன்ற விடயங்கள் மீது அவதானம் செலுத்தி, ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் தயாரிக்கப்பட வேண்டும். இதற்காக ஏற்படும் செலவினம் ஜனாதிபதி நிதியத்தினால் மேற்கொள்ளப்படவேண்டுமென முன்மொழிவு.

இதற்கு மேலதிகமாக, அரசாங்க பல்கலைக் கழகங்களில் தெரிவுசெய்யப்பட்ட பாடநெறிகளில் சிறந்த செயலாற்றுகையினைக் கொண்ட 75 பட்டதாரிகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டு பல்கலைக்கழகங்களில் பட்டப்பின் படிப்பு கற்கைகளை தொடர்வதற்கான வாய்ப்புகளை வழங்குவதற்கு முன்மொழிவு. இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட இளைஞர்கள் தமது பட்டப்பின் படிப்புக் கற்கைகளை நிறைவுசெய்ததன் பின்னர் நாட்டின் அபிவிருத்திக்கு பங்களிப்புச்செய்தல் வேண்டும்.

### புதிய மருத்துவ பீடத்தினை தாபித்தல்

தற்போது இலங்கையின் 11 பல்கலைக் கழகங்கள் மருத்துவ பீடங்களைக் கொண்டுள்ள அதேவேளை அப்பீடங்களுக்காக 2020 – 2021 கல்வி ஆண்டுகளுக்காக 2001 மருத்துவ மாணவர்கள் சேர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இந்த எண்ணிக்கையினை அதிகரிப்பதற்கு ஊவ வெல்லஸ்ஸ பல்கலையில் மருத்துவ பீடத்தினை புதிதாக நிறுவுவதற்கு முன்மொழிவு . இந்த மருத்துவ பீடத்தினை நிறுவுவதற்காக ரூபா 200 மில்லியன் ஒதுக்கீடு .

### இலங்கை வரலாற்றைக் கற்பதற்கு தனியான நிறுவனத்தினை தாபித்தல்

இலங்கையின் வரலாறு தொடர்பில் ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நிறுவனமொன்றினை நிறுவுவதற்கு முன்மொழிவு. இதற்காக ரூபா 50 மில்லியன் ஒதுக்கீடு.

### மறுசீரமைத்தல் - அரசாங்க சேவையை மறுசீரமைத்தல்

தற்பொழுது பல்வேறு அரசாங்க நிறுவனங்களில் 14,50,000 அரச ஊழியர்கள் பணியாற்றி வருகின்றனர். இந்த வகையில் அவர்களது சம்பளங்கள் மற்றும் வேதனங்களுக்காக அரசாங்க வருமானத்தில் பெரும்பகுதி செலவிடப்படுகின்றது. எனவே, அபிவிருத்தி நோக்கங்கள் உள்ளடங்கலாக ஏனைய பொது நோக்கங்களுக்கு அரச வளங்களை ஒதுக்கீடு செய்வது சவாலான ஒரு விடயமாக மாறியுள்ளது. எனவே, தற்பொழுது காணப்படும் தேவை உள்ளடங்கலாக அரசாங்க சேவையின் அனைத்து விதமான நோக்கங்களையும் மீளாய்வு செய்வதுடன்தேவையான மறுசீரமைப்புகள் உள்ளடங்கலாக பரிந்துரைகளை வழங்குவதற்கும் ஜனாதிபதி ஆணைக்குழுவொன்றினை நியமிப்பதற்கு முன்மொழிவு.

### வரி விதிப்பனவு மீதான ஜனாதிபதி ஆணைக்குழு

ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது அரச வருவாயாக வரியூடாக ஈட்டப்படும் வருமானம் மிகவும் குறைவான வீதத்தில் அறவிடப்படுவதால் சுகாதாரம், கல்வி மற்றும் வேறு முக்கிய துறைகளுக்காக மூல வளங்களை ஒதுக்கீடு செய்வது இன்னல்களுக்குள்ளாகியுள்ளது. அதற்கமைய எதிர்வரவுள்ள சில ஆண்டுகளில் அரச வருவாயை படிப்படியாக அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியுள்ளது. அதற்கமைய தற்போது அரசாங்க வருவாயினை சேகரிக்கின்ற நிறுவனங்கள் மத்தியில் செயலாற்றுகை, ஒருங்கிணைத்தல் மற்றும் வரிக்கட்டமைப்பு என்பவற்றில் மேற்கொள்ளப்படவேண்டிய மாற்றங்கள் தொடர்பாக ஆராய்ந்து பரிந்துரைகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு வரி விதிப்பு தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவினை தாபிப்பதற்கு முன்மொழிகின்றேன். ஆணைக்குழுவானது அரசாங்க வருமானத்தை முகாமைசெய்வதற்கான மத்திய நிறுவனமொன்றினை உருவாக்குவதற்கான தேவையினை பரிசீலனைசெய்யும்.

### இலத்திரனியல் கொடுப்பனவு முறைமை

அரசாங்க சேவை நிறுவனங்களினூடாக சேவைகளை வழங்குகின்றபோது சேவையைப் பெற்றுக் கொள்பவர்கள் மூலம் கொடுப்பனவுகளை மேற்கொள்ள வேண்டி ஏற்படுமாயின் அத்தகைய அனைத்து கொடுப்பனவுகளையும், பயன்பெறுநர்களுக்கு நிதியை மாற்றல் செய்யும்போது இலத்திரனியல் ஊடாக அத்தகைய கொடுப்பனவுகளை மேற்கொள்வதை 2024.03.01 ஆம் திகதி தொடக்கம் கட்டாயமாக்குவதற்கு முன்மொழிவு. அதற்கமைய சகல அரச நிறுவனங்கள் மூலமும் இணையவழி மூலமாக அத்தகைய சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கும் முறைமையொன்றினை தயாரிப்பதற்கும், தேவையான சட்ட மற்றும் ஒழுங்கு விதிகளை அறிமுகப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். இந்நோக்கில் தற்போது அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களில் சேவையாற்றுகின்ற தகவல் தொழில்நுட்ப அலுவலர்களின் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும். இக் கொள்கையினை செயற்படுத்துவதற்காக ரூபா 200 மில்லியன் ஒதுக்கீடு.

### தரவுப்பாதுகாப்பு அதிகார சபையினை உருவாக்குதல்

எமது டிஜிட்டல் பொருளாதாரத்தினை நாம் அபிவிருத்தி செய்கின்றோம் என்ற வகையில் டிஜிட்டல் மயப்படுத்தலின் மோசமான தாக்கத்திலிருந்து எமது மக்களின் தனிப்பட்ட விடயங்களைப் பாதுகாக்கும் வகையில் தனிப்பட்ட தரவுகளை பயன்படுத்துவதனை ஒழுங்குபடுத்த வேண்டிய கட்டாயத் தேவை காணப்படுகின்றது. அரசாங்கம் 2022 இன் 09 ஆம் இலக்க தரவுப் பாதுகாப்புச் சட்டத்தினைச் செயற்படுத்துவதற்கு கடமைப்பட்டுள்ளதுடன், 2023 இல் தரவுப் பாதுகாப்பு அதிகாரசபை ஒன்றினை தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். தனிப்பட்ட தரவுகளின் முறையான முகாமையினை உறுதிப்படுத்துவதற்கு இலங்கை மத்திய வங்கி, பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு, இலங்கைத் தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு மற்றும் பொருளாதாரத்தின் ஏனைய துறைகள் என்பவற்றுடன் இணைந்து புதிய ஒழுங்குபடுத்துநர் நிறுவனம் செயற்படும்.

### தனியார்துறை ஊழியர்களுக்கான காப்புறுதித்திட்டம் - தனியார்துறை ஊழியர்களுக்கு காப்புறுதி காப்பீட்டைப் பெற்றுக் கொடுத்தல்

தனியார் துறையில் தொழில் புரிந்து பல்வேறு காரணங்களின் அடிப்படையில் தொழிலினை இழக்கின்றவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கின்ற போக்கு அவதானிக்கப்பட்டுள்ளது. தற்போது நிலவுகின்ற பொருளாதார நெருக்கடிகளுடன் இது மிகவும் மோசமான சமூகப் பிரச்சினையொன்றாக உருவெடுத்துள்ளதனால் தொழிலினை இழந்து மீண்டும் தொழில் ஒன்றுக்கு செல்லும் வரையான காலப்பகுதிக்கு உயர்ந்த பட்சம் மூன்று மாதங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டு மாதாந்தக் கொடுப்பனவு ஒன்றினைப் பெற்றுக்கொடுக்க இயலுமான விதத்தில் காப்புறுதி காப்பீட்டினை பெற்றுக் கொடுப்பதற்கும் அதற்கென காப்புறுதி நிதியமொன்றினை நிறுவுவதற்கும் முன்மொழிவு.

அதேபோன்று, அரசாங்க ஊழியர்களுக்காக வழங்கப்படுகின்ற அக்ரஹார மருத்துவ காப்புறுதித் திட்டத்தின் கீழ் அதிகமானோர் நன்மை அடைகின்ற அதேவேளை தனியார் துறையில் வேலைசெய்கின்ற ஊழியர்களுக்கும் சுகாதார மருத்துவக் காப்புறுதியினைப் பெற்றுக் கொடுப்பதற்கும் முன்மொழிவு.

தனியார் துறை ஊழியர்களுக்காக தொழில் தருநர்கள் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு பங்களிப்பு வழங்குகின்றனர் ஆதலினால் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினால் எவையேனும் நிவாரணங்களைப் பெற்றுக்கொடுப்பது கட்டாயமான பொறுப்புமாகும். அதற்கமைய ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினரால் முன்மொழியப்பட்ட சுகாதார மருத்துவ மற்றும் காப்பீட்டுக்கு ஒதுக்கீடொன்றினை மேற்கொள்வது உசிதமானதாகும்.

அதற்கமைய ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் கீழ் இப் புதிய முறைகள் இரண்டையும் உள்ளடக்கும் ஊழியர் பொறுப்பு நிதிய சட்டம் திருத்தம் செய்யப்படவேண்டும்.

### உணவுப் பாதுகாப்பு - உணவுப் பாதுகாப்புக்கான இலத்திரனியல் முறைமை

உணவுப் பாதுகாப்புடன் தொடர்புடைய நடவடிக்கைகளை திட்டமிடுவதற்கும் நடைமுறைப்படுத்துவதற்கும் இற்றைப்படுத்தப்பட்ட தரவு முறைமையினை பேணுவது அத்தியாவசியமாகும். அதற்கமைய வீட்டு அலகுகளுடன் தொடர்புடைய விவசாய மற்றும் உற்பத்தி பற்றிய தகவல்களை இணையவழி ஊடாகப் பெற்றுக் கொண்டு அதற்கேற்றவாறு தேசிய உணவு பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டம் திட்டமிடப்பட வேண்டும். இந்நிகழ்ச்சித்திட்டமானது உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து தொடர்பான பிரிவினூடாக செயற்படுத்தப்படுதல் வேண்டும்.

### உள்நாட்டு மீன்பிடித்துறையினை விருத்திசெய்தல்

பொது மக்களின் ஊட்டச்சத்து அளவினை மேம்படுத்தும் பொருட்டு அதிகரித்த மீன் உற்பத்தியினை பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பத்தினை விரிவுபடுத்தல் வேண்டும். இதன் கீழ் உள் நாட்டு நீர் நிலைகளில் நன்னீர் உற்பத்திக்காக வசதிப்படுத்துவதன் கீழ் தற்போது கிடைக்கப்பெறுகின்ற மீன் குஞ்சு உற்பத்தி நிலையங்களின் இயலளவினை விருத்தி செய்வதற்காக ரூபா 100 மில்லியன் ஒதுக்கீடு செய்கின்றேன்.

### அரசாங்க வருமானத்தினை அதிகரித்தல் - வரிக் கொள்கை முன்னெடுப்புகள்

வருமான முன்மொழிவானது, வரிக் கொள்கை இடைவெளி மற்றும் வரிச் சலுகைகளைக் குறைத்தல் என்பவற்றை ஒழுங்குபடுத்தும் அதேவேளை வருமானவரி மற்றும் பெறுமதிசேர் வரி என்பனவற்றில் முக்கிய மாற்றங்களையும் உள்ளடக்கியுள்ளது.

இந்த வரி மறுசீரமைப்பினை செயற்படுத்தலானது, 2023 இல் வருமானத்தினை அதிகரிப்பதற்கு உதவுவதுடன், எதிர்காலத்தில் அரசாங்கச் செலவினத்தினை அதிகளவு குறைக்கும் வகையில் செலவு மிக்க நாணய நிதியளிப்பு (பணம் அச்சிடுதல்) என்பதிலிருந்து அப்பால் நகர்த்த முடியுமாக இருக்கும். அத்துடன் அரசாங்க செலவிடல் மற்றும் ஊழலுக்கு எதிரான செயற்பாடுகளில் வினைத்திறனை அதிகரிப்பதன் மூலம் வரிக்கொள்கை நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுத்துள்ளது.

மின்சாரம், போக்குவரத்து மற்றும் எரிபொருள் உள்ளடங்கலாக பல்வேறு துறைகளுக்கு வழங்கப்பட்ட பெறுமதிசேர் வரி விலக்களிப்பு காரணமாக இழக்கப்பட்ட வருமானம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1 சதவீதத்திற்கு அதிகமானது என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இந்த வகையில் மீளாய்வின் பின்னர் சில விலக்களிப்புகளை நீக்குவதற்கு முன்மொழியப்படுகின்றது. சில விலக்களிப்புகளை நீக்குவதற்கு 2023 ஏப்ரல் 01 ஆம் திகதியிலிருந்து பெறுமதி சேர் வரிச் சட்டத்திற்கான திருத்தம் மேற்கொள்ளப்படும்.

சில அரச தொழில் முயற்சிகள் தமது ஊழியர்களது உழைக்கும்போது செலுத்தும் வரி (PAYE) மற்றும் முன்கூட்டிய தனியாள் வருமான வரி (APIT) பொறுப்புகளை தொடர்ந்து செலுத்தி வருவது அவதானிக்கப்பட்டுள்ளது. இவ்விவகாரம் பொது தொழில் முயற்சிகள் குழுவிலும் அதேபோன்று கணக்காய்வாளர் நாயகத்தினாலும் கேள்விக்குட்படுத்தப்பட்டது. இந்தவகையில் அத்தகைய வரியானது, நிறுவனத்தின் செலவினமாக இருக்க முடியாது என்பதுடன், தனிப்பட்ட வேதனாதிகள் கூட்டு உடன்படிக்கைகளின் கீழ் செலுத்தப்பட்டுள்ளன என்ற வகையில் 2023 ஜனவரி 01 முதல் அத்தகைய கொடுப்பனவுகளை நிறுத்துவதற்கு முன்மொழிவு.

### பீடி மீதான வரி

பீடி தொழிற்றுறையினை ஒழுங்குபடுத்துவதற்கும் பீடி பாவனையிலிருந்து மக்களை தூரமாக்குவதற்கும், பீடி ஒன்றுக்கு 2 ரூபாவினை வரியாக விதிப்பதற்கு முன்மொழிவு. இதற்கு மேலதிகமாக சான்றிதழ் மற்றும் உரிமங்களை பெறுவதற்கான ஏனைய செலுத்தவேண்டிய கட்டணங்களும் அதிகரிக்கப்படும்.

### துணைத் தீர்வைகளை (Para tariffs) இல்லாதொழித்தல்

**அ.** தயாரிப்பு தொழிற்றுறையினை ஊக்குவிப்பதற்கும் சர்வதேச வர்த்தகத்தில் காணப்படும் தடைகளை நீக்குவதற்கும் விவசாயம் உட்பட உள்நாட்டுக் கைத்தொழில்கள் மற்றும் கருத்திட்டங்களுக்குத் தேவையான ஊக்குவிப்பு மற்றும் வசதிகளை வழங்குவதற்கு, முலப் பொருட்கள் இடைநிலைப் பொருட்கள், சில விவசாய அடிப்படைப் பொருட்கள் தவிர்ந்த மூலதனப் பொருட்களுக்கு ஏற்புடைய செஸ் வரியானது 2023 ஜனவரி 01 இலிருந்து மூன்று வருடங்களில் நீக்கப்படும். துறைமுகம் மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீடு 5 வருட தவணை அடிப்படையில் கட்டம் கட்டமாக இல்லாதாக்கப்படும்.

அதற்கமைய முன்மொழியப்பட்ட வரியினை நீக்குவது கட்டம் கட்டமாக சரி செய்யப்படுவதற்காக 2023 ஜனவரி 01 இலிருந்து தற்போது அறவிடப்படும் சுங்கத் தீர்வை வீதமான 0%, 10% மற்றும் 15% ஆகிய தீர்வை வீதங்களை 0%, 15% மற்றும் 20% ஆக திருத்தம் செய்கின்றேன். இதற்கு சமாந்தரமாக வர்த்தக சரிப்படுத்தல் நிகழ்ச்சித்திட்ட (Trade adjustment programs) அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**ஆ.** எவ்வாறாயினும், விவசாயத்தின் அடிப்படையில் கொண்ட பெறுமதி சேர்த்தல்களின் அடிப்படையிலான கைத்தொழிலாளர்களுக்கு தொடர்புடைய செஸ் வரிகளுக்கு தடைகள் இல்லாத விதத்தில் வரிக் கொள்கை நடைமுறைப்படுத்தப்படும்.

### வரியல்லா வருமானம்

அரசிறை திரட்சிப்படுத்தல் செயன்முறையில் வரியல்லா வருவாயின் அதிகரிப்பும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். ஆகையினால், கட்டணங்கள் மற்றும் அறவீடுகளை 20 சதவீதத்தினால் அதிகரிப்பதற்கு முன்மொழிவு. எனினும், 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் ஏற்கனவே அதிகரிக்கப்பட்டுள்ள கட்டணங்கள் மற்றும் அறவீடுகள் இம்முன்மொழிவு மூலம் திருத்தம் செய்யப்படாது.

இதே தொனியில், கடவுச்சீட்டு, விசா மற்றும் ஏனைய அறவீடுகள் மீது குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தினால் அறவிடப்படும் கட்டணங்களை அதிகரிப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

அரசாங்க நிறுவனங்களினால் அறவிடப்படுகின்ற மற்றும் சேகரிக்கப்படுகின்ற உரிமத்தொகை, வாடகை மற்றும் ஏனைய வரியல்லா வருவாய்கள் பற்றி ஆராய்ந்து பொதுத் திறைசேரிக்கு பரிந்துரைகளை மேற்கொள்வதற்கு குழுவொன்றினை நியமிப்பதற்கு முன்மொழிவு.

வருவாய் சேகரிப்பை திரட்டு நிதியத்திற்கு அனுப்புவதில் தாமதம் காரணமாக ஏற்படும் கணிசமான நிதிச் செலவினைக் குறைப்பதற்கான 2023 ஜனவரி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் அமைச்சுகள், திணைக்களங்கள் மூலமான அனைத்து வருவாய் மற்றும் கிடைப்பனவு சேகரிப்புகளை பொதுத் திறைசேரிக்கு நேரடியாக நாளாந்தம் மாற்றல் செய்வதற்கு முன்மொழிகின்றேன். இது தொடர்பில், பொதுத் திறைசேரியானது காலக்கிரமத்தில் அறிவுறுத்தல்களை வழங்குவதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுக்கும்.

### வரி நிர்வாகம்

வரிக் கொள்கை வழிமுறைகள் பற்றிய அண்மைய அறிவிப்புகளானவை பரந்த வரித்தளம், சிறந்த இணங்குவிப்பு மற்றும் கடுமையான அமுலாக்கம் என்பனவூடாக வரி நிர்வாக வழிமுறைகளுடன் ஒன்றுடன் ஒன்று இணைந்து செல்லவேண்டும். அதற்கமைய, தொழில்நுட்பத்தில் மேம்பாடுகள், ஒழுங்குமுறைப்படுத்தல்கள், செயன்முறை மேம்படுத்தல்கள் மற்றும் இறைவரித் திணைக்களம், இலங்கைச் சுங்கம் மற்றும் மதுவரித் திணைக்களம் என்பன தொடர்புபட்ட மனித வளங்களில் முதலிடுதல் என்பனவூடாக வரி நிர்வாக வழிமுறைகள் மேம்படுத்தப்படும்.

ஒவ்வொரு 18 வயதுக்கு மேற்பட்டவரும் வரிக் கோவையொன்றினை ஆரம்பிப்பது முதற்படியொன்றாக இருக்கின்ற அதேவேளை கோவைகளை ஆரம்பித்தவர்களில் பலர் வரியற்ற அடிப்படை அளவுக்கு கீழே இருப்பர். ஆகையினால், உயர் வருமானம் உழைக்கின்றவர்களை குறிப்பாக இனங்கண்டு அவர்களை வரி செலுத்தச் செய்கின்ற வழிமுறைகளை அறிமுகப்படுத்துவது முக்கியமானதாகும்.

### செலவின முகாமைத்துவம் - செலவினத்தை வினைத்திறன் மிக்கதாக முகாமைசெய்வதற்கான பொறுப்பு

அரசிறை திரட்சிப்படுத்தல் செயன்முறையை வலுப்படுத்துவதற்கு முறையான செலவின முகாமைத்துவத்தின் முக்கியத்துவத்தை விளக்க வேண்டிய அவசியமில்லை. அது வருவாயினை அதிகரிப்பதற்கான முயற்சிகளுடனும் இசைந்ததாக இருக்க வேண்டும். இடைக்கால வரவு-செலவுத் திட்டமானது பிணிக்கின்ற அரசிறை விதிகளையும் அத்துடன் செலவினங்களை பரிசோதனை செய்வதற்கான பரிசோதனை நாயகம் ஒருவரின் நியமனத்தையும் கூட்டிணைக்கின்ற புதிய அரசாங்க நிதி முகாமைத்துவ சட்டத்தை அறிமுகப்படுத்தல் உள்ளடங்கலாக பல முன்மொழிவுகளை அறிமுகப்படுத்தியது, இது அண்மைய எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படும். இதற்கு மேலதிகமாக, அரசாங்கச் செலவினத்தின் கண்டிப்பான கட்டுப்பாட்டினை உறுதிசெய்வதற்கு பல எண்ணிக்கையான சுற்றறிக்கை அறிவுறுத்தல்கள் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளன.

### தேசிய தொழிற்பாடுகள் நிலையமொன்றைத் தாபித்தல்

நாட்டின் அனைத்து அபிவிருத்தி தலையீடுகள் பற்றிய நடைமுறைப்படுத்தல் பிரச்சனைகளை கண்டறிந்து, தோன்றுகின்ற பிரச்சினைகளை முன்னுரிமை அடிப்படையில் தீர்ப்பதற்காக நிதி அமைச்சின் கருத்திட்ட முகாமைத்துவ மற்றும் கண்காணிப்பு திணைக்களத்தின் கீழ் தேசிய தொழிற்பாடுகள் நிலையம் ஒன்றினைத் தாபிப்பதற்கு இது பொருத்தமான நேரமாகும்.

தேசிய தொழிற்பாடுகள் நிலையத்தின் வினைத்திறன் மிக்க மற்றும் செயற்றிறன் வாய்ந்த தொழிற்பாட்டுக்கு ஆதரவளிப்பதில் தீர்மானம் மேற்கொள்வதற்காக இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களையும் தரவுகளையும் பெற்றுக்கொள்வதற்கு துணையளிக்கும் கருவியாக தேசிய தொழிற்பாடுகள் நிலையத்தினுள் அனைத்தையும் உள்ளடக்கிய இணையத்தளம் அடிப்படையிலமைந்த தேசிய அபிவிருத்தித் தகவல் முறைமையொன்றினை தாபிப்பதற்கு முன்மொழிவு.

### ஆயுதப்படை ஆளணியை முன்கூட்டியே ஓய்வுபெற அனுமதித்தல்

அவ்வாறு செய்வதற்கு அவர்கள் விரும்புவார்களாயின், விசேட வகை தவிர்ந்த ஆயுதப் படை ஆளணியை 18 வருட சேவையின் பின்னர் ஓய்வுபெற அனுமதிப்பதற்கு முன்மொழிகின்றேன். உற்பத்தித்திறன் வாய்ந்த பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு அவர்களை இயலச்செய்யும் விதத்தில் தேவையான பயிற்சியை அவர்களுக்கு வழங்குவதற்கு வழிமுறைகள் எடுக்கப்படும்.



(தொடர்ச்சி 11 ஆம் பக்கம்...)

(10 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

### அரச ஊழியர்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகள்

அதிகரித்த போக்குவரத்துச் செலவு, மின்சாரம் மற்றும் நீர்க் கட்டணங்கள் அத்துடன் உயர்வான பணவீக்கம் என்பன காரணமாக மாதாந்தக் கொடுப்பனவு மீதான தமது செலவினத்தை முகாமைசெய்வதற்கு அரசாங்க ஊழியர்களும் ஓய்வூதியம் பெறுவோரும் இக்கட்டான நிலைமையில் இருக்கின்றனர்.

மேலும், அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட வழிமுறைகளின் விளைவாக பொருளாதார மீட்சி காரணமாக சுமார் ஒரு வருடத்தில் அரசாங்க வருவாய் அதிகரிக்குமென எதிர்பார்ப்புள்ளது. அதே சந்தர்ப்பத்தில் அரசாங்க துறையினை தகுந்த மட்டத்திற்கு மறுசீரமைப்பதற்கான முன்மொழிவுகளை நடைமுறைப் படுத்துவதற்கு சாத்தியமாகவிருக்கும்.

### அரசுக்குச் சொந்தமான தொழில் முயற்சி மறுசீரமைப்புகள் - அரச தொழில் முயற்சிகளை மீள்கட்டமைத்தல்

நிதியியல் ரீதியாக மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த அரசுக்கு சொந்தமான தொழில் முயற்சிகளை மறுசீரமைப்பதற்கான அவசியம் கடந்த 6 மாத காலப்பகுதியில் பல தடவைகள் வலியுறுத்தப்பட்டன. இடைக்கால வரவு-செலவுத்திட்டத்தில் பொறுப்பளிக்கப்பட்டவாறு அரசக்குச் சொந்தமான தொழில் முயற்சிகளை மறுசீரமைக்கின்ற குறிப்பான பணியுடன் நிதி அமைச்சில் தற்போது பிரிவொன்று நிறுவப்பட்டுள்ளது.

தொடக்கத்தில், ஸ்ரீ லங்கன் எயர்லைன்ஸ், ஸ்ரீ லங்கா டெலிகொம், கொழும்பு ஹில்டன், வோட்டேர்ஸ் எட்ஜ் மற்றும் அதன் துணை நிறுவனங்களுடன் சேர்த்து இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் என்பவற்றை உரிமமாற்றம் செய்வதற்கு வழிமுறைகள் எடுக்கப்படும்.

இதன் பெறுகைகள் நாட்டின் வெளிநாட்டு செலாவணி ஒதுக்குகளை வலுப்படுத்துவதற்கு பயன்படுத்தப்படும்.

அரசுக்குச் சொந்தமான தொழில் முயற்சிகளில் தொழில் அளவுசார் ஆதாயத்தையும் தொழில் பன்முகப்படுத்தல் வினைத்திறனையும் அத்துடன் ஏனைய நிதியிடல் நன்மைகளையும் அடைந்துகொள்ளும் எதிர்பார்க்கையுடன் உபாய ரீதியான தலையீடுகள் மேற்கொள்ளப் படும். ஆகையினால், பின்னோக்கிய, முன்னோக்கிய அல்லது கிடையான ஒருங்கிணைப்பின் வாயிலாக ஒரே தன்மையுள்ள வியாபாரங்களை ஒரு நோக்காக நிரைப்படுத்த முன்மொழிவு.

பாரிய ஏற்றுமதி வருவாய்களை கொண்டு வருகின்ற இரத்தினக்கல் தொடர்புபட்ட கைவினைஞர்களுக்கு சிறந்த தரத்திலான சேவைகளையும் வினைத்திறனையும் வழங்கும் பொருட்டு இரத்தினக்கல் மற்றும் ஆபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையுடன் ஒன்றிணைக்கப்படும். தொழில்துறை பங்குபற்றுநர்களின் நன்மைக்காக இரத்தினக்கல் விற்பனை நிலையம் (Gem Zone) ஒன்றினை உருவாக்குவதற்கான சாத்தியப்பாடுகளை அரசாங்கம் ஆராயும்.

### படுகடன் முகாமைத்துவம்

தெரிவுசெய்யப்பட்ட அரச தொழில் முயற்சி படுகடனை அரசாங்க ஐந்தொகைக்கு எடுத்துச் செல்லப்படும். தெரிவுசெய்யப்பட்ட அரசுக்கு சொந்தமான தொழில் முயற்சிகளின் ஐந்தொகைகளை வலுப்படுத்துவதன் பாகமாக, இலங்கை மின்சார சபை இலங்கை துறைமுக அதிகாரசபை மற்றும் வரையறுக்கப்பட்ட விமான நிலைய, விமான சேவைகள் (ஸ்ரீ லங்கா கம்பனி) என்பவற்றின் படுகடன்களாக முன்னர் வகைப்படுத்தப்பட்டிருந்த அரசாங்கத்திற்கான சீன எக்சிம் வங்கியிடமிருந்து கிடைத்த கடன்கள் 2022 டிசம்பர் இறுதியளவில் மத்திய அரசாங்க படுகடன்களாக இனங்காணப்படும். இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் உத்தரவாதம் அளிக்கப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி படுகடனும் 2022 டிசம்பர் இறுதியளவில் மத்திய அரசாங்கப் படுகடனாக இனங்காணப்படும்.

### நிதியியல் துறை - புதிய நிதியியல் சொத்து முகாமைத்துவ கம்பனிகள் சட்டம்


வங்கிகளும் நிதிக் கம்பனிகளும் அவற்றின் செயலிழந்த, பெறுமதியிழந்த சொத்துகளை வேறுபடுத்தி, சொல்லப்பட்ட சட்டத்தின் கீழ் நிறுவப்படுகின்ற சொத்து முகாமைத்துவ கம்பனியொன்றுக்கு கைமாற்றுவதற்கு அவற்றை இயலச் செய்வதற்கு நிதியியல் சொத்து முகாமைத்துவ கம்பனிகள் சட்டத்தின் கீழ் புதிய சட்டவாக்கத்தை அறிமுகப்படுத்துவதற்கு முன்மொழிவு. இது பாதிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து வராக்கடன்களின் விரைவான அகற்றலினை உருவாக்குவதன் மூலம் நிதியியல் நிறுவனங்களின் தீர்மானச் செயன்முறையினை சுமுகமாக்கும்.

### நுண்நிதி, கொடுகடன் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையைத் தாபித்தல்

முறைசாரா பணம் கடன் வழங்குநர்கள், இலங்கையில் உள்ள ஏதேனும் ஒழுங்குமுறைப் படுத்தல் அதிகாரசபையினால் ஒழுங்குமுறைப் படுத்தப்படுதோ அல்லது மேற்பார்வை செய்யப்படுவதோ அல்ல. ஆகையால், நிதி அமைச்சிடமிருந்தும் இலங்கை மத்திய வங்கிகளிலிருந்தும் பதவி வழி பிரதிநிதித்துவத்துடன் நுண்பாக நிதி மற்றும் கொடுகடன் ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரசபை ஒன்றைத் தாபிப்பதற்கு முன்மொழிவு. முன்மொழியப்பட்ட அதிகாரசபையானது முன்பாக நிதி வாடிக்கையாளர்களினதும் பணம் கடன் வழங்கல் தொழில்களினதும் பாதுகாப்பை உறுதி செய்கின்ற அதேவேளை ஒழுங்குமுறைப்படுத்தப்படும் நிறுவனங்களின் மூலம் இலங்கை கொடுகடன் தகவல் பணியகத்திற்கு அறிக்கையிடும் தேவைப் பாட்டை அவசியப்படுத்தும்.

### நீல மற்றும் பசுமை நிதியிடல் இடவசதி

சுற்றாடல் நட்புமிக்க பல சொத்துகளை கடந்த காலத்தில் நாடு உருவாக்கியுள்ளதுடன், வளர்ச்சியடைகின்ற நீல மற்றும் பசுமை நிதியிடல் வசதிக்கான பெறுவழிக்கு சட்ட ரீதியான பெறுமதியினை உருவாக்குவதற்கான வாய்ப்பைக் கொண்டுள்ளது. இலங்கை, பல எண்ணிக்கையான சர்வதேச உடன்படிக் கைகளில் கையொப்பமிட்ட நாடொன்றாக இருப்பதுடன், 30 அளவில் 30 என்ற முன்முயற்சியின் பாகம் ஒன்றாக இருப்பதற்கும் இணங்கியுள்ளது. இந்நோக்கில் நீல, பசுமை மற்றும் நிலைபேறான நிதியிடல் உள்ளடங்கலாக நிலைபேறான முதலீடுகளை கவருகின்ற அதேவேளை சர்வதேச நாணய நிதியத்துடனான அதன் நிகழ்ச்சித்திட்டத்தின் மீது நாடு முன்னேறுவதற்கும் வழியமைக்கின்ற கடல் இடம்சார்



திட்டம் மீதான பணியைத் தொடங்குவதற்கு பிரத்தியேகமான பொருளாதார வலயங்களை இனங்கண்டு பிரகடனப்படுத்துவதற்கும் முன்மொழிவு.

### நலன்புரி அனுகூலங்கள் கொள்கை

நலன்புரி பயன்பெறுநர் விண்ணப்பங்கள் செயன்முறைப்படுத்தப்பட்டு தரவு முறைமைகள் செயன்முறைப்படுத்தப்பட்டு வருகின்றன. அடுத்த கட்டமாக அனுகூலங்களைப் பெற்றுக்கொள்வதற்கும் சட்டத்திற்கமைவாக அதனுடன் தொடர்புடைய பிரகடனத்தினைப் பெற்றுக்கொள்வதற்கும் அவர்களது தகைமையினைச் சரிபார்ப்பதற்கு ஏற்கனவே பதிவுசெய்துள்ள விண்ணப்பதாரிகளின் இல்லங்களுக்குச் செல்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கமைய, புதிய தகைமைப் பிரமாணத்தைப் பயன்படுத்தி பயன்பெறுநர்களைத் தெரிவுசெய்யும் செயன்முறை 2023 ஜனவரியில் தொடங்கும் என்பதுடன், தகைமையுடையோர் அட்டவணை வெளியிடப்படும். 2002 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க நலன்புரி அனுகூலச் சட்டத்திற்கமைவாக அனைத்து நலன்புரி அனுகூலங்கள் கொடுப்பனவுத் திட்டங்களும் அச்சமூகப் பதிவக முறைமையின் அடிப்படையில் தயாரிக்கப்படும்.

நலன்புரி அனுகூலச் சபையானது அனைத்து நலன்புரி அனுகூலங்களையும் கொடுப்பனவுகளையும் ஒருங்கிணைக்கும். அதன் கீழ் கட்டமைக்கப்படும் இச்சமூகப் பதிவகத்தின் கீழ் அனுகூலங்களின் இலத்திரனியல் கொடுப்பனவுகளும் அனைத்து நலன்புரி அனுகூலக் கொடுப்பனவுத்திட்டங்களும் தகைமையுடைய பயன்பெறுநர்களின் வங்கிக் கணக்குகளுக்கு வசதிப்படுத்தப்படுகின்றது. புதிய நலன்புரி அனுகூல கொடுப்பனவு திட்டங்களின் கீழான கொடுப்பனவு 2023 ஏப்ரல் அளவில் தொடங்குமென எதிர்பார்க்கப் படுகின்றது. அதுவரை ஏற்கனவே காணப்படுகின்ற நலன்புரி அனுகூலத்திட்டங்கள் பேணப்படும்.

### சமுர்த்தி, முதியோர், அங்கவீனர் மற்றும் சிறுநீரக நோயாளர் உதவி வழங்கப்படுகின்ற பயனாளிகளின் கொடுப்பனவுகளை மேலும் அதிகரித்தல்

தற்போது தொழிற்படுகின்ற சமூர்த்தி, முதியோர், அங்கவீனர் மற்றும் சிறுநீரக நோயாளர் உதவியை எதிர்பார்த்து குறிப்பிடத்தக்க அளவினர் காத்திருப்பு பட்டியல்களில் தங்கியுள்ளனர். அவர்கள் உண்மையில் நிவாரணம் பெற வேண்டியவர்களாக இருக்கின்ற படியினால், அவர்களுக்கும் கொடுப்பனவுகள் கிடைக்கக்கூடியவாறு வரவு-செலவு திட்டத்தின் மூலம் ஏற்பாடுகளை ஒதுக்குமாறு திறைசேரிக்கு ஆலோசனை வழங்கப்படுகின்றது. அதற்கு அமைவாக இது வரை சமூர்த்தி, முதியோர், அங்கவீனர் மற்றும் சிறுநீரக நோயாளர் உதவியை பெறும் எதிர்பார்ப்புடன் நீண்ட காலமாக காத்திருப்பு பட்டியலில் இருக்கின்ற அத்தியாவசியமாக பயன்களை பெறவேண்டியவர்களுக்கு அந்த நன்மைகளை 2023 ஆம் ஆண்டு முழுவதும் வழங்குவதற்கு தேவையான ஏற்பாடுகள் ஏற்கனவே வரவு-செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

தற்போதைய பொருளாதார நெருக்கடியின் காரணமாக ஆபத்திற்கு உள்ளாக கூடிய மக்கள் முகங்கொடுக்கின்ற சிரமங்களை குறைப்பதற்கு அரசாங்கம் அதிக கவனத்தை செலுத்தியுள்ளது. அதன் கீழ் ஏற்கனவே சமூர்த்தி, முதியோர், அங்கவீனர் மற்றும் சிறுநீரக நோயாளர் உதவி வழங்கப்படுகின்ற பயனாளிகளுக்கும் பொருளாதார தாக்கத்திற்கு உள்ளாகியுள்ள 726,000 குடும்பங்களை சேர்ந்த 30 இலட்சத்துக்கும் மேற்பட்ட நபர்களுக்கு 2022ஆம் ஆண்டுக்கான திருத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தின் மூலம் இதுவரை வழங்கப்பட்ட கொடுப்பனவை அதிகரித்து வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அவ்வாறு அதிகரிக்கப்பட்ட நிவாரணத்தை மேலும் நான்கு மாதங்களுக்கு அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது. இவை அனைத்திற்கும் தற்போது வரவு-செலவு மதிப்பீட்டின் மூலம் செய்யப்பட்டுள்ள ஏற்பாட்டிற்கு மேலதிகமாக மேலும் ரூபா 43 பில்லியன் மேலதிக நிதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

### முதியோர் / மாற்றுத் திறனாளிகள் / விதவைகள் / வீட்டலகு தொழில் முயற்சியாளர்களை வலுப்படுத்தல்

முதியோர்/மாற்றுத்திறனாளிகள்/குறைந்த வருமானம் பெறுவோர்/ விதவைகள், பொருளாதார ரீதியாக அதிக கவனம்செலுத்தப்படுகின்ற வகுப்பினராவர். அவர்களது திறன்கள் மற்றும் ஊழியம் என்பவற்றைப் பயன்படுத்துவதன் வாயிலாக இச்சமூகத்தை பொருளாதார ரீதியாக வலுவூட்டுவதற்கு சாத்தியம் காணப்படுவதுடன், இதனூடாக தேசிய பொருளாதார அபிவிருத்திக்கு அவர்களது பங்களிப்பைப் பெற்றுக்கொள்ளலாம். இந்நோக்கில், மகளிர் விவகார அமைச்சு மற்றும் கைத்தொழில் அமைச்சு மூலம் ஒவ்வொன்றுமிணைந்த ஒத்துழைப்பு வாயிலாக நிகழ்ச்சித்திட்டமொன்று ஏற்பாடுசெய்யப்பட வேண்டுமென முன்மொழிவு. இது தொடர்பில், 2023 ஆம் ஆண்டுக்காக ரூபா 250 மில்லியன் ஒதுக்கீடுசெய்வதற்கு நான் முன்மொழிகின்றேன். மேலும், சந்தையில் அவ்வாறான உற்பத்திகளை ஊக்குவித்து விளம்பரப்படுத்துவதற்கு அரசாங்க – தனியார் பங்குடமையின் கீழ் தனியார் துறையின் பங்களிப்பினைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

### சிறுவர் போசாக்கை மேம்படுத்தல்

தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் 5 வயதுக்குக் குறைந்த பிள்ளைகளின் அதிகூடிய மந்தபோசனை நிலைமை அதிகரிப்பினை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. அதன் விளைவாக ஏற்படக்கூடிய சுகாதார பிரச்சினைகளை குறைப்பதற்காக தற்போது செயற்படுத்தப்படுகின்ற மேலதிக ஊட்டச்சத்து நிகழ்ச்சி திட்டங்களை மேலும் வலுவூட்டுவதற்கு ரூபா 500 மில்லியனை வழங்குவதற்கு முன்மொழிவு.

### விவசாயம் - தெங்குப் பயிர்ச் செய்கையை விரிவுபடுத்தல்

வருடாந்தம் தெங்கு உற்பத்தியின் மீது கடுமையாக தாக்கம் செலுத்தியுள்ள பல செழிப்பான தென்னங்காணிகளை துண்டாக்கம் செய்வதன் விளைவாக 4 ஹெக்டேயருக்கு குறைவான தென்னங்காணிகளை துண்டாக்குவதற்கு தற்போதைய சட்ட ஏற்பாடுகள் அனுமதியளிக்கிறது. எனவே தற்போதிருக்கும் சட்ட ஏற்பாடுகளை திருத்துவதற்கும் ஒரு ஏக்கருக்கும் குறைவான விஸ்தீரணத்தைக் கொண்ட தென்னங்காணிகளை துண்டாடுவதை வரையறுப்பதற்கும் முன்மொழிவு.

### பத்து விவசாய தொழில் முயற்சியாண்மை கிராமங்களை நிறுவுதல்

விவசாயத் தொழிலில் ஈடுபட்டுள்ள விவசாயிகளை விவசாய தொழில்முயற்சியாளர்களாக மாறுதலடையச் செய்வதற்கும் அதனூடாக தொழில் வாய்ப்புகளை உருவாக்குவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது. இந்நோக்கத்திற்காக, நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதுடன், கூடிய ஏற்றுமதியை நோக்காகக் கொண்ட உற்பத்திகளை ஊக்குவிக்கும் பொருட்டு, 10 விவசாய தொழில்முயற்சியாண்மைக் கிராமங்களை நிறுவுவதற்கு முன்மொழிவு. இந்நோக்கத்திற்காக ரூபா 250 மில்லியன் ஒதுக்கீடுசெய்வதற்கு முன்மொழிவு.

### தைலோக விஜேபத்ர பயிரை ஏற்றுமதிக்காக மாத்திரம் உற்பத்தி

தைலோக விஜேபத்ர பயிரை ஏற்றுமதிக்காக மாத்திரம் உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்வதற்கான ஆற்றல்களை தேடிப்பார்த்தல் வேண்டுமென முன்மொழிவு. இதற்காக நிபுணத்துவ குழுவொன்றினை நியமிப்பதற்கு முன்மொழிவு.

### அறுவடைக்குப் பிந்திய இழப்புகளைக் குறைத்தலும் களஞ்சியப்படுத்தலை மேம்படுத்தலும்

வேளாண்மை உற்பத்தியினை அதிகரிப்பதற்கு நாம் கடுமையாக உழைத்தாலும்கூட, முறையற்ற களஞ்சியப்படுத்தல் மற்றும் போக்குவரத்து பிரச்சினைகள் போன்ற பல பிரச்சினைகளின் காரணமாக எமது உற்பத்தியில் 30 சதவீதத்திற்கு மேற்பட்டவை இழக்கப்படுகின்றன. ஆகையினால், அத்தகைய அறுவடைக்குப் பிந்திய சேதங்களை குறைப்பதற்கு தேவையான அறிவு, தொழில் நுட்பம் மற்றும் பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகள் போன்றவற்றை விருத்திசெய்வதற்கு அடுத்த ஆண்டின் வரவு -செலவுத் திட்டத்திலிருந்து ரூபா 150 மில்லியன் ஒதுக்கீடுசெய்வதற்கு முன்மொழிவு.

### நீர்ப்பாசனம் வெள்ளப்பாதுகாப்பு முறைமையை மேம்படுத்தல்

மா ஓயா, அத்தனகலு ஓயா மற்றும் பெந்தர கங்கையினை அடிப்படையாகக் கொண்ட நீர்ப்பாசன அமைப்புகளுக்கு 500 மில்லியன் வழங்குவதற்கு முன்மொழிவு.

### பால்பொருட்துறை திரவப் பால் உற்பத்தியை அதிகரித்தல்

குண்டசாலை செயற்கை சினைப்படுத்தும் நிலையத்தினை விருத்திசெய்து புதிய தொழில்நுட்பங்களை பின்பற்றுவதன் வாயிலாக திரவப் பால் உற்பத்தியினை அதிகரிப்பதற்கு முன்மொழிவு. இந்நோக்கத்திற்காக 2023 இல் ரூபா 100 மில்லியன் வழங்குவதற்கு முன்மொழிவு.

### சுற்றாடல் - காலநிலை மாற்றங்கள் தொடர்பில் சர்வதேச பல்கலைக்கழகம்

அண்மைக் காலங்களில் நிலவுகின்ற காலநிலை மாற்றங்களின் காரணமாக உயிர் மற்றும் சொத்துகளுக்கு ஏற்பட்டுள்ள அனர்த்தங்களை கருத்தில் கொள்கின்றபோது, அது தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்வது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த பணி என்பதனை எமது அரசாங்கம் இனங்கண்டுள்ளது. இதன் அடிப்படையில் பூகோள மற்றும் பிராந்திய தேவையொன்று வகையில் காலநிலை மாற்றங்கள் தொடர்பான ஆய்வுகள், பயிற்சி, அறிவுப் பரிமாற்றல் மற்றும் காலநிலை ஆபத்துகளை குறைப்பதற்கான ஏற்பாடுகள் போன்ற நடவடிக்கைகளுக்காக சர்வதேச உதவியைப் பெற்று பல்கலைக் கழகமொன்றினை உருவாக்குவதற்கு முன்மொழிவு. இதற்கான ஆரம்ப நடவடிக்கைகளுக்காக ரூபா 100 மில்லியனை ஒதுக்கீடு.

### அபிவிருத்திக்கான பசுமை ஹைட்ரஜன் (Green Hydrogen) தொழில்நுட்பம்

உலகில் உயிர்ச்சுவட்டு எரிபொருள் பாவனையின் காரணமாக சூழலுக்கு பாதிப்பினை ஏற்படுத்தும் வலுசக்தி வகை என்ற வகையில் மீள்புதுப்பிக்கக் கூடிய வலுசக்தியினை பயன்படுத்துவது தொடர்பில் கூடிய கவனத்தை செலுத்த வேண்டியுள்ளது. அதேவேளை, பசுமை ஹைட்ரஜனை வலுசக்தி மூலமாக பயன்படுத்துவது தொடர்பில் பெரும்பாலான நாடுகள் பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டுள்ளன. அதே போன்று இந்த வலுசக்தியினைப் பயன்படுத்தி உரம் தயாரிப்பதற்கு முடியுமென்பதும் மற்றுமொரு சாதகமாகும். இலங்கையில் காலநிலை மற்றும் வானிலை நிலைமைகளுக்குள் பசுமை ஹைட்ரஜன் உற்பத்திக்காக (சூரிய சக்தி அல்லது காற்று என்பவற்றுடன் நீரினைப் பயன்படுத்தி) மிகவும் சிறந்த சூழல் காணப்படுவதால் பசுமை ஹைட்ரஜனை வர்த்தக நோக்கத்தில் தயாரிப்பது தொடர்பிலான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு அரசாங்க மற்றும் தனியார்துறையின் ஒத்துழைப்புடன் ஒன்றிணைந்த கருத்திட்டமொன்றினை ஆரம்பிப்பதற்கு முன்மொழிவு. அதற்காக புத்தளத்திலிருந்து மன்னார் வரையிலான கடற்கரைப் பிரதேசத்தினை பொருத்தமானதாக பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

### வனப்பரம்பலினை அதிகரிப்பதற்கான சமுதாயப் பங்களிப்பு

பூகோள வெப்பமாதல் அதிகரித்துச் செல்லும் போக்குடன் வனப் பரம்பலினை அதிகரிப்பதற்கான முக்கியத்துவமும் உணரப்பட்டுள்ளது. இந்த வகையில் தற்பொழுது அழிவடைந்து காணப்படுகின்ற வனப் பிரதேசத்தில் 50,000 ஏக்கர் பரப்பளவினை 2027 ஆகும் போது மீண்டும் உருவாக்குகின்ற திட்டம் தொடர்பான செயற்பாடுகளை துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

இதற்கு மேலதிகமாக வனப் பகுதிகளுக்குப் புறம்பாக புற்றரைகளை அதிகரிப்பதற்கு பொது இடங்கள், குளக்கட்டுகள், நீரேந்து பிரதேசங்களை தெரிவுசெய்து பொருத்தமான வேலைத் திட்டங்களை செயற்படுத்துதல் வேண்டும். இதற்காக ரூபா 50 மில்லியன் ஒதுக்கீடு.

### ஆராய்ச்சி மற்றும் ஆய்வுகூட வசதிகள் - மதுவரித் திணைக்களத்தின் கீழ் புதிய ஆய்வுகூடத்தை நிறுவுதல்

மதுசார உற்பத்தியின் தரத்தை பரிசோதித்தல் மற்றும் தர நியமத்தை தயாரிப்பதற்கான நிறுவனமொன்று காணப்படாமையினால், மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற மதுசார தயாரிப்பினை அடையாளம் காணல் மற்றும் அது தொடர்பில் சட்ட ரீதியான நடவடிக்கை எடுத்தல் என்பன சிரமமாக மாறியுள்ளன. அதற்கமைய, மதுசார உற்பத்திகளுடன் தொடர்பான ஆராய்ச்சி செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக மதுவரித் திணைக்களத்தின் கீழ் ஆய்வுகூடமொன்றைத் தாபிப்பதற்கு முன்மொழிவு. இதன்படி, ஆய்வுக்கூடத்தை நிறுவுவதற்காக ரூபா 100 மில்லியனை ஒதுக்கீடு.

### போக்குவரத்து வீதிப் பராமரிப்பு நிதியமொன்றை நிறுவுதல்

வாகன வருமான அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளும்போது வாகனமொன்றுக்கு ரூபா 100 இற்கு குறையாத வருடாந்தக் கட்டணத்தை அறவிடுவதன் மூலம் வீதிப் பராமரிப்பு நிதியத்தை தாபிப்பதற்கு முன்மொழிவு. அனைத்து வகையான வீதிகளையும் ஆண்டுதோறும் பராமரிப்பதற்காக இந்நிதி வழங்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இந்நிதியத்தினை உருவாக்குவதற்கு ரூபா 100 மில்லியன் கொண்ட தொகை 2023 வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடுசெய்வதற்கு முன்மொழிவு.

### பாதைகள் மற்றும் பாலங்கள் புனரமைப்பு மற்றும் வேலைகளை நிறைவுசெய்தல்

வெள்ளத்தின் காரணமாக சேதத்திற்குள்ளான பாதைகளின் காரணமாக மக்கள் முகங் கொடுக்கின்ற சிரமங்களை குறைப்பதற்காக வீதிகளை புனரமைப்பு செய்வதற்கு 2023 ஆம் ஆண்டுக்காக ரூபா 2,000 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு முன்மொழிவு. களனி கங்கைக்கு குறுக்காக கறாகொட பாலத்தைப் பழுது பார்ப்பதற்கும் பதுளை ரஜ மாவத்தையில் எஞ்சியுள்ள வேலைகளை நிறைவு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். காலி மாவட்டச் செயலகத்தில் நிறைவடையாமல் இருக்கின்ற வேலைகளை நிறைவு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

### சூரிய மின்சக்தி / மின்சாரக் கார்கள் உற்பத்திக்கான வசதிகள்

மீள்புதிப்பிக்கத்தக்க சக்தியை உபயோகித்து மின்சார உற்பத்தியை ஊக்குவிக்கும் பொருட்டு, அதனுடன் தொடர்புடைய அதற்குரிய சூரிய பலகங்களை உள்நாட்டில் தயாரிப்பதை ஊக்குவிப்பதற்காக, சூரிய மின் சக்தியினை உற்பத்தி செய்வதற்கான பலகம் (solar panels) ஒன்றிணைக்கப்பட்டு வகைப்படுத்தல் குறியீடு 8541.10 மற்றும் ஒன்றிணைந்து மின்நிலை மாற்றல் (Invertor) குறியீட்டு இலக்கம் 8504.40 இறக்குமதி செய்கின்ற போது தற்போது விதிக்கப்படுகின்ற துறைமுகங்கள் மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீடு மற்றும் சமூகப் பாதுகாப்பு பொறுப்பு வரி என்பவற்றை 2023.01.01 தொடக்கம் நடை முறைக்கு வரும் வரையில் அதனை அகற்றுவதற்கு முன்மொழிவு.

மேலும், மின்சார மோட்டார் கார்களை ஒன்றிணைப்பதற்கும் தேசிய அளவில் பயன்பாட்டை பிரபல்யப்படுத்தலிடுவதற்கும் தேவையான ஊக்குவிப்புகள் மேற்கொள்ளப் படும். அதற்கமைய மோட்டார்வாகனங்கள் ஒன்றிணைக்கும் நிறுவனங்கள் மூலம் குறைந்த பட்சம் 25 சதவீதம் உள்நாட்டுப் பெறுமதி சேர்த்தலை மேற்கொள்கின்ற அவற்றுக்கு தேவையான உதிரிப்பாகங்கள் மத்தியில் சமூகப் பொறுப்பு வரியை அகற்றுவதற்கு நடவடிக்கை.

இதில் தேசிய மின்சார பாகங்களை உற்பத்திக் கைத்தொழிலினை மேம்படுத்துவதற்காக உள்நாட்டு பெறுமதி சேர்த்தலுக்கான உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் வாகன பாகங்கள் பயன்படுத்தப்படுகின்றவை என்பதை சான்றுப்படுத்தலுக்கு அனைத்து மின்சார மோட்டார்களை உற்பத்தி செய்கின்ற பதிவு செய்கின்ற தயாரிப்பாளர்கள் மற்றும் அனுமதிக்கப்பட்ட மின்சார மோட்டார் வாகனங்களை ஒன்றிணைக்கின்ற உள்நாட்டு நிறுவனங்கள் என்பவற்றை ஒருங்கிணைப்பதற்காக கைத்தொழில் அமைச்சில் தகவல் மற்றும் தொடர்பாடல் முறைமையொன்றினை நிறுவுவதற்கு முன்மொழிவு.

(தொடர்ச்சி 12 ஆம் பக்கம்...)



((தொடர்ச்சி 11 ஆம் பக்கம்...)

முன்மொழியப்பட்ட தகவல் முறைமையின் கீழ் தீர்வை சலுகைக்காக அனைத்து மின்சார மோட்டார் வாகனங்கள் உள்நாட்டில் பெற்றுக்கொள்ளப்படும் பாகங்களின் பெறுமதி மற்றும் ஒன்றிணைக்கப்பட்ட வாகனங்கள் மீதான உள்நாட்டு பெறுமதி சேர்த்தல் சதவீதத்தை தானியக்கமாக சான்றுப்படுத்தல் முறைமை தயாரிக்கப்பட வேண்டும். இக்கணினி தகவல் பரிமாற்றம் செயன்முறையானது கைத் தொழில் அமைச்சினால் விருத்தி செய்யப் பட்டு நிவர்த்தி செய்யப்படவேண்டும்.

**சமயத் தலங்களுக்கான சூரிய சக்தி பெனல்கள்**

வெளிநாட்டு மூலங்கள் மற்றும் அரசாங்கத் தின் உதவியைக் கொண்டு சமயத் தலங்களுக்கான சூரிய சக்தி பெனல்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**இளைஞர் ஈடுபாட்டை ஊக்குவித்தல் – விவசாயத் தொழில்துறையில் இளையோரைத் தக்கவைத்தல்**

நாட்டின் உணவுப் பாதுகாப்பை உறுதிசெய்வதில் விவசாய தொழில்துறையில் இளம் சமுதாயத்தை தக்கவைப்பது அதீத முக்கியத்துவம் மிக்கதாகும். அதற்காக தற்காலத்திற்கு பொருந்துகின்ற விதத்தில் விவசாயமும் நவீனமயப்படுத்தப்பட வேண்டும். இந்நோக்கத்திற்காக தீவின் ஒவ்வொரு மாவட்டத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தி தற்போது தொழிலற்ற 240 இளையோரை தெரிவுசெய்வதற்கும் விவசாய தொழில் முயற்சியாளர்களாக அவர்களை



வலுவூட்டுவதற்கும் முன்மொழிவு. இந்நோக்கத்திற்காக ரூபா 120 மில்லியன் ஒதுக்கீடு.

**இளம்பெண் தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்க சலுகைக் கடன் திட்டம்**

இளம் பெண் தொழில் முயற்சியாளர்களுக்கு அதிக பட்சமாக ரூபா 250,000 தொகையைப் பெற்றுக்கொள்ளக் கூடிய அதே வேளையில் இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் ஆரம்பகட்டத்தில் குறைந்தபட்சம் 2,000 இளம்பெண் தொழில் முயற்சியாளர்களை வலுவூட்டுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த நிகழ்ச்சித் திட்டத்தை சகல மாவட்டங்களையும் உள்ளடக்கக் கூடிய விதமாக பிரதேச அபிவிருத்தி வங்கியின் ஊடாக நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற அதேவேளையில் அதன் முதல் கட்டமாக ரூபா 500 மில்லியன் ஏற்பாடு செய்யப்படும்.

**வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக இளைஞர்களை பயிற்றுவித்தல்**

66.1 வெளிநாட்டு வேலை வாய்ப்புக்காக இளைஞர்களை பயிற்றுவிப்பதற்கு தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்திற்கு 2023 ஆம் ஆண்டில் ரூபா 50 மில்லியன்களை ஒதுக்குவதற்கு முன்மொழிவு.

**சுகாதார மற்றும் துப்புரவு ஏற்பாட்டு வசதிகள் – குடிநீர் போத்தல் பாதுகாப்பு முத்திரைகளை (Sticker) அறிமுகப்படுத்தல்**

குடிநீர் போத்தல்களைப் பயன்படுத்துவது சடுதியாக அதிகரித்தால் சுகாதாரப் பாதுகாப்புடன் நுகர்வோருக்கு பெற்றுக் கொடுப்பதற்கு பாதுகாப்பு வழிமுறையொன்று பின்பற்றப்படுதல் வேண்டும். அதற்கமைய குடிநீர் போத்தல்கள் தயாரிக்கப்படும் சந்தர்ப்பங்களிலேயே அதற்காக பாதுகாப்பு முத்திரையினை (Sticker) ஒட்டுவதை இயலச் செய்யும் வகையில் தேவையான வழிமுறையினை அறிமுகப்படுத்தல் மற்றும் பின்னூட்டல் நடவடிக்கை எடுத்தல் என்பன சுகாதார அமைச்சினால் மேற்கொள்ளப்பட வேண்டும்.

**சிறைக்கைதிகளுக்கான துப்புரவு ஏற்பாடு**

தற்போது சிறைச்சாலைத் திணைக்களத்தின் கீழ் வருகின்ற சிறைச்சாலைகளில் துப்பரவேற்பாட்டு வசதிகள் போதுமான அளவு இல்லை என்பதால் அத்தகைய வசதிகளை மேம்படுத்துவதற்கு போதுமான வசதிகளை புதிதாக உருவாக்க வேண்டிய தேவை காணப்படுகின்றது. அதற்காக ரூபா 300 மில்லியன் ஒதுக்கீடு. இப்பணியினை முன்னுரிமைப் பணியொன்றாக கொண்டு சிறைச்சாலைகள் திணைக்களம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

**வைத்தியசாலைகளை தரமுயர்த்தல்**

பதுளை, குருநாகல் மற்றும் பொலன்னறுவை ஆகிய வைத்தியசாலைகளை போதனா வைத்தியசாலைகளாக தரமுயர்த்துவதற்கு முன்மொழிவு.

**அரசாங்க வைத்தியசாலைகளில் கட்டணம் செலுத்தும் விடுதி வசதி**

அரசாங்க வைத்தியசாலைகளில் கட்டணம் செலுத்துகின்ற விடுதிகள் முறைமையினை மீள நடைமுறைப்படுத்துவதற்கு முன்மொழிவு. முதல் கட்டமாக இம்முறைமை தேசிய மற்றும் தள வைத்தியசாலைகளில் தாபிக்கப்படும்.

**வரவு-செலவுத்திட்ட முன்மொழிவுகளை கண்காணித்தல் – வரவு-செலவுத்திட்ட முன்மொழிவுகளை கண்காணிப்பதற்கான ஜனாதிபதி செயலணி**

சகல வரவு-செலவுத்திட்ட முன்மொழிவுகளையும் துரிதமாக செயற்படுத்தி எதிர்பார்க்கின்ற நன்மையினை அடைந்து கொள்வதற்கு பதிலாக கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஜனாதிபதி செயலணி ஒன்றினை நிறுவுவதற்கு முன்மொழிவு.

**ஜனாதிபதி ரணிலின் முடிவுரை**

இவ்வரவு-செலவுத்திட்ட முன்மொழிவுகள் மீது நாட்டின் சாதகமான வேறுபாட்டினை உருவாக்குகின்ற பயணத்தில் கைகோர்க்குமாறும், உறுதுணையை அளிக்குமாறும் நான் உங்கள் அனைவரிடமும் வேண்டுகோள் விடுக்கின்றேன். நாம் இம்முன்மொழிவுகளை பின்னணியாக்கி கொண்டு, புதிய பொருளாதார அடிப்படை ஒன்றினை தயார்படுத்துவோம். அதற்கென தேசிய பொருளாதார கொள்கை கட்டமைப்பை உருவாக்கிக் கொள்வோம். அடுத்து வரும் 25 ஆண்டுகள் முழுவதும் அக்கொள்கைக் கட்டமைப்பை நடைமுறைபடுத்துவோம்.

ஒவ்வொரு 5 வருடத்துக்கும் ஒருமுறை எமக்கு இந்த கொள்கையை மீளாய்வு செய்ய முடியும். எமது இலக்கை நோக்கி பயணிக்கின்ற பயணத்தை வெற்றிகொள்ள கூடிய கொள்கைகளை அவ்வாறான மீளாய்வு ஒன்றினூடாக மேலும் மேம்படுத்திக் கொள்வதற்கு வாய்ப்பு கிடைக்கின்றது.

இந்தப் பயணத்திற்கு பங்களிப்பு வழங்குவதற்கு தேவையான பின்னணியை இப்போது நான் இந்த நாடாளுமன்றத்திற்கு வழங்கியுள்ளேன். ஒரு பக்கத்தில் நாடாளுமன்றத்தின் துறைசார் செயற்குழுக்கள், மறுபக்கத்தில் நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப் படுத்தும் என்ற மக்கள் சபை, அதற்கு மேலதிகமாக அரச நிதி மற்றும் அரச நிதி சேவை பற்றிய செயற்குழுக்கள் பலவற்றை நாம் முன்மொழிந்துள்ளோம். நான் அண்மையில் சபாநாயகரின் கவனத்தை ஈர்த்தது போன்று, இந்த செயற்குழு இதுவரையிலும் இந்த நாடாளுமன்றத்தில் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை.

விசேடமாக நான் சமர்ப்பித்துள்ள வரவு -செலவுத்திட்ட முன்மொழிவு அரச உத்தியோகத்தர்களின் மூலம் அரச பொறிமுறைகளினூடாக நடைமுறைப்படுத்தும்போது துறைசார் செயற்குழுக்களுக்கு பாரியளவு வேலைகளை நிறைவேற்ற முடியும். அரசாங்க செலவினத்தை குறைத்துக்கொள்ளும் முயற்சிக்கும் நிதி பற்றிய செயற்குழுக்களுக்கு பயன்மிக்க விதத்தில் தலையீடு செய்யவும் முடியும்.

அதனால், அந்த சகல செயற்குழுக்களையும் துரிதமாக நடைமுறைப்படுத்துமாறு நான் இந்த நாடாளுமன்றத்தில் கோரிக்கை விடுக்கின்றேன். அப்போது புதிய பயணத்திற்கு, புதிய தோற்றத்தின் முயற்சிக்கான சந்தர்ப்பத்தை எமக்கு உருவாக்கிக் கொள்ள முடியும்.

அந்த சந்தர்ப்பத்திலிருந்து அதிகபட்ச பயனைப்பெற்று நாம் எமது உண்மையான தேசிய வளங்களுக்கு, எமது இளைஞர் பரம்பரைக்கு சிறந்த எதிர்காலமொன்றை உருவாக்கிக்கொடுப்பதற்கு முயற்சிப்போம்.

அதற்கமைவாக புதிய பொருளாதார அடிப்படையினூடாக நாட்டை மீண்டும் உயர்த்தி வைக்கும் முயற்சிக்கு செயல் வடிவிலான மற்றும் செயல் ரீதியான பங்களிப்பை வழங்குமாறு நான் உங்கள் அனைவரிடமும் கேட்டுக்கொள்கிறேன்.





**பின்னிணைப்பு I**

## வரவுசெலவுத் திட்ட பொழிப்பு 2023

ரூ.பில்.

| வகை | 2021 | 2022 திருத்தப்பட்ட மதிப்பீடு (இடைக்கால வ.செ. திட்டம்) | 2023 வ.செ.திட்டம் |
|---|---|---|---|
| **மொத்த வருவாயும் மானியங்களும்** | **1,464** | **2,094** | **3,415** |
| **மொத்த வருவாய்** | **1,457** | **2,084** | **3,408** |
| **வரி வருவாய்** | **1,298** | **1,852** | **3,130** |
| வருமான வரி | 302 | 558 | 912 |
| பண்டங்கள் மற்றும் சேவைகள் மீதான வரி சேவைகள் | 646 | 972 | 1,763 |
| வெளிநாட்டு வர்த்தகம் மீதான வரிகள் | 350 | 322 | 455 |
| **வரியல்லா வருவாய்** | **159** | **232** | **278** |
| **மானியங்கள்** | **7** | **10** | **7** |
| **மொத்தச் செலவினம்** | **3,522** | **4,427** | **5,819** |
| **மீண்டெழும்** | **2,748** | **3,620** | **4,609** |
| சம்பளங்களும் வேதனாதிகளும் | 846 | 995 | 1,002 |
| ஏனைய பொருட்கள் மற்றும் சேவைகள் | 169 | 225 | 300 |
| வட்டி | 1,048 | 1,379 | 2,193 |
| உதவுதொகைகள் மற்றும் மாற்றல்கள் | 685 | 1,021 | 1,114 |
| **அரசாங்க முதலீடு** | **790** | **1,072** | **1,220** |
| **ஏனையவை** | **(15)** | **(265)** | **(10)** |
| **வருவாய் மிகை (+)/ பற்றாக்குறை(-)** | **(1,290)** | **(1,536)** | **(1,201)** |
| **ஆரம்ப மிகை (+)/ பற்றாக்குறை (-)** | **(1,010)** | **(954)** | **(211)** |
| **வரவுசெலவு திட்ட மிகை (+)/ பற்றாக்குறை(-)** | **(2,058)** | **(2,333)** | **(2,404)** |
| **மொத்த நிதியிடல்** | **2,058** | **2,333** | **2,404** |
| **மொத்த வெளி நாட்டு நிதியிடல்** | **(14)** | **342** | **560** |
| வெளிநாட்டு கடன்பெறுதல்கள்-மொத்தம் | 517 | 717 | 1,000 |
| படுகடன் மீள்பொடுப்பனவு | (531) | (375) | (440) |
| **மொத்த உள்நாட்டு நிதியிடல்** | **2,072** | **1,991** | **1,844** |
| வங்கியல்லா கடன் பெறுதல்கள் | 1,898 | 2,672 | 1,880 |
| இலங்கை அபிவிருத்தி முறி | (68) | (357) | (234) |
| வங்கிக் கடன்பெறுதல்கள் மற்றும் ஏனையவை | 242 | (323) | 198 |
| **வருவாய் மற்றும் மானியங்கள்/மொ.உ.உ. (%)** | **8.3** | **8.8** | **11.3** |
| **மொத்த வருவாய்/ மொ.உ.உ. (%)** | **8.2** | **8.7** | **11.3** |
| வரி வருவாய்/ மொ.உ.உ. (%) | 7.3 | 7.8 | 10.3 |
| **வரியல்லா வருவாய் / மொ.உ.உ.** (%) | 0.9 | 1.0 | 0.9 |
| **மானியங்கள்/ மொ.உ.உ. (%)** | **0.04** | **0.04** | **0.02** |
| **மொத்த செலவினம் / மொ.உ.உ. (%)** | **19.9** | **18.6** | **19.2** |
| மீண்டெழும் செலவினம் / மொ.உ.உ.(%) | 15.5 | 15.2 | 15.2 |
| வட்டியல்லாதவை/ மொ.உ.உ. (%) | 9.6 | 9.4 | 8.0 |
| வட்டி / மொ.உ.உ. (%) | 5.9 | 5.8 | 7.2 |
| அரசாங்க முதலீடு/ மொ.உ.உ. (%) | 4.5 | 4.5 | 4.0 |
| வருமான மிகை (+)/பற்றாக்குறை (-) மொ.உ.உ. (%) | (7.3) | (6.4) | (4.0) |
| ஆரம்ப மிகை (+)/ பற்றாக்குறை (-) மொ.உ.உ. (%) | (5.7) | (4.0) | (0.7) |
| **வரவுசெலவுத்திட்ட மிகை** (+)/பற்றாக்குறை (-) **மொ.உ.உ.** (%) | **(11.6)** | **(9.8)** | **(7.9)** |

*அரசிறைக் கொள்கைத் திணைக்களத்தினால் தொகுக்கப்பட்டது.*
*அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தற்போது காணப்படும் கடன் இருப்புக் கொள்கையின் அடிப்படையில் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கான படுகடன் மீள்கொடுப்பனவு மதிப்பீடு.*

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7